flex

# அருள்

பெப்ரவரி 2015 கடவுளை வணங்குவோம் அருளினை பெறுவோம் விலை ரூ.50

ஆன்மீகம் மணக்கும் மாத இதழ்

இதழ் 51






JEYECHANDRANS

முகூர்த்தப் பட்டுப்புடைவைகளுக்கு
ராசியான ஒரே இடம்

No. 433, Galle Road, Wellawatte, Colombo 06. | Tel: 011 4528438/5
Fax: 011 2362822
New Branch: 194, Main Street, Colombo 11. | Tel: 011 2448870
Fax: 011 2448860



Web: www.jeyechandrans.com | Skype: jeyechandrans 888





No. 62/16, Galle Road,
(Opposite Bank of Ceylon)
Wellawatte,
Colombo 06.

www.brintha.com

Mob : +94 776 331257.
Office: 011 2593693,
0112553028,


LAE
Little Asia
WELLAWATTE / PETTAH
"Little Asia for 6-yards of bridal splendour"
Dream Big | Think Big | Achieve Bi
73, Main Street, Colombo 11. | T: +94 11 2391592, 2391593 | F: +94 11 2391745 | E: info@littleasia.lk
www.littleasia.lk | Skype: little.asia.silk
317, 317A, Galle Road, Wellawatte, Colombo 06. | T: +94 11 250 4470, 250 0098 | F: +94 11 2508934
E: info@littleasia.lk | www.littleasia.lk | skype: little.asia.emporium
Follow us on


one R
shop Ranjanas
APPOLLO
CHINA
TAKE A LOOK
AND CREATE YOUR IDEAL
BATHROOM SUITE.
305A, George R De Silva Mawatha, Colombo 13.
( Next. Kotahena post office )
For infomation 011 2 543 255
SHOWROOM | NAWALA 011 2 817 474
• NEGOMBO 031 2 227 505 • JAFFNA 021 2 220 033
• HATTON 051 2 225 087 • KIRIBATHGODA 011 2 929 206
• KANDY 081 2 225 542
9am-6pm
Car park
Technical
Delivery
www.ranjanasceramic.lk | www.facebook.com/RanjanasCeramic


LITTLE FRIENDS:
BOYS & GIRLS
PARTY PICKS
•Shirt •T-Shirt •Short •Skirt •Jean
•Toys •Books •Education Items
7STORIES
Ranjanas
No.318, Galle Road, Colombo 4.
Hotline 011 2 590 070
facebook www.7stories.lk
Rs.
AMPLE PARKING
9AM-8.30PM
BEST SERVICE
BEST PRICE
SUPERMARKET
ATM AVAILABLE

# Visgha
ARTS AND CRAFTS

வியாபாரிகளுக்கு மகிழ்வூட்டும் ஓர்
இனிய செய்தி:

நீங்கள் இலங்கையின் எப்பாகங்களில் இருந்து வந்தாலும் எம்மிடம் கொள்வனவு செய்யும் பொருட்களுக்கு விஷேட கழிவும் விஷேட சலுகைகளும் வழங்கி என்றும் எமது வாடிக்கையாளர்களின் நம்பகத்தன்மைக்கு உண்மையாக நீடித்து உங்களோடு வியாபாரம் செய்ய முன்வந்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.





வல்லுனர்களால் வடிவமைக்கப்பட்ட ஜம்பொன் மற்றும் கருங்கற்சிலைகள், பூஜைக்குரிய பொருட்கள், மற்றும் உங்களது மங்கள வைபவங்களில் கலந்து கொள்பவர்களை மகிழ்விப்பதற்காக உங்களால் வழங்கப்படும் தாம்பூலப் பரிசுப் பொருட்களை புதியவைகளாகவும் நேர்த்தியானவைகளாகவும், பெற்றுக் கொள்ளக்கூடிய ஒரே ஸ்தாபனம்.








இல.166, செட்டியார் தெரு, கொழும்பு 11. தொ.பே. 233 6192, 244 5776 Hotline: 0772 774 776 (Rayen)

visgha.rayen@yahoo.com rayen.visgha www.visgha.net

ஆன்மீகம் மணக்கும் மாத இதழ்

# உள்ளடக்கம்




08-09
இந்து மத அர்த்தங்கள்





10-11
திருவாசகம் என்னும் தேன்





14-16
சாஸ்திரங்களும் சம்பிரதாயங்களும்





17-21
அற்புத ஆலயங்கள்



07 எமது நோக்கம்

12 ஔவையின் கொன்றை வேந்தன்

13 இந்து தர்ம சாஸ்திரம்

26 சனி பகவானின் தண்டனையில் இருந்து தப்பிக்க ஒரு சிறந்த பரிகாரம்

29 பக்ஷிராஜன்

28 வளமான வாழ்விற்கு ஃபெங் ஷுயி

30-31 ராசிகளின் சூட்சுமம்

38 பித்ருக்கள் பூஜை

47 திருமண பொருத்தம்

48-49 பகவான் ஸ்ரீ கிருஷ்ணரை ஏன் முழு முதற் கடவுளாகக் கொள்கிறீர்கள்

50 பெண்கள் செய்ய வேண்டியதும் செய்யக் கூடாததும்

53 தென்முகக் கடவுள்

54-55 வரங்கள் பல கொடுக்கும் ஸ்ரீ வரலக்ஷ்மி விரதம்

56-57 முருகனும் மயில் வாகனமும்

58 மனிதன் மனிதனாக வேண்டும்

59 மன்னா ஹாஹ்...ஹா!

60 கனவுகள் தரும் பலன்கள்

61-62 மனிதப் பிறப்பின் மகத்துவம்

66-68 பஞ்சாங்கம் / விரதங்கள்

69-72 ராசி பலன்கள்

73-77 பக்திக் கதைகள்





22
பாவ புண்ணியம்





24-25
சொர்க்கம் அருளும் மஹாசிவராத்திரி





32
பிரமாதம் பிரமாதம்





35-37
கவிச் சக்கரவர்த்தி கம்பர்


Annai
Home Decor
Curtain & Cushion Materials and
All type of Curtaining,
Cushioning and Tailoring Etc.
40-A, Galle Road, Wellawatte.
Tel : 0774 441 298, 075 7734548, 2 584726, 2 580668


Emmel
Collection
Dealers in:
Quality Textiles
&
Ready made
Garments
24 A, Galle Road, Wellawatte. Tel: 2595567


WORLD TEL COMMUNICATION
Net calls, postal works,
Stamps courier service to All country
document Fast service parcel
All photo copy, printout
No : 298, Galle Road, Wellawatte, Colombo 06.
Tel : 0112 504 233-7


Jayalalitha
Jewellery
No. 65, Sea Street,
Colombo 11.
Tel : 011 - 2422548,
011 - 5624178


V.M. MOHAN WATCH
& GIFT ITEMS
33/1, Plaza Complex, Galle Road, Wellawatte. Tel: 2 507 323


A/L 2017 COM. MATHS
இணைந்த கணிதம்-AL
English Medium Group Classes உம்
தமிழ் மொழிமூல வகுப்புகளும் சிறுகுழுக்களாக நடத்தப்படும்.
விபரங்களுக்கு தொடர்பு :
0776 630 793
Eng.S.Thuraiappah,BSC (Math Spl),Msc
(Ag.Eng),PGD(Statistics)
11 A, 2nd Chapel Lane, Wellawatta
Model Paper Book- FREE


UPCOUNTRY DTH
ENTERPRISES
Recharge & Activation
dishtv
videocon
airtel
SUN
TATA Sky
airtel
HUTCH
Dialog
PHOTO COPY, FAX, LAMINATION, BINDING,
STATIONARY, PRINTOUT, MOBILE & ACCESSORIES
No.198, Galle Road, Wellawatte, Colombo 06
www.upcountrydth.com / email: upcountrydth@gmail.com
Tel: 0752965690 / 0778202424


Geetha
Dress Makers
(Specialist in Indian
Master Cutting)
Saree Blouses & Shalwars
No. 7-1/14, Orchard Shopping Complex,
Galle Road, Wellawatte.
Tel: 011 2501024, 077 0577 420 / 077 9367 375

# எமது நோக்கம்

"இந்து மதத்தின் பல அரிய தகவல்களை அறியத் தருவதே"



கடலைக் கவனியுங்கள்... அதில் எப்போதும் அலைகளின் சீற்றம். சில வேளைகளில் புயலால் பூகம்பங்களால் பயங்கரக் கொந்தளிப்பு. மேற்பரப்பில் இப்படி ஆரவாரங்கள் அரங்கேறும் வேளையிலும் ஆழ்கடல் பகுதி அமைதியாகவே இருக்கும். கடல் என்பது நமது "வெளிப்புற வாழ்க்கை". ஆழ்கடல் என்பது நமது மனம். நமது வாழ்க்கையிலும் பலப்பல பிரச்சனைகள் அவை எல்லாமே மனதிற்கு வெளியே நடக்கும் நிகழ்வுகளால் வருபவை. மேற்பரப்பின் கொந்தளிப்புகளை ஆழ்கடல் பகுதி தனக்குள் அனுமதிப்பதில்லை. அதனால் தான் ஆழ்கடல் எப்போதும் அமைதியாக இருந்து வருகிறது. இது போல் வெளி நிகழ்வுகளை மனதிற்குள் அனுமதிக்காமல் தடுத்துவிட்டால் மனதும் அமைதியாக இருக்கும்.

வெளி நிகழ்வுகள் மனதிற்குள் ஊடுருவி நிம்மதியைக் குழைப்பது ஏன்?

மனதை நாம் குப்பைக் கூடையாகப் பயன்படுத்தி வருவதால். மனம் என்பது தெய்வத்தின் இருப்பிடம் என்பதை மறந்திருப்பதால். இந்த மறதி நோயிலிருந்து விடுபடுவது எப்படி?

தினமும் சில நிமிடங்களாவது கண்களை மூடி அமைதியாக அமருங்கள். மனதிற்குள் உங்கள் இஷ்டதெய்வத்தின் திருவுருவை அல்லது ஜோதி ஒளியைக் கற்பனை செய்து அதை மனக்கண்ணால் தரிசிப்பதை அன்றாட வழக்கமாக்கிக் கொள்ளுங்கள். மனம் கோயிலாகும். "எல்லாம் இறைவன் செயல்" என்ற மனப்பக்குவம் வளரும் நிம்மதியாக வாழலாம்.


ஒருமுறை நாரதரின் மனதிற்குள் திடீரென சோக உணர்வுகளின் ஆக்கிரமிப்பு. காரணத்தை அவரால் கண்டுபிடிக்க முடியவில்லை. பரிதவித்த அவர் விஷ்ணு பகவானிடம் சென்று முறையிட "நீ போய் கங்கையில் புனித நீராடு உன் சோகம் தீரும்" என்றார். நாரதரும் கங்கைக்கு சென்று புனித நீராடினார். அப்போது ஒரு மீன் அவரை ஏக்கத்தோடு பார்த்தது பரிதாபப்பட்ட நாரதர் "ஏன் மீனே சோகமாக இருக்கிறாய்? உனக்கு ஏதாவது தேவையா கேள். உதவுகிறேன்" என்றார். உடனே மீன் "நாரதரே எனக்குத் தாகமாக இருக்கிறது கொஞ்சம் தண்ணீர் தரமுடியுமா?" என்று கேட்டது.

நாரதருக்கு கோபம் பொங்கியது "நீ வாழ்வதே தண்ணீரில் தானே? தண்ணீரைக் குடித்து தாகம் தீர்க்க வேண்டியது தானே? உன்னைப்போன்ற முட்டாளை நான் பார்த்ததே இல்லை" என்று மீனிடம் சீறினார். கேலியாக சிரித்த அந்த மீன் "நான் பார்த்திருக்கிறேனே! உங்கள் மனதிற்குள் தெய்வீகப் பேரானந்தம் இருப்பதை மறந்துவிட்டு சோகம் தாங்கவில்லையே என்று புலம்பிக் கொண்டிருக்கிறீர்களே.. நீங்கள் தான் என்னைவிட பெரிய முட்டாள்" என்றது. சோகத்தின் காரணத்தை நாரதர் உணர்ந்த மறுகணமே அவரது சோகம் விலகி மனதில் ஆனந்தம் நிறைந்தது. நன்றியோடு மீனை அவர் கைகூப்பித் தொழ அந்த மீன் சட்டென விஷ்ணுவாக மாறிக் காட்சியளிக்க பகவானின் பாதம் பணிந்து மகிழ்ந்தார் நாரதர்."

*நல்வழி அருள்வழி.. அதுவே நம்வழி!*

கே. லோகேந்திரன்

*- ஆசிரியர்*







கௌரி

ஜுவலர்ஸ்

4/A, Fussels Lane, Galle Road,
Wellawatte.
(Close to Wellawatte Market)
Tel: 2360132
Fax: 0094 1 2503471
Mobile: 077 5415526



# இந்து மத அர்த்தங்கள்

**லிங்கம் என்பதின் பொருள்**

1. லிங் - லயம்

கம் - தோற்றம். உலகு தோன்றி ஒடுங்கும் இடம் - லிங்கம்.

2.லிங்கம் - பிரகாசம். அதாவது படைத்தல் முதலிய ஐந்தொழில்களால் உலகைப் பிரகாசம் செய்வது.

3.லிங்கம் என்பது அடையாளம். அதாவது பரம் பொருளுக்குரிய அடையாளம்-எனப் பல பொருள்படும்.

**சிவலிங்கத்தின் சிறப்பு**

சிவலிங்கத்தின் - சிவபெருமானை - இறைவனைக் காணுவதற்குரிய அடையாளம். லிங்+கம. லிங்கம். லிங் - உலக முடிவில் எல்லா சராசரங்களும் லயிப்பதற்குரிய இடம். கம் - அவ்வாறு லயித்த பொருள்கள் அனைத்தும் அதிலிருந்தே வெளிப் படுவது.

லிங்கத்தின் அடிப்பாகம் நாற்கோணமாயிருக்கும். அது பிரமபாகம். நடுப்பாகம் எண்கோண மாயிருக்கும். இது ஆவுடை என்ற பீடத்துள் அமைந்திருக்கும். இது விஷ்ணு பாகம். மேற்பாகம் ருத்ர பாகம். எனவே மும்மூர்த்திகளின் உள் அடக்கமே லிங்கமாகும்.

**லிங்கம் அமைக்கப்படும் பொருள்கள்**

1.சைலஜம் (கல்)

2.ரத்னஜம் (மாணிக்கம், மரகதம் முதலியவற்றால்)

3.லோகஜம் (பொன், வெள்ளி முதலியவற்றால்)

4.க்ஷணிதம் (அரிசி, மணல், விபூதி, சந்தனம் முதலியவற்றால்)

(க்ஷணிகம்: சிறிது நேரம் க்ஷணிக லிங்கத்தை பூஜை முடிந்ததும் அழித்துவிடுவதால் இது இப்பெயர் பெற்றது).

**இறைவனின் மூவகை நிலைகள்**

1. உருகூம் - (விக்கிரகத் திருமேனி)

2. அருவுருவம் - உருவமும் உருவமற்ற நிலையும். (சிவலிங்கத் திருமேனி)

3. அருவம் - உருவமற்ற நிலை.

**இறைவனின் ஐந்தொழில்கள்**

1.படைத்தல்

2.காத்தல்

3.அழித்தல்

4.மறைத்தல்

5.அருளுதல் ஆகியவையாகும்.

**இறைவனுடைய சிறப்புடைய 25 மூர்த்தங்கள்**

1.உமாமகேஸ்வரர்

2.ரிஷபாருடர்

3.நடராசர்

4.கல்யாணசுந்தரர்

5.பிக்ஷாடனர்

6.காமாரி

7.காலாரி

8.திரிபுராரி

9.சலந்தராரி

10.கஜாரி

11.வீரபத்திரர்

12.அரியர்த்த மூர்த்தி

13.அர்த்தநாரீஸ்வரர்

14.கிராதமூர்த்தி

15.கங்காளர்

16.சண்டேசுவர அனுக்ரஹர்

17.சக்ரப்ரதர்

18.விக்னப்ராசதர்

19.சோமாஸ்கந்தர்

20.ஏகபாத மூர்த்தி

21.சுகாசனர்

22.தக்ஷிணாமூர்த்தி

23.லிங்கோற்பவர்

24.நீலகண்டர்

25.சந்திரசேகரர்

**இறைவனின் ஐந்து முகங்களுக்குரிய பெயர்கள் அவற்றின் நிறங்கள்**

(அ)ஈசானம் - நடுவில் இருக்கும் முகம் - பளிங்கு நிறம்

(ஆ)தத்புருஷம் - கிழக்கில் இருக்கும் முகம் பொன் நிறம்

(இ)அகோரம் - தெற்கில் இருக்கும் முகம் கருமை நிறம்

(ஈ)வாமதேவம் - வடக்கில் இருக்கும் முகம் சிவப்பு நிறம்

(உ)சத்யோஜாதம் - மேற்கில் இருக்கும் முகம் வெண்மை நிறம்

இந்த ஐந்து முகங்களாலும் இறைவன் 28 ஆகமங்களையும் அருளிச் செய்தார்.

தொடரும்



# திருவாசகம் என்னும் தேன்



திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்பது முன்னோர் வாக்கு. சமீப காலங்களாக பல பகுதிகளிலும் திருவாசகம் முற்றோதல் நடைப்பெற்று வருகிறது. இதில் தற்போது அனைத்து மக்களும் பங்கேற்று வருகிறார்கள். திருவாசகம் முற்றோதல் என்றால் என்ன?

பன்னிரு திருமுறைகளில் எட்டாம் திருமுறையாகத் திகழ்வது திருவாசகம். சாத்திரத்தில் சிறந்தது திருமந்திரம் என்றால் தோத்திரத்தில் சிறந்தது திருவாசகம். பூவின் சாற்றை உறிஞ்சி தேனை எடுத்துச் சேமிப்பது போல பக்திச் சுவை நிரம்பியது திருவாசகம். சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்ட மாணிக்கவாசகரால் எழுதப்பட்ட இது 658 பாடல்கள் அடங்கியது. சிவன் என்றாலே மங்களம் என்று பொருள். நன்மையைத் தருபவர் என்றும் பொருள்.

சிவபெருமானைப் போற்றி பாடப்பட்டது திருவாசகம். இம்மைக்கும் மறுமைக்கும் நன்மைத் தரக்கூடியது அல்லல் அறுத்து ஆனந்தமாக்குவது. ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்குவது. திருவாசகத்தை முற்றிலும் ஓதுதல் முற்றோதல். 658 பாடல்களையும் தொடர்ந்து ஆறு மணிநேரம் பாடுவது ஆகும்.

திருவாசகம் முற்றோதல் நடக்கும் ஆலயத்தில் சிவன் பார்வதி படங்களோடு சமயக்குரவர் நால்வர் படமும் பிரதிஷ்டை செய்யப்பட்டு பூமாலைகளால் அலங்கரிக்கப்படுகின்றன. சிறு விக்ரகங்களும் வைப்பதுண்டு. இதில் மாணிக்கவாசகரின் விக்கிரகத்தை வீதி உலாவாகவும் கொண்டு வரப்பட்டு பின்னர் பாமாலைகளால் துதிக்கப் படுகின்றன. ஒவ்வோர் பாடல் முடிவிலும் நைவேத்தியத்துடன் இருவராக இணைந்து தீபதரிசனம் செய்கின்றனர். கீர்த்தி திரு அகவல், சிவபுராணம் ஆகியன படிக்கும் போதும் ஆனந்தத்து அழுத்தல் என்ற பதிகம் படிக்கும் போதும் கேட்பவர் எவருக்குமே மனம், மொழி, மெய் எனும் மூன்றும் உருகாமல் இருக்க முடியாது.

பன்னிரு திருமுறைகளில் முதல் ஏழு திருமுறைகளில் இருந்து ஒவ்வொரு பாடல் பாடப்படுகிறது. அடுத்து திருவாசகம் முழுமையும் படிக்கப்படுகிறது. அதற்கு அடுத்து எட்டாம் திருமுறையில் திருக்கோவையாரில் இருந்து ஒரு பாடல். அதன்பின் ஒன்பதாம் திருமுறையிலிருந்து பன்னிரண்டாம் திருமுறை வரை திருமுறைக்கு ஒரு பாடல் வீதம் பாடி முற்றோதல் நிறைவு செய்யப்படுகிறது.

ஏதாவது ஒரு குறிப்பிட்ட பதிகத்தை திருவாசகம் முற்றோதல் செய்பவர். தன் குடும்பத்தோடு பாடுகிறார். சிவனடியார்களுக்கு பனங்கற்கண்டுப் பாலும் வெந்நீரும் இடையிடையே வழங்கு கிறார்கள். மதிய உணவின் போது மொத்தக் குடும்பமும் சிவனடியார்களை பந்தியில் அமரச் செய்து பரிமாறி அமுது செய்து அருள வேண்டும் என்று குடும்ப தலைவர் வேண்டிட தொடர்ந்து மொத்தக் குடும்பமும் விழுந்து வணங்குவது அழகு. சிவனடியார்கள் பூஜிக்கப்படும் இடம் எல்லாம் இல்லதுமாய், அல்லதுமாய் இருக்கும் சிவனை வணங்கும் இடம் தானே!

சிவபுராணம் படித்தால் மனக்கவலைகள் யாவும் மறைந்து அமைதியும் ஆனந்தமும் உண்டாகும். பேச்சு குறைபாடுகள் நீங்கி நன்கு பேச, திருச்சாழல் படிக்க வேண்டும். திருவெம்பாவை பாடுவதன் மூலம் திருமணத் தடைகள் நீங்கி விரைவில் திருமணம் நடைபெறும். மக்கட்பேறு இல்லாதவர்கள், கோயில் மூத்த திருப்பதிகம் படித்தால் குழந்தைகள் பிறக்கும். பிணக்குகள் நீங்க நீத்தல் விண்ணப்பம் படிக்கலாம். திருவாசகத்தின் எல்லாப் பதிகங்களுமே நன்மைகள் தரக்கூடியவையே.

திருவாசகம் வேறு சிவன் வேறு என்றில்லை திருவாசகப்பாடல் உருகி உருகி பாடப்பெற் றமையால் படிப்பவரையும், கேட்பவரையும் மனம் உருகச் செய்யும். திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார் குருவடிவாக காட்சி தந்து தீட்சை தந்து மறைந்த சிவனை மீண்டும் பெற

நினைத்து நினைத்து பாடியவை.

தாயுமாகி நின்று, தன் தாள் பணிவோரின் மாயப்பிறப்பறுக்கும் மன்னவனான சிவபெருமானைத் துதிக்கும் இந்த திருவாசக முற்றோதலில் பங்கு பெறுவது சிவானந்தத்தேன் பருகும் ஆனந்தத்தோடு பரமனின் அருளால் பரம சௌக்கியமும் தரும்.

**வான் கலந்த மாணிக்கவாசக நின் வாசகத்தை**
**நான் கலந்து பாடுங்கள் நற்கருப்பஞ்சாற்றினிலே**
**தேன் கலந்து பால்கலந்து: செழுங்கனித்**
**தீஞ்சுவை கலந்து என்**
**ஊன் கலந்து உயிர்கலந்து உவட்டாமல்**

*திருமதி. பவானி பாலசுப்ரமணியம்*
*வெள்ளவத்தை*



பன்னகமமென்னும் மாத்தளை மாநகரின் கண்ணே எழுந்தருளியிருக்கும்

# அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான

## மாசிமக மகோற்சவ விஞ்ஞாபனம் – 2015

| கொடியேற்றம் | மகேஸ்வர பூஜை | பஞ்சரத பவனி |
|---|---|---|
| 10.02.2015 | 03.03.2015 | 04.03.2015 |
| காலை 11.00 மணி | பகல் 1.00 மணி | காலை 7.30 மணி |

**தீர்த்தோற்சவம் 06.03.2015**

**பகல் இரவு திருவிழாக்கள்**

**பூங்காவனம் 07.03.2015**

**10.02.2015 முதல் 07.03.2015 வரை பகல் 11.00 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், சுவாமி உள்வீதி, வெளிவீதி திருவிழாக்கள் நடைபெறும்.**

| | |
|---|---|
| **03.03.2015 செவ்வாய்க்கிழமை** | காலை 10.00 மணிக்கு தீமிதிப்பும், பகல் 11.00 மணிக்கு ஸ்ரீ சிவனடியார்கள் திருவிழாவும், வசந்தமண்டப பூஜையும் நடைபெற்று பகல் 1.00 மணிக்குமேல் அன்னதானமும் (மகேஸ்வரபூஜை) அன்றிரவு திருச்சூரகத் திருவேட்டைத் திருவிழாவும் நடைபெறும். |
| **04.03.2015 புதன்கிழமை** | காலை 7.30 மணிக்கு இரதோற்சவ வசந்தமண்டப பூஜை நடைபெறும். |
| **05.03.2015 வியாழக்கிழமை** | மாலை 7.00 மணிக்கு கற்பூரத் திருவிழா நடைபெறும். |
| **06.03.2015 வெள்ளிக்கிழமை** | காலை 10.00 மணிக்கு தீர்த்தோற்சவமும், மாலை 7.00 மணிக்கு கொடியிறக்கமும் |
| **07.03.2015 சனிக்கிழமை** | காலை 11.00 மணிக்கு ஸ்ரீ சண்டேஸ்வரி உற்சவமும், மாலை 6.00 மணிக்கு பூங்காவன உற்சவமும் நடைபெறும். |
| **10.03.2015 செவ்வாய்க்கிழமை** | மாலை 6.30 மணிக்கு ஸ்ரீ வைரவர் பூஜை நடைபெறும |

இங்ஙனம்,
அறங்காவல் சபையினர்,
அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம், மாத்தளை.

# ஔவையின் கொன்றை வேந்தன்



### கணபதி வணக்கம்

கொன்றை வேந்தன் செல்வன் அடியினை என்றும்
ஏத்தித் தொழுவோம் யாமே.

(கொன்றைமலர் மாலையுடன் என்றும் இருக்கின்ற அன்புச் சிவத்தின் ஆசைமகனாம் ஸ்ரீ விநாயகப் பெருமானின் திருவடிகள் போற்றி வாழ்வோமாக)

**அன்னையும் பிதாவும் முன் அறி தெய்வம்**

அன்னையும், தந்தையுமே நாம் காணும் முதல் தெய்வங்களாவர். தாயை வணங்குவதும், தந்தை சொல் கேட்பதும் வாழ்வின் அடித்தளமாம். தாயால் தந்தை, தந்தையால் குரு. குருவால் தெய்வம்.

**ஆலயம் தொழுவது சாலவும் நன்று**

பூமியெங்கிலும் தண்ணீர் இருந்தாலும், தாகம் தீர்ப்பது கிணற்றுநீர் போல, எங்கெங்கும் நிறைந்துள்ள தெய்வத்தை ஆலயத்துள் சென்று முறைப்படி தொழுவது கைமேல் பலன் தருவதாகும்.

**இல்லறம் அல்லது நல் அறம் அன்று**

இல்லறம் எனப்படுகின்ற குடும்ப வாழ்வுதான் நல்லறமாகும். சொல்லும் செயலும் ஒன்றாக, 'உனக்காக நான், எனக்காக நீ' என சேவையில் போட்டியிடச் செய்யும் குடும்ப சுகமே சொர்க்கம்.

**ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்**

ஈயார் - யாருக்கும் எதையும் கொடுக்காதவர், தேட்டை செல்வத்தை தீயார் - திருடர்கள் அபகரித்துச் செல்வர். தன்னால் முடிந்த அளவு உதவுக, எந்தத் தர்மமும் தவமும் வீணாவ தில்லை.

**உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு**

உண்டி என்பதற்கு "உணவு, இடை" என்ற பொருள்களும் உண்டு. அழகான பெண்களுக்குக் குறைவான, சத்தான உணவும், மெலிவான சிற்றிடையும் மேலும் பொலிவூட்டும்.

**ஊருடன் பகைக்கின், வேருடன் கெடும்.**

ஊராரைப் பகைத்துக் கொண்டு யாராலும் நிம்மதியாக வாழ்ந்து விட முடியாது. அன்றாடத் தேவைகளுக்கும், ஆலய, நீதிநெறி முறையீடு களுக்கும் ஊருடன் கூடியே வாழ்ந்திட வேண்டும்.

**எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்.**

எண் எனப்படுகின்ற புள்ளிவிபரக் கணக்கும், எழுத்தாகிய பொது இலக்கிய இதிகாச, புராண, காவியங்களின் அறிவும் ஒவ்வொரு மாந்தருக்கும் இருகண்களுக்குச் சமமாகும்.

**ஏவா மக்கள் மூவா மருந்து.**

வயதான பெற்றோரின் தேவையை உணர்ந்து சேவை செய்கின்ற மகன்களும், மகள்களும், காட்டுகின்ற அன்பால், முதுமை மாறி அமிர்தம் உண்டவர்போல் ஆரோக்கியத்துடன் ஆயுளும் பெறுவர்.

**ஐயம் புகினும், செய்வன செய்.**

உழைக்க முடியாத நிலையிலே நிராதரவாகி பிச்சை (ஐயம்) எடுத்துப் பிழைக்க நேர்ந்த போதிலும், நேர்வழி மாறாமல் - யாரைக் கண்டும், எதற்காகவும் பொறாமைபடாமல் - அன்றாடக் கடமைகளைச் செய்.

**ஒருவனைப் பற்றி, ஓர் அகத்து இரு.**

மனம் விரும்பும் ஒருவனோடு இணைந்து குலம் தழைக்கப் பாடுபடு. ஒருவன் ஆன ஒன்றேயான கடவுளை என்றும் துணைகொள் என்று மாந்தருக்கான இரு போதனைத் தருவது.

**ஓதலின் நன்றே, வேதியர்க்கு ஒழுக்கம்**

நீதிக் களஞ்சியங்களான திருமந்திரம், மற்றும் வேதங்களை.... சத்தம் போட்டு ஓதுவோர் மட்டுமே. வேதியர் அல்ல, நெறிமுறை தவறாமல் வாழுகின்ற நேர்மையாளனே உண்மையான வேதியன்.

**ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு.**

"ஔவியம்" - பொறாமை கொண்டு பிறரைத் தாழ்த்திப் பேசுவதானது ஒருபோதும் பயன்தராது. அதோடு தன்னைத்தானே தாழ்த்திக் கொள்வதாகவும் முடியும். வேண்டாம் பொறாமை.

**அஃகமும் காசும் சிக்கெனத் தேடு.**

நமது உயிரைக் காக்கும் உணவுப் பொருட்களையும், வாழ்வுத் துயரைப் போக்கும் காசு, பணம், நகை முதலானவற்றையும் பாடுபட்டுத் தேடிச் சேமித்து வைத்துப் பயன்பெற வேண்டும்.

**கற்பு எனப்படுவது சொல் திறம்பாமை.**

"கற்பு" எனப்படுவது, தன்னையே முழுவதுமாகச் சார்ந்துவிட்ட கணவரது சொல் மீறாத நிலையாகும். உணர்வால் உயிரால் ஒன்றாகிவிடும் கணவன் மனைவி இருவருக்கும் சத்தியம் பொது.

# இந்து தர்ம சாஸ்திரம்

நீர் நுழைய முடியாத இடத்தில் நெய் நுழையும். நெய் நுழையாத இடத்தில் புகை நுழையும். புகை நுழையாத இடத்தில் தரித்திரம் நுழையும். அதை நுழையவிடாமல் சமாளிப்பவனே உயர்ந்த சம்சாரியாவான். கடவுள் உதவியும் அவனுக்குக் கிட்டும்.

மனிதனிடம் பொருள் இருந்தால் மட்டும் போதாது. அதைப் பாதுகாக்க தைரியமும், வியாதி வராத ஆரோக்கியமான உடலும் வேண்டும். பொருளும் ஆரோக்கிய உடலும் சேர்ந்து இருக்குமிடம் தெய்வங்கள் குடியிருக்கும். உலகில் பொருள் இல்லாதவர்கள் இருந்தும் பயன் இல்லை. நோயினால் துன்பத்தை அடைந்து கஷ்டப்படுகிறவர்கள் உயிருடன் இருந்தும் பயன் இல்லை. இருந்தாலும் இறைவனை வேண்டிப் பயன் அடையலாம்.

ஓ மனிதனே! உன் வாழ்நாள் முழுவதும் நீ கடவுளுக்கு அஞ்சி நடப்பாயாக! கடவுள் வகுத்துள்ள நல்ல வழிகளில் செல்வாயாக! அப்பொழுது முயற்சி உனக்கு துணை நிற்கும். பொறுமை உன்னிடத்தில் பொருந்தி நிற்கும். உன் கைகள் நீதியை வழங்கும். இரக்கம் உன் இருதயத்தில் குடிகொண்டிருக்கும். ஆண்டவனை வணங்குபவன் இவைகளையெல்லாம் எளிதில் பெறுவான்.

கடல் நீர் ஆவியாக மாறி மேகமெனப் பெயர் பெற்று பிறகு மழையாகப் பூமியில் இறங்கி ஆற்று நீராகவும், ஊற்று நீராகவும் மீண்டும் கடலுக்கே செல்கின்றது. அதைப் போலவே உன்னிடத்தில் இருந்து புறப்பட்ட செயல்களின் பலன்கள் மீண்டும் உன்னையே வந்தடைகின்றன. ஆதலால் எப்போதும் நன்மையே செய்; நல்லதையே நினை. இறைவன் உன்பால் எப்பொழுதும் இருப்பார்.

தற்பெருமைக்காரன் பணக்காரனாக இருந்தால் அவனுடைய தற்பெருமை வளர்ந்து கொண்டே போகும். அப்போது அவன், தான் பேசுவது என்ன என்று கவனியாமலே பேசுவான். அதனால் அகங்காரமும் ஏற்படும். இவனுக்கெல்லாம் கடவுள் செல்வத்தைக் கொடுத்தே சோதிப்பார். அதனால் அதிலிருந்து மீள வேண்டும். அதுவே தர்மம்.

நல்லவர்களும் சில குறைபாடு உள்ளவர்களாய் இருப்பதற்குக் காரணம் சேர்க்கைதான். ஆகவே எவருக்கும் சேர்க்கை நல்ல சேர்க்கையாய் இருக்க வேண்டும். "சத் சங்கம் வேண்டும்" என்று சாஸ்திரம் விதித்திருப்பது இதற்காகத்தான்.

தொடரும்

# சாஸ்திரங்களும் சம்பிரதாயங்களும்

## (ஆன்மிக ஐயம்)





### சரஸ்வதியின் அமைப்பு கூறுவது யாது?

சரஸ்வதி வெள்ளையுடை உடுத்தி வெள்ளைத் தாமரை மலரில் வீற்றிருப்பாள். அக்கமாலை, சுவடி என்னும் புத்தகம், வீணையை ஏந்திய இவள் தூய்மையின் அடையாளமாக திகழ்வதாக ஆகம சாஸ்திரம் கூறுகிறது. இதற்காகவே, வெள்ளை உடையணிந்து, வெள்ளைத் தாமரையில் வீற்றிருக்கிறாள். இவளின் நான்கு கரங்களும் நான்கு வேதங்களாகவும், கண்களே எண், எழுத்தாகவும், வீணையே ஓங்கார மந்திரமாகவும் இருக்கின்றன. காப்பியங்களில் சிந்தாதேவி, நந்தாவிளக்கு, வானோர்தலைவி என்னும் பெயர்களில் சரஸ்வதி குறிப்பிடப்படுகிறாள். சமணர், பௌத்தர்களும் கல்வியில் சிறக்க சரஸ்வதி வழிபாட்டை மேற்கொள்கின்றனர்.



### மனசு நம் வசமாகணுமா?

சிவபெருமான் கழுத்து, கை, கால், தோள் என மேனியெங்கும் பாம்பை ஆபரணமாக அணிந்திருப்பார். மெய், வாய், கண், காது, மூக்கு ஆகிய ஐம்பொறிகளும் பாம்பு போல விஷத் தன்மை கொண்டவை. ஆனால், மனதை வசப்படுத்தி விட்டால், இவை ஐந்தும் ஆபரணமாக மாறிவிடும் என்பதை இதன் மூலம் சிவன் உணர்த்துகிறார். லிங்கத்தின் மீது ஐந்துதலை நாகம் குடைபிடித்தது போல அலங்காரம் செய்வதற்கு 'நாகாபரணக்காட்சி' என்று பெயர். இக்காட்சியை கண்டால், மனம் நம் கட்டுக்குள் இருக்கும் என்பது ஐதீகம்.

## பழக்க தோஷத்தால் தீட்டுக் காலத்திலும் அறியாமலேயே மந்திரம் சொல்லி வருவது குற்றமா?



பழக்க தோஷம் என்று இதைச் சொல்லாது சுவாமியிடம் உங்களுக்கு இருக்கும் எல்லையில்லாத அன்பை தெரிவிக்கிறது. நமது அன்பு ஒரு அளவுக்கு மேல் போய்விட்டால், அதாவது மனம் பக்குவப்பட்டு விட்டால் மட்டுமே இது நடக்க வாய்ப்புண்டு. தீட்டுக் காலத்தில் சொல்லக்கூடாது தான். அன்பின் மிகுதியால் அறியாமலேயே மந்திரம் சொல்லிக் கொண்டிருக்கும் பக்குவத்தில், இது போன்றவை குற்றம் ஆகாது.



## 'லம்போதரர்' என்பதன் பொருள் என்ன?

விநாயகருக்கு தொந்திவயிற்றால் ஏற்பட்ட பெயர் 'லம்போதரர்'. 'லம்பம்' என்றால் தொங்குவது, 'உதரம்' என்றால் வயிறு. அதாவது தொங்கும் வயிற்றை உடையவர். வெள்ளைக்காரர்கள், இவரை 'பானை வயிறு உடையவர்' என்றே குறிப்பிட்டனர். விநாயகர் அகவலில் ஔவையார், 'பேழை வயிறு' கொண்டவர் என்று சொல்கிறார். அண்டங்கள் அனைத்தும் அதற்குள் அடங்கியிருக்கின்றன என்பது இதன் பொருள்.

தொப்பை வயிறு கொண்டவரைக் கண்டால் சிரிப்போம். நாம் எல்லாம் எப்போதும் இன்பமுடன் சிரித்து வாழ வேண்டும் என்பதற்காகவே, அவர் தொப்பையுடன் இருக்கிறார்.

## கொடிமரம் இல்லாத கோயிலில் சுவாமி புறப்பாடு நடத்தலாமா?

தாராளமாகச் செய்யலாம். ஏகதின உற்சவம் என்ற அடிப்படையில் சாஸ்திரம் இதை அனுமதிக்கிறது. கொடிமரம் இருந்தால், கொடியேற்றி பத்து நாள் திருவிழா நடத்தலாம்.



# விஜயதசமி கொண்டாடுவது ஏன்?



ஆயிரம் ஆண்டுகள் பூலோகத்தில் தவம் செய்த மகிஷாசுரன், பிரம்மாவிடம் தனக்கு ஒரு பெண்ணால் மட்டுமே மரணம் நேரும் என்ற வரத்தைப் பெற்றான். ஆணவத்துடன் தேவர்களை துன்புறுத்தி வந்தான். அவனுக்கு முடிவு கட்ட சிவன் தன்னுடைய ஆற்றலை சக்தியாக வெளிப்படுத்தினார். திருமால் உள்ளிட்ட அனைத்து தேவர்களும் தங்களின் ஆற்றல், ஆயுதங்களை அவளுக்கு வழங்கினர். அவள் துர்க்காதேவியாக சிம்மவாகனத்தில் புறப்பட்டாள். மகிஷாசுரன் தேவியை எதிர்த்து போரிட்டான். அவளோ திரிசூலத்தை வீசி அவனை வதம் செய்தாள். 'ஜெயஜெயதேவி துர்காதேவி' என தேவலோகமே துர்காதேவியின் வெற்றியைக் கொண்டாடியது. இந்த வெற்றித்திருநாளே விஜயதசமியாகக் கொண்டாடப்படுகிறது.




# பழைய துணிமணிகளை ஏழைகளுக்கு கொடுப்பது தானமாகுமா?

ஆகாது. புதிதாக துணிமணி வாங்கிக் கொடுப்பதே வஸ்திர தானம்.

# விரதத்தை உபவாசம் என்பது ஏன்? அதன் பொருள் என்ன?




விரதம் வேறு உபவாசம் வேறு. விரதம் என்ற சொல்லுக்கு சிறிதளவு உணவு, பழம் சாப்பிட்டு ஏற்படும் கஷ்டத்தை சகித்துக் கொள்வது. 'வ்ரு' என்ற சொல்லுக்கு 'கஷ்டம்' என்று பொருள். 'வ்ருதம்' என்பதே விரதம் என்றானது. உபவாசம் என்றால் 'சமீபத்தில் வசிப்பது'. அதாவது முழுமையாக உணவைத் தவிர்த்து, கடவுளின் அருகில் இருப்பதாக கருதுவதாகும். விரதத்தை விட உபவாசம் மேலானது. மாதம் ஒருமுறை இருந்தால் போதும். மனவலிமையும், ஆரோக்கியமும் உண்டாகும். விரத நாளில் வெங்காயம், பூண்டு, மாமிசம் தவிர மற்ற எளிய உணவுகளை அளவு குறைத்து சாப்பிடலாம்.




# அற்புத ஆலயங்கள்

## இந்தியா / இலங்கை



# 108 சிவ ஸ்தலங்கள்

## 38. சென்னை – 2 (மயிலாப்பூர்)

**இத் திருக்கோவில் கபாலீஸ்வரர் திருக்கோவிலின் தெற்கு மாடவீதியில் அமைந்துள்ளது. இக்கோயிலில் சரபேசுவரர்க்கு கிழக்கு பார்த்த சன்னதி அமைந்துள்ளது. சரபேசுவரர்க்கு ஞாயிற்றுக்கிழமை வரும் ராகு காலத்தில் அபிஷேக ஆராதனைகள் அற்புதமாக நடைபெறும். பக்தர்களின் கூட்டம் அலைமோதும்.**

**இறைவன்: வெள்ளீசுவரர்**

**இறைவி: காமாக்ஷி**

இக்கோவிலில் அருள்மிகு வெள்ளீஸ்வரர் கிழக்கு நோக்கி தரிசனம் தருகிறார். அருள்மிகு காமாக்ஷி அம்மன் தெற்கு நோக்கி தனி சன்னதியில் அருட்காட்சி தருகின்றாள். தெற்கு நோக்கி ராஜகோபுரம் அமைந்துள்ளது.

செல்வ விநாயகர் தனிச் சந்நதியில் தெற்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். அவருக்குப் பின்புறம் சித்தி புத்தி உடனுறை விநாயகர் நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகிறார்.

அதே பிராகாரத்தில் சுந்தரவிநாயகர், சுந்தரமூர்த்தி நாயனார், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர், சூரியன், பிரம்மணி, மகேஸ்வரி, கௌமாரீ, வைஷ்ணவி, தக்ஷிணாமூர்த்தி, வராஹி, இந்திராணி, சாமுண்டீ, வீரபத்திரர், நாகேந்திரர், அண்ணாமலை, உண்ணாமுலையாள், சரஸ்வதி, லக்ஷ்மி, மெய்கண்ட சிவம், நந்திசிவம், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவம் சேக்கிழார், உலகளந்தபெருமாள், காசி விசுவநாதர், நந்தீசுவரர், தண்டாயுதபாணி, பிரம்மா, சண்டிகேசுவரர், துர்க்கை திருமேனி காணலாம்.

வள்ளி, தெய்வயானை சமேதராய் முத்துக்குமாரசுவாமி கிழக்கு நோக்கி தரிசனம் தருகிறார்.

சிவகாமி சமேத நடராஜர் நந்தி உத்ஸவமூர்த்தி காணலாம். அடுத்து பைரவர் திருமேனி தரிசிக்கலாம்.

வெளிப்பிரகாரத்தில் தனிசந்நதியில் சுக்ராசாரியார் வெள்ளீஸ்வரர் திருமேனி காணலாம்.

அடுத்து சரபேஸ்வரர் தனி சந்நதியில் கோவில் கொண்டுள்ளார்.

எதிர்புறத்தில் அலங்கார மண்டபத்தினை ஒட்டினாற் போல் சனி பகவான் தனி சந்நதியில் மேற்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். பக்கத்தில் நவக்கிரஹ சந்நதியைத் தரிசிக்கலாம்.

கொடி மரம், நந்தி காணப்படும் பிரகாரத்தில் அற்புதமான பல தெய்வத்திருமேனிகள் பொறிக்கப்பட்ட எட்டு தூண்களைக் கொண்ட சிறுமண்டபத்தைக் காணலாம். அந்த மண்டபத்தில் விநாயகர் கிழக்கு நோக்கி காட்சி தருகிறார்.

இக்கோவில் தலபுராணம் கோவில் நுழைவாயிலில் சலவைக்கல்லில் பொறிக்கப்பட்டுள்ளது.

மகாபலி சக்கரவர்த்தி வாமனராக வந்து திருமாலுக்கு மூன்றடி மண் கொடுக்க முன்வந்தபோது, அசுரகுரு சுக்ராச்சாரியார் வண்டு ரூபம் கொண்டு நீர் வார்க்கும் கிண்டியின் துவாரத்தை அடைத்தார்.

திருமால் தர்ப்பையால் கிண்டியின் துவாரத்தில் குத்தினார். அதனால் ஒரு கண்ணை இழந்தார் அசுரகுரு! இழந்த கண்ணைத் திரும்பப் பெறுவதற்காக சுக்கிராச்சாரியார் இத்திருத்தலம் வந்து குருந்த மரநிழல் அமர்ந்து ஈசனை சித்தத்திலே கொண்டு கடும் தவம் புரிந்து கண் ஒளி பெற்றார். சுக்ராச்சாரியாருக்குக் கண்கொடுத்த ஈசன் வெள்ளீஸ்வரர் என்று திருநாமம் பெற்றார்.

இத்திருக்கோவிலில் வைகாசி மாதம் பிரம்மோத்ஸவம் நடைபெறும். எட்டாம் நாள், திருவிழாவன்று பிரதோஷநந்நாளில் சுக்ரனுக்குக் கண்பார்வை அருளும் வைபவம் நடைபெறுகிறது.

வைகாசித் திங்கள் பௌர்ணமியில் தீர்த்தம் தரும் பெருவிழா நடைபெறும். வனபோஜனத் திருவிழாவும் குறிப்பிடத்தக்க விழாவாகும்.

செங்குந்தர் குலத்தைச் சேர்ந்த அறங்காவலர் குழுவினரால் இக்கோவில் சிறப்பாக பராமரிக்கப்பட்டு வருகிறது.

# 39. சேலம்

**எல்லா இடங்களில் இருந்தும் பஸ், ரயில் வசதி உண்டு. இங்கு கோயில் கொண்டுள்ள சுகவனேஸ்வரப் பெருமானை ஔவையார், அருணாகிரி நாதர், நக்கீரர், அகஸ்தியர் மற்றும் ஏராளமான சித்தர்கள் வழிபட்டு அவனருளைப் பெற்று பேரின்ப சுகம் கண்டுள்ளனர்.**

**இறைவன்: சுகவனேஸ்வரர்**

**இறைவி: சொர்ணாம்பிகை**

இக்கோவில் திரேதாயுகத்தில் தேவர்களாலும், கிரேதாயுகத்தில் காமதேனுவாலும், துவாபரயுகத்தில் ஆதிசேஷனாலும் போற்றப்பட்டது.

இக்கலியுகத்தில் கிளியுருவம் கொண்ட சுகப்பிரம்ம முனிவரால் வணங்க பட்டமையால் சுகவனேஸ்வரர் என்று சுவாமிக்குத் திருநாமம் ஏற்பட்டது.

உலகத்திற்கெல்லாம் தாயாக விளங்கும் அன்னைக்கு இக்கோவிலில் சொர்ணாம்பிகை என்பது திருநாமம். அங்கமெலாம் தங்க நிறம் கொண்ட ஆத்தாளை, மாதுளம் பூ நிறத்தாளை, புவி அட்டங்ககாத்தாளை சொர்ணாபரண அலங்காரத்தில் சொர்ணாம்பிகையாக ஜொலிக்கக் காண்கின்றோம்.

கிழக்குபார்த்து அமைந்துள்ள சுகவனேஸ்வரர் திருக்கோவிலுள் செல்வதற்குத் தெற்கு பக்கம் அழகிய அலங்கார நுழைவாயில் கட்டப்பட்டுள்ளது. அந்த நுழைவாயிலின் இருபுறமும் சிவன், பார்வதி, முருகர், விநாயகர், நாரதர், நான்கு முனிவர்கள் ரிஷபம் சிலைகளைக் காணலாம்.

உள்ளே சென்றதும் கிழக்கு பார்த்த வண்ணம் பெருமிழலைக் குறும்ப விநாகர் சந்நதியைத் தரிசிக்கலாம். பிரம்மாண்டமான கதவுகளைக் கொண்ட முதல் பிராகாரத்துள் சென்றதும் முருகன், விநாயகர் திருமேனி காணலாம்.

சொர்ணாம்பிகை தெற்குப் பார்த்து காக்ஷி தருகிறாள். கர்ப்பகிரஹத்திற்கு முன்புறம் கஜலக்ஷ்மி உருவத்தை தரிசிக்கலாம். அம்மன் சந்நதிக்குப் பக்கம் தேனு மூர்த்தம் எனும் கிணறும், நந்தியும், நவக்கிரஹகங்களும், நாகர், வியாசர், விகட சக்கர விநாயகர், சிவலிங்க மூர்த்தங்களைக் காணலாம்.

உள் மண்டபத்தில் நடராஜர் முன்னால் வணங்கிய நிலையில் நிற்கும் சுகர், அம்மன் பஞ்சலோக மூர்த்தங்களைக் காணலாம். இந்த சந்நதியின் பக்கம் பதஞ்சலியும், வியாக்ரபாத முனிவரையும் காணலாம்.

கர்ப்ப கிரகத்திற்கு வலதுபுறம் சோமஸ்கந்தர், இடது புறம் உத்ஸவமூர்த்தி காணலாம். சுற்று பிராகாரத்தில் அறுபத்துமூவர், கஜலக்ஷ்மி, சிவலிங்கம், நால்வர், விநாயகர், தக்ஷிணாமூர்த்தி, சப்தகன்னியர், பழனி முருகன், சந்நதிகள் உண்டு.

அடுத்து காணும் ஆறுகால் மண்டபத்திற்கு முன்னால் வலம்புரிவிநாயகர், ஐயப்பன், கங்காள மூர்த்தி, காசி விசுவநாதர், சகஸ்ரலிங்கம், பூதேவி, துர்க்கை, சண்டிகேசுவரர், பிரம்மா என்று பல கோஷ்ட மூர்த்தங்களைக் காண்கின்றோம்.

வெளிப்பிராகாரத்தில், பெரிய மண்டபத்துடன் கூடிய சுகவன சுப்ரமண்யர் சந்நதியைக் காணலாம். பைரவர் தனி சந்நதியில் தரிசனம் தருகிறார்.

இக்கோவில் கல்யாண மண்டபத்துக்கும் தெப்பக் குளத்துக்கும் நடுவில் நந்தவனம் அமைந்துள்ளது. இ..து இக்கோவிலின் தனிச் சிறப்பாகும்.

சுவர்ணாம்பிகை சமேத சுகவனேசுவரர் துணை இருக்கும்வரை நமக்கு துன்பம் ஏது துயரம் ஏது? சுகம் அன்றோ வாழ்வில் என்றென்றும் நிலைத்து நிற்கும்.

# 40. சுசீந்திரம்

**நாகர்கோவிலில் இருந்து கன்னியாகுமரி செல்லும் மார்க்கத்தில் நாகர்கோவிலிலிருந்து 6 கி.மீ தூரத்தில் பழையாற்றின் தீரத்தில் அமைந்துள்ள திருத்தலம். பிரம்மா, விஷ்ணு, சிவன் மூவரும் ஒன்றாக இணைந்து ஓர் உருக்கொண்டு தாணு, மால், அயன் எனும் திருநாமத்துடன் திருத்தோற்றம் அளிக்கும் அற்புத காட்சியை இத்தலத்தில் மட்டுமே காண முடியும்.**

**இறைவன்: தாணு இறைவி: பார்வதி**

**இறைவன்: மால் இறைவி: லக்ஷ்மி**

**இறைவன்: அயன் இறைவி: சரஸ்வதி**

இக்கோவிலில் பெரும் தெப்பக்குளம் உள்ளது. 134 அடி உயரமுள்ள ராஜகோபுரம் கோவிலின் சிறப்பை வானளாவ உயர்த்திக் காட்டுகின்றன. கோபுரத்தின் உள் பக்கம் புராண காலத்துச் சித்திரங்கள் வரைந்திருப்பதைக் காணலாம்.

உள் மண்டபத்தில் ஈசன் ரிஷபாருட மூர்த்தியாகவும், மகாவிஷ்ணு கருட ரூபமாகவும் திவ்ய தரிசனம் தருகின்றனர்.

மண்டபத்தின் மேற்கே பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி மூவரும் தவக் கோலத்தில் எழுந்தருளியிருப் பதனைக் காணலாம்.

கோவிலுள் நுழைந்தவுடன் ஊஞ்சல் மண்டபத்தைக் காணலாம். இது ஆறாம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இந்த மண்டபத்தில் அர்ச்சுனன், கர்ணன், ரதி, மன்மதன் ஆகியோரின் எழில் மிகு சிற்பங்களைக் காணலாம்.

வெளிப்பிரகாரத்தின் கிழக்கே தக்ஷிணா மூர்த்தியுடன் கிழக்குப் பிராகாரங்கள் சந்திக்கும் இடத்தில் ஊட்டுபரையும் காணலாம்.

தெற்குப் பிராகாரத்தில் அமைந்துள்ள வசந்த மண்டபத்தில் நீலகண்டர், விநாயகர், கங்காளநாதர், கைலாசநாதர் திருமேனியைத் தரிசிக்கலாம்.

மேல் கோடியில் ஐயப்பன், ஸ்ரீ ராமர், சீதா லஷ்மணர், அனுமன் சந்நதியைக் காணலாம்.

வடக்கு பிராகாரத்தில் காலபைரவர், சுப்ரமண்யர், சப்தசுவரங்களை எழுப்பும் தூண்கள், வடகோடியில் சித்திர சபையும் அடுத்தாற் போல் 18 அடி உயரம் கொண்ட கம்பீரமான ஆஞ்சநேயர் திருவுருவத் தோற்றமும் காணலாம்.

தலவிருக்ஷம் கொன்றை மரம். அம்மரத்தின் கீழே மும்மூர்த்திகளும் தரிசனம் தரும் சிவலிங்கங்களின் திருச்சந்நதியைக் காணலாம். இந்த சிவலிங்கத்தைத் தேவேந்திரன் இன்றும் நடு ஜாமத்தில் வந்து வழிபடுவதாக ஐதீகம்!

அடுத்தடுத்து கருடாழ்வார், தாணுமாலயன், விஷ்ணு, செண்பகராமன் சந்நிதியைத் தரிசிக்கலாம். மண்டபத்தைத் தாங்கும் தூண்களில் யாளி போன்ற அழகிய சிற்பங்களைக் காணலாம்.

கர்ப்பகிரஹத்தைச் சுற்றி துர்க்கை, சங்கரநாராயணர் திவ்ய தரிசனம் காணலாம்.

மற்றும் மகாவிஷ்ணுவின் சந்நதியில் நின்ற கோலம் கொண்ட பெருமாளையும் சயன கோலம் கொண்ட பெருமாளையும் தரிசிக்கலாம்.

சுசீந்தரம் தாணு, மால், அயன் கோவில், அதிசயங்கள் பல நிறைந்த அற்புதமான திருக்கோயில்!

*தொடரும்*




SAREE UNDERSKIRTS

Rs. 199/-

Menu

LADIES TAILORING

கையிருப்பு முடியும் வரை மட்டுமே.

No.4, IBC Road,
Wellawatte.
Tel: 0777 555 026



# சிவகாமி அம்மன் கோயில் – இணுவில்

இக் கோவில் இணுவிலில் நல்ல தெய்வீகச் சூழலில், அமைதியான இடத்தில் அமைந்துள்ளது. இத்திருத்தலத்தின் மேற்கு வீதியில் பண்டைய தமிழ் மன்னரால் தங்களது வீரத்தைப் பேணிக்காப்பாற்ற அமைத்த காவல் தெய்வமான மாணிக்க வைரவரும், பத்திரகாளி அம்மனும் ஒருங்கமைந்த திருக்கோவில் அமைந்துள்ளது. கிழக்கே சோழ மன்னனின் ஆட்சிக்காலத்தில் தொடர்புடைய காரைக்கால் சிவன் என்றழைக்கப்படும் விசாலாட்சியம்பாள் சமேத விசுவநாதப்பெருமான் ஆலயமும் அமைந்துள்ளது. அருணகிரிநாத சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலும் காட்சி தருகின்றன. வடமேல்திசையில் இணுவில் பகுதியை ஆண்ட அரசன் கைலாசநாதன் இளமையில் இளந்தாரி என அழைக்கப் பட்டமையால் அவனின் நினைவாக எழுப்பிய இளந்தாரி கோவிலும் அன்னை சிவகாமியின் திருக்கோவிலின் அழகை மிகைப்படுத்துகின்றன.

போர்த்துக்கேயர் நாட்டை ஆண்டகாலத்தில் இத்திருக்கோவில் இடிபட்டு அழிவுற்றது. பின்னர் வந்த ஒல்லாந்தர் காலத்தில் பொதுமக்கள் மீண்டும் இவ்வாலயத்தைச் சிறுகுடிசையாக அமைத்து வழிபட்டனர். ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில்: தோம்பு எழுதும் பாணியில் ஈடுபட்டிருந்த இவ்வூரைச் சேர்ந்த சின்னத் தம்பிப்புலவர் சிவகாமி அம்மையை இடையறாது வணங்கிவந்தார்.

இத்திருக்கோவிலில் வருடாந்த மகோற்சவங்கள் பங்குனி உத்தரத்திருநாளில் தீர்த்தோற்சவம் வரை 12 நாட்கள் நடைபெறுகின்றன. ஆறாம் திருவிழாவன்று திருமஞ்சத்தில் அன்னை பவனிவருவாள் எட்டாம் திருவிழா கைலாச வாகனமும், ஒன்பதாம் திருவிழா குதிரை வாகனத்திருவிழாவும், பத்தாம் திருவிழா திருச்சப்பறமும். பதினோராம் திருவிழா தேர்த்திருவிழாவும், பன்னிரண்டாம் திருவிழா தீர்த்த திருவிழாவுமாகும்.



# பாவ புண்ணியம்

நல்லதை யார் சொன்னாலும் எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியம். கடவுள் நமக்கு எல்லாவற்றையும் சரியாகவே கொடுத் திருக்கிறார். அதைக் கொண்டு நாம் தான் வாழ்ந்து காட்ட வேண்டும்.

மகாபாரதத்தில் ஒரு சந்தேகம் நமக்கு எழத் தான் செய்யும். துரியோதனன் கடைசி வரை நன்மையை மட்டுமே அனுபவித்தான். பஞ்சபாண்டவர்கள் எப்போதும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள். ஏன் நாம் துரியோதனன் மாதிரி தர்மத்தை மறந்து வாழ்ந்திடக் கூடாது என்று எண்ணத் தோன்றலாம்.

கத்தியின் பயன்பாடு பழம் நறுக்குவது, அதையே உயிரைக் கொல்லவும் பயன் படுத்தலாம். விளக்கின் பயன்பாடு ஒளியூட்டவே. அதன் வெளிச்சத்தில் பயன் தரும் நல்ல புத்தகத்தை வாசிக்கலாம். அதே நெருப்பைக் கொண்டு ஊரைக் கொளுத்தினால் என்னவாகும்? வாழ்வை நன்மைக்காக பயன்படுத்த வேண்டியது அவரவர் கையில் தான் இருக்கிறது.

குருக்ஷேத்திரத்தில் யுத்தம் முடிவுக்கு வந்தது. ஹஸ்தினாபுரத்தில் இருந்து கண்ணன் துவாரகைக்கு புறப்பட்டுக் கொண்டிருந்தான். அந்த சமயத்தில் அரண்மனைப்பக்கமாக உதங்க மகரிஷி வந்து கொண்டிருந்தார். அவர் கண்ணனைப் பார்த்து, "கண்ணா! யுத்தம் முடிந்ததாமே! யார் அதில் ஜெயித்தது?" என்றார். "மகரிஷி! தர்மம் ஜெயித்தது. அதர்மம் அழிந்தது. தர்மத்தின் பக்கம் இருந்த பாண்டவர்கள் தான் வெற்றி," என்றான் கண்ணன்.

"கர்மாவின் படி அவரவருக்கு பாவத்தையும், புண்ணியத்தையும் தருபவன் நீ தானே! ஒவ்வொருவருக்குள்ளும் இருந்து கொண்டு இயக்குபவன் நீ தானே! நீ நினைத்தால் துரியோதனனை நல்லவனாக்கி விட முடியாதா? தவறு செய்யும் குழந்தையை தடுத்து நிறுத்துவது தாயின் கடமை தானே!

நீ நினைத்தால் யுத்தத்தையே நிறுத்தி விடலாமே! இத்தனை கஷ்டம் உனக்குத் தேவையா?" என்று கேட்டார் உதங்க மகரிஷி. தயக்கத்துடன் கண்ணன் மகரிஷியிடம், "அவசர வேலையாக துவாரகைக்கு கிளம்பிக் கொண்டிருக்கிறேன். இன்னொரு சமயத்தில் இதைப் பற்றி பேசுவோமே!" என்று புறப்பட்டான்.

"ஏன் கண்ணா! என் கேள்விக்கு உன்னால் பதில் சொல்ல முடியவில்லையா? பதில் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் வெற்றி என்னவோ உனக்குத் தானே. அது போகட்டும். அர்ஜுனனுக்கு காட்டிய விஸ்வரூப தரிசனத்தைக் காண என் மனம் விரும்புகிறது. அதற்கு இப்போதே அருள் செய்ய வேண்டும்," என்று மகரிஷி கண்ணனை வேண்டி நின்றார்.

"துவாரகைக்குப் போய் நான் என்ன செய்யப் போகிறேன். ஒன்றும் அவசரமில்லை," என்று சொல்லி விஸ்வரூபதரிசனத்தை உதங்க மகரிஷிக்கு அப்போதே கண்ணன் காட்டி அருளினான். கர்மாவுக்கும், கடவுளுக்கும் சம்பந்தம் உண்டா இல்லையா என்பதை நாம் அனைவரும் தெரிந்து கொள்வது அவசியம்.

பிரம்மசூத்திரத்தில் வியாசர் இதனை அழகாக விளக்குகிறார். அவரவர் செய்த பாவ புண்ணிய அடிப்படையில் வாழ்க்கை நடக்கிறது. இந்த கர்ம நியதியும் கடவுளுக்குக் கட்டுப்பட்டது தான். இருந்தாலும், கடவுள் மீது பழி ஏதும் சொல்ல முடியாது என்பதைச் சொல்லியுள்ளார். இதை இப்படி சொன்னால் நீங்கள் எளிதில் புரிந்து கொள்வீர்கள்.

மா, தென்னை என எந்த மரமானாலும் தண்ணீர் விடுவதும், உரம் போடுவதும் பொதுவான விஷயம் தான். ஆனால், எப்படி தண்ணீர் விட்டாலும் எல்லா மரமும் தென்னையாகவோ, மா மரமாகவோ மாறுவதில்லை. விதையின் அடிப்படையில் தான் ஒரு மரம் உருவாகிறது. மற்றபடி தண்ணீரும், உரமும் அதன் வளர்ச்சிக்குத் துணை புரிகின்றன அவ்வளவே. இந்த தண்ணீரையும், உரத்தையும் போன்றது தான் கடவுளின் அருள். ஆனால், அந்தந்த விதையைப் போல உயிர்களின் வினைப்ப திவான கர்மா இருக்கிறது.

இதையே இன்னொரு விதமாகவும் சொல்லலாம். தாய் குழந்தைக்கு நடை கற்றுத் தருவதைப் பார்த்திருப்பீர்கள். தாயார் குழந்தையை கூடத்தில் நிறுத்தி விட்டு, தானாகவே நடந்து வரும்படி விட்டு விடுவாள். தளர் நடையிட்டபடி குழந்தையும் கீழே மேலே விழுந்து எழ ஆரம்பிக்கும். ஆனால், குழந்தை அழாதவரை தாய் அதைத் தூக்கி விடச் செல்லமாட்டாள். அதற்காக தாயின் கட்டுப்பாட்டில் குழந்தை இல்லை என்று சொல்லி விடமுடியுமா? அவளது கண் வட்டத்திற்குள் தான் குழந்தை இருக்கிறது. ஆனாலும், குழந்தைக்கு என்று சுதந்திரமும் தரப்பட்டிருக்கிறது. அதுவாகவே செயல்படும்படி தாய் விட்டு விடுவது போலவே, பகவானும் உயிர்களை சுதந்திரமாக செயல்பட விட்டிருக்கிறார்.

## இணைந்த கணிதம்

**Examination Style Papers Book Combined Maths.**

By :
Eng.S.Thuraiappah,BSC (Math Spl),Msc (Ag.Eng),PGD(Statistics)

Leading Book Shops :

**0776 630 793**



**THILLAI VISION**
*professional photo / videographers*

309, 1/6, Galle Road,
Colombo 06.

Tel : 0112 504 097
Hotline : 0777 300 317
Mob : 0773 874 243
: thillaivision@yahoo.com
: www.thillaivision.com
: thilllaivision




57,Sea Street,Colombo 11. Tel: 011 2447358
E-mail: krishna.suriyas@gmail.com
www.srisuriyasjewellers.com




104/2A, Archchana Shopping Complex Inside,
Sea Street, Colombo 11. Tel: 011 244 8650

## Suda Jewellery

*Dealers of Guaranteed Sovereing 22ct Gold Jewellery*



No: 05 Manning Place, Wellawatta, Colombo 06
Tel: 0114 383 534

## New Friends Pharmaa

Dealers in Pharmaceutical & Groceries



(FREE HOME DELIVERY)
No.1st, Lawrence Road, Wellawatte, Colombo 06.
Tel: 011 250 5213 Mob: 077 519 6364

## SELVAN FOTO & VIDEO

*Professional Photo & Videography*

- Wedding photography
- Story Book Album's
- Magazine Album's
- Full HD Video Graphy (DVD & Blue Ray)
- VHS to DVD & Blue Ray Converting
- Photo Frame's (Any Size)
- Mug Printing
- T-Shirt Printing
- Plate Printing


WEDDING CAR FOR RENT

ALL COUNTRIES AIR TICKETING

0773448949
0776634388

# 385-2/2, Galle Road, Wellawatta,Colombo 06,
E-mail: info@selvanfoto.com Web : www.selvanfoto.com Skype : selvanfoto

## Raja Tailors



Specialists for
Ladies & Gents
Tailoring &Shalwars,
Saree Blouses
Specialist in
Wedding Blouses

No.14,Vihara Lane,Wellawatthe,Colombo 06.
Tel: 077 391 6692



# சொர்க்கம் அருளும் மஹாசிவராத்திரி!

அம்மனுக்கு உகந்த ராத்திரி... நவராத்திரி. இது, புரட்டாசி மாதம் கொண்டாடப்படுகிறத. அது போல், இறைவன் சிவபெருமானுக்கு உகந்த ராத்திரி... சிவராத்திரி. மாதம்தோறும் சிவராத்திரி வந்தாலும், மாசி மாதம் வரும் சிவராத்திரியே மிகுந்த சிறப்பு பெறுகிறது. அதை, மகா சிவராத்திரி என்கிறோம்.

### விரதம் பிறந்த கதை

பிரளய காலத்தின்போது பிரம்மனும், அவரால் படைக்கப்பட்ட அனைத்து ஜீவராசிகளும் அழிந்து விட்ட நிலையில், இரவுப் பொழுதில் அம்பிகை உமாதேவி, சிவபெருமானை நினைத்து பூஜை செய்தாள். நான்கு ஜாமங்களிலும் இரவு முழுவதும் ஆகம விதிப்படி அர்ச்சனை செய்தாள்.

பூஜையின் முடிவில் அம்பிகை ஈஸ்வரனை வணங்கி, 'நான் தங்களைப் பூஜித்த இந்த இரவை, தேவர்களும், மனிதர்களும் தங்கள் திருநாமத்தாலேயே, அதாவது 'சிவராத்திரி' என்றே கொண்டாட வேண்டும்' என்று வேண்டினாள்.

மேலும், 'சிவராத்திரி அன்று, சூரியன் மறைந்தது முதல், மறுநாள் காலை சூரியன் உதயமாகும் வரை, தங்களை (சிவனை) பூஜிப்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கு எல்லாவிதமான

பாக்கியங்களையும் தந்து, முடிவில் மோட்சத்தையும் அருள வேண்டும்' என்றும் அப்போது வரம் கேட்டாள் உமாதேவி. சிவபெருமானும், அந்த வரத்தை அருளினார்.

"இப்படி உமாதேவி விரதம் மேற்கொண்ட நாள்தான் மகா சிவராத்திரி.

இன்னொரு முறை பார்வதிதேவி விளையாட்டாக சிவபெருமானின் கண்களை பொத்தினாள். இதனால் உலகமே இருண்டு போனது. பயந்து போன தேவர்கள் இரவு முழுவதும் இறைவனை வேண்டி வணங்கி, மீண்டும் உலகத்திற்கு ஒளி கிடைக்கச் செய்தனர். அந்த இருண்ட இரவே சிவராத்திரி என்கிறது ஒரு புராணக் கதை.

**விரதம் இருக்கும் முறை**

மகா சிவராத்திரி அன்று விரதம் இருப்பவர்கள், சிவராத்திரிக்கு முதல் நாள் ஒருவேளை மட்டுமே உணவு உட்கொள்ள வேண்டும்.

சிவராத்திரி அன்று அதிகாலையிலேயே எழுந்து குளித்து விட்டு, வீட்டில் உள்ள சிவபெருமானின் உருவப்படத்திற்கு தீப ஆராதனை காண்பித்து வழிபட வேண்டும். தொடர்ந்து, சிவன் கோவிலுக்குப் சென்று முறைப்படி தரிசனம் செய்ய வேண்டும். மாலையில் மீண்டும் குளித்து சிவபூஜை செய்ய வேண்டும். வீட்டிலேயே இதை மேற்கொள்ளலாம். முடியாதவர்கள், அருகே உள்ள சிவன் கோவில்களில் நடைபெறும் சிறப்பு பூஜைகளில் கலந்துகொண்டு வழிபடலாம். பூஜையின் போது ஐந்தெழுத்து மந்திரமான 'சிவாயநம' என்ற மந்திரத்தை உச்சரிப்பது மனோ சக்தியை கொடுக்கும். மேலும், சிவபெருமானின் வெவ்வேறு பெயர்களான பவ, சர்வ, ஈசான, பசுபதி, உக்ர, ருத்ர, பீமா மற்றும் மகாதேவா என்று கூறியும் பூஜிக்கலாம்.

இந்த பூஜையின்போது, சிவனுக்கு உகந்த வில்வ இலைகளைக் கொண்டு அர்ச்சனை செய்வது மிகச்சிறந்த பலனை தரும்.

அன்றையதினம் இரவில் தூங்கிவிடக்கூடாது. நான்கு ஜாமங்களிலும் தூங்காமல் பூஜை செய்து, மறுநாள் விடியற்காலையில் நீராடி, சிவனை வழிபட்டு, ஏழை எளியவர்களுக்கு தங்களால் முடிந்த தானத்தை வழங்கி, விரதத்தை நிறைவு செய்ய வேண்டும். சிவராத்திரி முழுவதும் விரதம் இருக்க முடியாதோர், ஒவ்வொரு ஜாமப் பூஜை முடித்த பிறகும் தண்ணீர், பால், பழங்களை உண்ணலாம்.

**விரத பலன்கள்**

மகா சிவராத்திரி அன்று விரதம் இருப்பவர்களுக்கு நற்கதி கிடைப்பதுடன், சொர்க்கலோக பாக்கியமும் கிடைக்கும்.

தெரியாமல் செய்த பாவங்களுடன், தெரிந்தே பாவங்கள் செய்திருந்தாலும் அவை நம்மை விட்டு நீங்கும்.

ஒருவர் தொடர்ந்து 24 வருடங்கள் சிவராத்திரி விரதம் இருந்து வந்தால், அவர் சிவகதியை அடைவதுடன், அவரது மூவேழு தலை முறைகளும் நற்கதி அடைந்து, முக்தியை அடைவார்கள்.

## ஆண்களுக்கான ராத்திரி!

- மாசி மாதம் கிருஷ்ணபட்சம் சதுர்த்தி திதியன்று அமாவாசைக்கு முதல் நாள் மகாசிவராத்திரி விரதம் மேற்கொள்ளப்படுகிறது.
- மகா சிவராத்திரி அன்று திருவோண நட்சத்திரமும் கூடி வருவது தனிச்சிறப்பானதாக கருதப்படுகிறது. இந்த ஆண்டு திருவோண நட்சத்திரம் அன்றுதான் மகா சிவராத்திரி வருகிறது.
- சிவராத்திரி அன்று நள்ளிரவு 11.30 மணி முதல் ஒரு மணி வரை உள்ள காலம் லிங்கோற்பவர் காலமாகும். இந்த நேரத்தில் சிவ வழிபாடு செய்வது நற்பலன்களை அள்ளித்தரும்.
- மகா சிவராத்திரி அன்று முதல் ஜாம பூஜையின் போது பயிற்றம் பருப்பும், இரண்டாம் ஜாமத்தில் பாயசமும், மூன்றாம் ஜாமத்தில் எள் அன்னமும், நான்காம் ஜாமத்தில் சுத்த அன்னமும் நைவேத்தியமாக படைப்பார்கள்.
- 'சிவாயநம' என்று சிந்தித்திருந்தால் அபாயம் நமக்கில்லை என்பது முன்னோர் வாக்கு.
- பெண்களுக்குரிய ராத்திரி நவராத்திரி. அதுபோல் ஆண்களுக்குரிய ராத்திரி சிவராத்திரி. அதனால், ஆண்கள் சிவராத்திரி விரதம் மேற்கொள்வது நல்லது.

# சனி பகவானின் தண்டனையில் இருந்து தப்பிக்க ஒரு சிறந்த பரிகாரம்

ஏழுதலைமுறைக்கு முன் செய்த பாவங்களும், இந்த தலைமுறையில் நீங்கள் செய்த பாவங்கள் அனைத்தும் தீருவதற்கு ஒரு மிகச் சிறந்த பரிகாரம்.

எவர் ஒருவர் செய்த பாவங்களும், அவருக்கு பூமெராங் ஆகி திரும்ப கிடைப்பது அவருக்கு ஜாதகப்படி மோசமான தசா, புக்தி நடக்கும் காலங்களில். அல்லது அஷ்டமச் சனி, ஜென்ம சனி நடக்கும் காலங்களில் - சனி பகவான், தயவு, தாட்சண்யமின்றி கொடுமையாக தண்டிக்கிறார்.

கீழே கொடுக்கப்பட்டிருக்கிற விஷயம் - யாரும் சனியோட கடுமையால பாதிக்க படக்கூடா தென்பதற்காக ஒரு சித்தர் பரிந்துரைக்கும் மிக எளிய பரிகாரம்.

பச்சரிசியை ஒரு கையில் அள்ளி அரிசியாக அல்லது அதை நன்கு பொடி செய்து சூரியநமஸ்காரம் செய்துவிட்டு, விநாயகப் பெருமானை மூன்று சுற்று சுற்றிவிட்டு அந்த அரிசியை விநாயகரைச்சுற்றிப் போட்டால், அதை எறும்பு தூக்கிச் செல்லும். அப்படித்தூக்கிச் சென்றாலே நமது பாவங்களில் பெரும்பாலானவை நம்மைவிட்டுப் போய்விடும். வன்னி மரத்தடி விநாயகராக இருந்தால், அது இன்னும் விசேஷம். சனிக்கிழமைகளில் இதை செய்யவும்.

அப்படித்தூக்கிச் சென்ற பச்சரிசி மாவை எறும்புகள் தமது மழைக்காலத்திற்காக சேமித்து வைத்துக்கொள்ளும். எறும்பின் எச்சில் அரிசிமாவின் மீது பட்டதும் அதன் கெடும்தன்மை நீங்கிவிடும். இந்த பச்சரிசமாவையை சாப்பிடுவதற்கு இரண்டரை வருடங்கள் எடுத்துக்கொள்ளும் இப்படி இரண்டே கால் வருடங்கள் வரை. எறும்புக்கூட்டில் இருப்பதை முப்பத்து முக்கோடி தேவர்கள் கவனித்துக் கொண்டிருப்பார்கள். இரண்டரை ஆண்டிற்கு ஒருமுறை கிரகநிலை மாறும். அப்படி மாறியதும், அதன் வலு இழந்து போய்விடும். இதனால், நாம் அடிக்கடி பச்சரிசி மாவினை எறும்புக்கு உணவாகப்போட வேண்டும். ஓர் எறும்பு சாப்பிட்டால் 108 பிராமணர்கள் சாப்பிட்டதற்குச் சமம். எனவே இது எத்தனை புண்ணியம் வாய்ந்த செயல் என்று தெரிந்து கொள்ளுங்கள்.

இதனால், சனிபகவானின் தொல்லைகள் நம்மைத் தாக்காது. ஏழரைச்சனி, அஷ்டமச்சனி, கண்டச்சனி, அர்த்தாஷ்டகச்சனி சனி மகா தசை நடப்பவர்களுக்கு, இந்த செயல் ஒரு மிக பெரிய வரப்ரசாதம் ஆகும்.

உடல், ஊனமுற்றவர்களுக்கு காலணிகள், அன்ன தானம் - அளிப்பது, மிக நல்லது.



# ROYAL HOSPITAL (PVT) LTD

## *Celebrating 22 Years of Service*



Royal Hospital will send you a voucher worth Rs. 100 which can be redeemed from your next channeling at the Royal Hospital.

If you have not received a voucher and would like to receive a voucher please call our **Hot Line 2559268** and give us your postal address we will send your voucher to you.

- Termes & Condition Apply
- Valid until 31st March 2015




62, W.A. Silva Mawatha, Wellawatte, Colombo 06.
Tel: 2586581, 2584212, 2597565, 2559268 | Fax: 2597698
E-mail: manager@royalhospitals.com

---

22 Years

**ROYAL HOSPITAL (PVT) LTD**
*Care...when and where you need it most*


Please Contact: **2559268**
To make a appointment

- *Valid until 31st March 2015*

**Rs.100/-** Voucher

# வளமான வாழ்விற்கு ஃபெங் ஷுய்

கீழே கொடுக்கப்பட்டுள்ள படத்தில் வெள்ளைப் புள்ளியுடன் கூடிய கறுப்புப் பகுதி 'யின்' ஆகும். கறுப்புப் புள்ளியுடன் கூடிய வெள்ளைப் பகுதி 'யங்' ஆகும். 'யங்' ஆக்ரமிக்கும், அதிகாரம் செய்யும் மற்றும் நேர்முகத் தன்மையுடையதாகும். 'யின்' அடக்கமானது, ஊக்கமளிப்பது. எதிர்மறைத் தன்மையுடையதாகும். 'யின்' மற்றும் 'யங்' கின் சமநிலைத் தன்மை இன்மையே உடல் கோளாறுகளுக்குக் காரணமாகும். 'யின்' மற்றும் 'யங்' விதிகளுக்கேற்பவே பல சீன மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன.



## யின் மற்றும் யங் குறித்த சில உதாரணங்கள்

| யின் | யங் |
|---|---|
| பெண் | ஆண் |
| இருள் | ஒளி |
| குளிர் | வெம்மை |
| சுறுசுறுப்பற்றது | சுறுசுறுப்பானது |
| மென்மையானது | கடினமானது |
| ஈரமுடையது | காய்ந்தது |
| கீழ் | மேல் |
| ஒற்றைப்படை எண் | இரட்டைப்படை எண் |

| யின் | யங் |
|---|---|
| வடக்கு | தெற்கு |
| எதிர்மறை | நேர்முகம் |
| பள்ளத்தாக்கு | மலை |
| கீழ்முகம் | ஏறுமுகம் |
| தனிமை | கூட்டம் |
| சந்திரன் | சூரியன் |

## யின் - யங் வீட்டு உபயோகப் பொருட்கள் (Furniture)

| யின் | யங் |
|---|---|
| மென்மையான மெத்தை | கிரானைட் |
| மென்மையான தலையணை | மார்பிள் |
| இயற்கையான பொருள்கள் | இரும்புப் பொருள்கள் |
| ஈஸி சேர் | சுழல் நாற்காலி |

## யின் - யங் உணவு

| யின் | யங் |
|---|---|
| ஐஸ்க்ரீம், பழச்சாறு | பொரித்தவை, மசாலா |
| இனிப்பு வகைகள் | நிறைந்தவை, அசைவம் |
| யின் மனிதர் | யங் மனிதர் |
| மென்மையாகப் பேசுபவர் | வலிமையானவர் |
| பலவீனமான மனநிலை உடையவர் | புத்திக் கூர்மை மிக்கவர் |
| இயல்பான தன்மை உடையவர், | உரக்கப் பேசுபவர் |

கலைகளை விரும்புபவர் அழகு சாதனப் பொருட்களைப் பயன்படுத்துபவர்.

*தொடரும்*





# பக்ஷிராஜன்

பக்ஷிகளுக்கெல்லாம் அரசனாக விளங்கும் கருடனை பக்ஷிராஜன், கருட பகவான் என்றெல்லாம் அழைத்து வருகிறோம். இன்றும் ஆகாயத்தில் கருடன் பறந்து செல்வதைப் பார்த்தால், கைகூப்பி வணக்கம் செய்து வருகிறோம். பரமனுக்கு நித்யவாகனமான கருடனைப் பெரிய திருவடி என்றும், கருட ஆழ்வார் என்றும் வைணவம் போற்றி வருகின்றது. விஷ்ணு ஆலயங்களில், பெரிய திருவடியாக விளங்கிக் கொண்டிருக்கும் கருடனுக்கு தனிப்பட்ட சந்நிதியைக் கண்டு தரிசிக்கலாம். கருட பகவானை 'வேதஸ்வரூபம்' என்று சொல்லப் படுகிறது.

கருட பகவான் பரமனிடம் நெருங்கிய தொடர்பு கொண்டவர். பரமன் தனது வாகனமாகக் கொண்ட கருடனை நாம் தினமும் பிரார்த்தித்தால் மன வியாதி, தேக வியாதி ஒன்றும் நம்மை அணுகாது. மிக்க சக்தி வாய்ந்த கருட மந்திரத்தை ஜபித்தால், அறம், பொருள், இன்பம் எல்லாம் அடையலாம்.

நம் ஸ்வாமி நிகமாந்த மகாதேசிகன் கருடனை தியானம் பண்ணி, கருட தண்டகம், கருடபஞ்சாசத் என்றும் ஸ்லோகத்தை அருளி செய்து இருக்கிறார். கருட பஞ்சாசத்தைக் கூறும்பொழுது, கருட பகவான் ஆதிசேஷனை தனது இடது கையில் வளையாகவும், பூணூல் போல வாஸுகியையும், மாலையாக கார்க்கோடனையும் இன்னும் பல ஆபரணங்களாக ஸர்ப்பங்களையும் அணிந்து இருப்பதாகக் கூறுகிறார். இப்பேர்ப்பட்ட பெருமை வாய்ந்த கருட பகவானை நாம் தியானித்தால் விஷ ஜந்துக்களால் பயம் ஏற்படாது.

கருட பகவான் தனது , சரீரத்தில் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு ஸர்ப்பங்களை மிகவும் அழகாக அணிந்திருப்பதை திருவனந்தபுரத்தில் ஸ்ரீ பத்மனாபஸ்வாமி கோவிலில் அமைந்திருக்கும் கருடபகவான் சந்நிதியில் கண்டு தரிசிக்கலாம். இங்கு கருடன் சுமார் 6, 7 அடி உயரத்தில் நின்று கொண்டு தரிசனம் அளிக்கிறார். ஸ்ரீரங்கத்தில் ரங்கநாதன் கோவிலுக்குள் சென்றதும் மிகப் பெரிய கருடன் ரங்கநாதனுக்கு எதிரில் அமர்ந்து, திருக்கோலத்துடன் தரிசனம் அளிப்பதைக் காணலாம். மிகவும் வேகம் பொருந்திய கருடன் ஆகாயத்தில் பறந்து செல்லும் பொழுது தனது சிறகுகளை அடித்துக் கொண்டு ஆகாயத்தைச் சுத்தப்படுத்துகிறார். அந்த சமயத்தில் தனது திருக்கண்களால் பூமியையும் நோக்கி அனுக்ரஹம் செய்கிறார்.

ஸ்வாமி தேசிகன் இயற்றிய கருட தண்டகத்தில் அளவு கடந்த சக்தியைப் பரீக்ஷிப்பதற்காக, ஒரு பாம்புப்பிடாரன், ஸ்வாமியின் முன் ஒரு கொடிய ஸர்ப்பத்தைச் செல்ல விட்டான். இதைத் தெரிந்த ஸ்வாமி மிக்க சமாதானத்துடனிருந்து கருட தண்டகத்தை ஜபித்தார். ஆகாயத்தில் பறந்து கொண்டிருந்த கருடன் உடனே அப் பாம்பைத் தூக்கிச் சென்றது. பாம்புப்பிடாரனும் ஸ்வாமியின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டான். ஸ்வாமி அநுக்ரஹமும் செய்தார்.

கோதை தனது நாச்சியார் திருமொழியில் கண்ணனை பிருந்தாவனத்தில் கண்டு களிப்பதாக 10 பாசுரத்தால் அநுபவித்திருக்கிறார். அதில் ஒரு பாசுரத்தில்''

பிருந்தாவனத்தில் கண்ணன் விளையாடும் சமயத்தில் கண்ணனுக்கு வெயில் படாமலிருக்க, கருடன் தனது பெரிய சிறகுகளை அடித்துக் கொண்டு, கண்ணன் பிருந்தாவனத்தில் நடமாடும் இடங்களிலெல்லாம் அவன் தலைக்கு நேராக வானில் பறந்து செல்லுகிறான் என்பதாக கோதையின் அனுபவம்.

அப்பாசுரத்தை பார்ப்போம்:

**'மாலாய் பிறந்த நம்பியை**
**மாலே செய்யும் மணாளனை**
**ஏலாப் பொய்க ளுரைப்பானை**
**இங்கே போதக் கண்டீரே**
**மேலால் பரந்த வெயில்காப்பான்**
**வினதை சிறுவன் சிறகென்னும்**
**மேலாப் பின் கீழ் வருவானை**
**விருந்தா வனத்தே கண்டோமே'**

பறவையின் வடிவம் கொண்ட கருடன் எப்பொழுதும் பரமன் அருகிலிருந்து, பரமனைப் போலவே பக்தர்களுக்கு அநுக்ரஹம் செய்கிறார். தேவர்களுக்குப் பகைவரான அசுரர்களை தன் சிறகினால் அடித்து ஒழித்தவர். பரமனுக்கு வெற்றிக் கொடி போல் விளங்கும் கருட பகவானை, நாம் பிரார்த்தித்து வந்தால் வாழ்க்கை வெற்றியுடன் விளங்கும்.

# ராசிகளின் சூட்சுமம்

## மேஷம்:

**"ஆடோடு வாதம் செய்யேல்"**

இந்த இராசிக்காரரிடம் வாதம் செய்யக்கூடாது. ஏனென்றால் இவர்கள் பிடிவாதமானவர்கள். அமர்ந்து பேச வேண்டும். எதையும் முயற்சி செய்து வெற்றி பெறும் ஆற்றலை வளர்த்துக் கொண்டு வெற்றியும் பெறுவார்.

## ரிஷபம்:

**"எருதைத் துணை கொள்"**

இவரை எப்பொழுதும் எதிரியாக நினைக்கக் கூடாது. இவரிடம் நட்பு வைத்துக் கொள்வது நல்லது. இவர்களை அன்பு, பாசத்தால் கட்டிப் போடலாம். இவருக்கு உதவிட அனைவரும் முன் வருவார்கள். இவரின் நட்பு நலம் தரும்.

## மிதுனம்:

**"தண்டோடு உட்புகேல்"**

இவர்கள் சுயமரியாதையை அதிகம் எதிர்பார்ப்பார்கள். எப்பொழுதும் சுறுசுறுப்புடன் காணப்படுவார்கள். பிறரை சோதிக்கும் குணமும் பெற்றிருப்பர்.

## கடகம்:

**"நண்டானுக்கு இடம் கொடேல்"**

இருக்க இடம் கொடுத்தால், மடத்தைப் பிடிக்கும் கதைபோல் ஆகிவிடுவார். நினைவாற்றல் உள்ளவர்கள். பெரிய மனிதரைப் போல் நடந்து கொள்வார். தனக்கு ஆதாயம் இருக்கும் காரியத்தில் மட்டுமே ஈடுபடுவார்கள். பாசம் மிக்கவர், நன்றி உடையவர் நடந்ததை மறக்க மாட்டார்.

## சிம்மம்:

**"சிம்மம் சீறிப் பாய்வான்"**

துணிவே துணை என்பார். எதையும் அடக்க முயற்சிப்பாரே தவிர, அடங்கிப்போக மாட்டார். தெய்வபக்தி உடையவர், பணவிசயத்தில் சிக்கனமாக இருக்க மாட்டார். எதற்கெடுத்தாலும் கோபப்படுவார்.

## கன்னி:

**"கன்னி கைகொடுப்பாள்"**

இவர் அனைவருக்கும் பரிவுடன் உதவிசெய்வார். லாபம், நஷ்டம் எதுவாகினும் தன்னைச் சார்ந்ததாய் ஏற்றுக்கொள்வார். இவர்களை நம்பி எதுவும் செய்யலாம்.

## துலாம்:

**"துலாம் எவ்விடமும் ஜெயிக்கும்"**

இவர் தராசின் முள்ளைப் போல நியாயவான். வாழ்வில் பல போராட்டங்களைச் சந்தித்து வெற்றி பெறுவார்.

## விருச்சிகம்:

**"விருச்சிகனை விரும்பிப் பாராட்டு"**

இவர்கள் ஏடாகூடமாய் புத்தி கொண்டவர்கள். பிறரிடம் குற்றம் கண்டு பிடிப்பார்கள்.

## தனுசு:

**"நியாயம் அறிந்து நடப்பான்"**

இவருடன் பேசித்தான் வளைக்க முடியும். சாதாரணமாக வளைந்து விடமாட்டார்.

### மகரம்:

**"மகரத்தானோட வாதாடாதே"**

இவர்கள் சிறந்த தொழில் அதிபராகவும், தொழிலாளியாகவும் சிறந்து விளங்குவார்கள். சுய முயற்சியில் முன்னேற்றம் அடைந்து வெற்றி பெறுவார்கள். வம்பு சண்டைக்குப் போக மாட்டார்கள். வந்த சண்டையைவிடவும் மாட்டார்கள்.

### மீனம்:

**"மீனத்தார் யோசியார்"**

இவர்கள் எப்பொழுதும் வீண் வம்பு இழுப்பார்கள். பிறரை நன்கு புரிந்து கொள்ள மாட்டார்கள். முயலுக்கு மூன்றுகால் என்று பிடிவாதம் பிடிப்பார்கள். எதையும் யோசிக்காமல் செய்வார்கள். எதைப்பற்றியும் கவலைப்பட மாட்டார்கள்.

### கும்பம்:

**"கும்பம் குன்றில் நிற்கும்"**

வெற்றி ஒன்றே குறிக்கோளாய் செயல்படுவார். நல்ல சிந்தனையாளர், பொறுமைசாலி, திறமைசாலி, இவரின் உழைப்பில் இவர் குடும்பம், மற்றும் சுற்றமும் - நட்பும் கூட வாழும்.

### சுபசகுனம் நன்மை தரும்

எதிரே வரும் சுமங்கலிப் பெண், நிறைகுடம், திருமணம், மயில், நல்ல வார்த்தை கேட்பது, பூக்கள், வெற்றிலை பாக்கு, நறுமணம், பால், உப்பு, காகம் வலம் போவது, யானை இவற்றைப் பாத்துச் செல்வது நன்மை ஆகும்.

## பிறந்த திகதிக்கான எண்ணும் - எழுத்தும்


| எண் | எண்ணுக்கு உரிய எழுத்து | எண்ணின் ஆதிக்க கிரகம் |
|---|---|---|
| 1. | A- I- J- Q- Y | சூரியன் |
| 2. | B- K- R | சந்திரன் |
| 3. | C- G- L- S | குரு |
| 4. | D- M- T | ராகு |
| 5. | E- H- N- X | புதன் |
| 6. | U- V- W | சுக்கிரன் |
| 7. | O- Z | கேது |
| 8. | F- P | சனி |
| 9. | | செவ்வாய் |

**குறிப்பு:** இக்கலையில் 9 ஆம் எண்ணுக்கும் எழுத்துகளுக்கும் தொடர்பில்லை. அங்ஙனமே எண்களில் 'O' க்கு தனித்தன்மை இல்லை. உதாரணமாக 10 என்கிறபோது 1ஆம் எண்ணின் இயக்க சக்தியும் 80 என்கிற போது 8 ஆம் எண்ணின் இயக்க சக்தியுமே பிரதிபலிக்கிறது என்பதே விதி.

## மனிதனின் சிந்தனைக்கு...

உனது திறமை அறிவாற்றல் அனைத்தும் இறைவன் தொண்டுக்கு அளித்தால் அகந்தை அழிந்து அமைதி என்றும் நிலைக்கும்.

# பிரமாதம்... பிரமாதம்!




நாம் பிரமாதமாகப் பிறர் மெச்சும் முறையில் ஆடை அணிந்தால் மட்டும் போதாது. புதிதாக மணமான தம்பதிகளுக்கும், மணமாக வேண்டிய பருவத்திலுள்ள குமரி வாலிபனுக்கு அதுவும் ஒரு ஒரு ப்ளஸ் பாயிண்ட்.

அமர்க்களமாய் செட் போட்டாலும், முன்னணி நடிகக் கும்பல் இருந்தாலும், சத்தான கதை அமைப்பு இல்லாவிட்டால் படம் தியேட்டரை விட்டு ஓடிவிடும். அதுபோல் எடுப்பான ஆடை அலங்காரத்தோடு திறமையும், உழைப்பும் இருந்தால்தான் வாழ்க்கையில் பிரமாதமாக முன்னுக்கு வரமுடியும்.

மாணவர்கள் போட்டி போட்டுக் கொண்டு அக்கறையோடு படித்தால் பிரமாதமான மதிப்பெண் பெறலாம். மருத்துவர்கள் கருத்தொன்றி வைத்தியம் செய்தால் பிரமாதமான புகழ் தானே தேடிவரும். வழக்கறிஞர்கள் கவனமாக ஒருமுகப்பட்டு வாதாடும் வழக்குகள் பிரமாதமான வெற்றியாகப் பல நாள் பேசப்படுகிறது.

பத்திரிகையாளர்கள் சமூக நன்மையைக் கருத்தில் கொண்டு கதை, கட்டுரைகளைத் தேர்ந்தெடுத்தால் பிரமாதமான நற்பெயர் பத்திரிகையை நடத்துபவருக்குக் கிடைக்கும். எழுத்தாளர்களும் தீர்க்க சிந்தனையோடு படைப்புகளை உருவாக்கினால் பிரமாதமான கீர்த்தி கிடைக்கும்.

'சமையல் பிரமாதம்' என்று குடும்பத்தினர் புகழவேண்டும் என்ற அக்கறை குடும்பத்தலை விக்கு வேண்டும். 'பிரமாதமான குடும்பம்' என்று ஊரும், உறவும் புகழ அதுமட்டும் போதாது. விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும், ஒற்றுமையும், அன்பும், பாசமும் குடும்ப அங்கத்தினரிடம் நிறைந்திருக்க வேண்டும்.

பூத்தொடுப்பவர் வேகமாகவும், அழகாகவும் தொடுத்தால் 'பிரமாதம்' என்று மனம் நிறையப் பாராட்டுங்கள். திறமையாகக் கோலம் போடுபவரை 'பிரமாதம்' என்று கொண்டாடுங்கள். சுண்ணாம்பு அடிப்பவரை, பெயிண்ட் பண்ணுபவரை நீங்கள் 'பிரமாதம்' என்று சிறப்பியுங்கள். உங்களின் நண்பர் கூட்டம் பிரமாதமாக பிரமிக்கும் வகையில் பெருகும்.

கணக்கை, வீட்டுப்பாடத்தை ஒழுங்காக, கவனமாக முடிக்கும் உங்கள் செல்வங்களைப் 'பிரமாதம்' என்று சொல்லிப் பாருங்கள். உங்கள் பாராட்டைப் பெற மேலும் அக்கறையுடன் செயல்படுவார்கள்.

'என் பிள்ளை, மருமகள் பிரமாதமாய் என்னைக் கவனிக்கிறார்கள்' என்று பெற்றோரைப் பேச வைப்பது இந்த விச்ராந்தி யுகத்தில் இளைய தலைமுறையின் சாதனை!

"எங்கள் ஆசிரியர் பாடம் நடத்தினால் இப்படி அப்படி திரும்பமாட்டோம்' என்று மாணவர்களைப் பேசவைப்பது ஆசிரியரின் பிரமாதமான ஆற்றல்.

படத்தைப் பார்த்ததும் கதையைப் படிக்கத் தூண்டுவது ஓவியரின் 'பிரமாதம்'.

ரன்களாய் குவிப்பதும், விக்கெட்டை வீழ்த்துவதும் கிரிக்கெட்டில் 'பிரமாதி யாய்' பேசப்படும்.

வயதான காலத்திலும் திறமையாய் தொழில் நடத்துபவர் பிரமாதமானவர். உயிரைத் துச்சமாக மதித்து, கருணையையே நெஞ்சில் நிரப்பி நீரிலும், நெருப்பிலும் தம்மைப் போன்ற சிறுவர், சிறுமியரைக் காப்பாற்றியதற்காக கௌரவிக்கப்படுகிறார்களே அந்த இளம் அரும்புகள் 'பிரமாதி'!

இலங்கைக்காக சாதனைகள் புரிந்து, உலக அரங்கில் இலங்கைப் பெருமையை நிலைநாட்டும் அனைத்துத் துறையினரும் 'பிரமாதி'கள்தான'!

நீங்கள் 'பிரமாதி'யாக முயற்சி செய்யுங்கள். உங்கள் குடும்பத்தினரை பிரமாதியாக்க ஊக்கமளியுங்கள்! ஒழுக்கமும், பண்பும், ஒற்றுமையும், அன்பும் கொண்டு வாழும் அனைவரும் 'பிரமாதி'கள்தான்!




Tel: 263 6818 Shop: 232 9426 | Fax: 263 5399 | Email: mcsons@sltnet.lk

**தயாரிப்பாளர்கள்**

Mcsons Organics (Pvt) Ltd.
672/3, Galle Road,
Off Mayura Mw, Ratmalana.
Phone: 2636818

**ஏக விநியோகஸ்தர்கள்**

பிரபா டிரேடிங் கம்பனி
31, கபோஸ் லேன்,
கொழும்பு 11.
Tel: 2329426, 2422750


# POTHYS



**Specialist in**

• Wedding Sarees • Shalwar Kameez • Children Wears • Readymades

**177A, Galle Road, Wellawatte, Colombo 6. | Tel: 0112 559 716**


இரணியன் வதைப் படலம் முடிந்ததும் நரசிம்மமூர்த்தி சிலையின் தலை அசைந்து, ஒரு பெரிய கர்ஜனை எழுந்தது. சபையோர் மெய் சிலிர்த்தனர்.
நரசிம்மமே ஒப்புதல் அளித்துவிட்டார். நீர் கவியரசர் மட்டுமல்ல: சிறந்த பக்தர், கம்பநாட்டாழ்வார்!
கம்பநாட்டாழ்வார்! வாழ்க! வாழ்க! இராமாவதார காவியம் உலகெலாம் பரவுக! வாழ்க பல்லாண்டு!
9
அரங்கேற்றம் நிறைவேறியதும்...
காப்பிய அரங்கேற்றம் மங்களகரமாக நிறைவேறிவிட்டது. சைவ சீலர்களான தில்லைவாழ் அந்தணர்களின் அங்கீகாரத்தையும் பெற்றுவிட்டால் தமிழ் உலகமே ஒப்புதல் தந்துவிட்டதாக ஆகும்.
அவ்வாறே தில்லை செல்கிறேன் சுவாமி!
10
தில்லை மூவாயிரவரும் ஒன்றுசேர்வது அரிதாக இருந்ததால் கம்பநாடர் பல நாள் காத்திருக்க நேர்ந்தது. ஒரு நாள் இறைவன் திருவுள்ளப்படி அந்தணர் தலைவர் மகன் பாம்பு தீண்டி இறந்துவிட்டான். எல்லாரும் ஒருங்கே அங்குக் கூடியிருந்ததைக் கம்பர் கண்டார்.
நாகபாசப் படலத்திலிருந்து சில பாடல்களைப் பாடுகிறேன். இறையருளால் பிள்ளை பிழைத்து எழக் கூடும்!
11
கம்பநாடர் பாடிக்கொண்டிருக்கும்போதே ஒரு நாகம் எங்கிருந்தோ வந்து, பாலகனைக் கடித்த இடத்தில் மீண்டும் தீண்டி விஷத்தை உறிஞ்சிச் சென்றது.
12
பாலகன் உயிர் பெற்று எழுந்துவிட்டான். அதன் பின்பு தில்லைக்கூத்தன் அரங்கத்தில் மூவாயிரவர் முன்னிலையில் இராமவதாரம் அரங்கேற்றப்பட்டது.
கம்பநாடரே! அருட்செல்வரே! உமது காப்பியம் உலகம் உள்ளளவும் புகழ் மணக்க விளங்குவதோடு, அதனைப் படிப்பவர், கேட்பவர் அனைவரும் எல்லா நலன்களும் பெற்றுத் திகழ்வார்கள். நீர் கவியரசருக்கெல்லாம் அரசர்! கவிச் சக்கரவர்த்தி!
கவிச்சக்கரவர்த்தி கம்பர் வாழ்க! வாழ்க!
13

# செய்வினை, கிரக தோஷம் நீக்கும் நம் முன்னோர்களுக்கான வழிபாடு

# பித்ருக்கள் பூஜை



நம் குடும்பத்தில் நம்மவர்களுடன் வாழ்ந்து மறைந்த, நம் முன்னோர்களுக்குச் செய்யும் வழிபாடு. இந்த வழிபாட்டினை குடும்பத்தில் இருப்பவர்கள் தொடர்ந்து செய்து வர வேண்டும். அதனால் பல நன்மைகளை நாம் விரைவில் பெறலாம்.

சில முக்கிய தினங்களில் சிறப்பு வழிபாடுகள் நடத்தினாலும், தினமும் அவர்களை நம் மனதில் எண்ணி தியானித்து வணங்கி வர வேண்டும். நம் முன்னோர்களின் மோட்ச கதிக்காக, நம் குடும்பத்தினர் அனைவரும் ஒன்று கூடி, இறைவனைப் பிரார்த்திக்க வேண்டும்.

நம் பித்ருக்கள் நமக்கு நல்லது செய்யக் காத்துக் கொண்டு இருக்கிறார்கள். நாம்தான் பிரார்த்தனை செய்து அவர்களை வேண்டிக் கேட்டுக் கொள்ள வேண்டும். தகுந்த நேரங்களில் ஓடிவந்து உதவி செய்வார்கள். ஆபத்துக் காலங்களிலும், அவர்களின் கருணையால்தான் தலைக்கு வந்தது தலைப்பாகையுடன் விலகி காப்பாற்றப்படும். நம் முன்னோர்கள் மறைந்த தினம், அமாவாசை, மாதப் பிறப்பு, சூரிய கிரணம், சந்திர கிரணம் ஆகியவற்றின் போது, அவர்களுக்காக சிறப்பு வழிபாடு நடத்த வேண்டும்.

நாம் அவர்களுக்காகச் செய்யும் வழிபாட்டின் பலன்கள், விரைவில் உடனடியாக நம்மையே வந்து சேரும். பித்ருக்களின் ஆசியாகக் கிடைக்கும் அபூர்வ சக்திகளின் நன்மைகள் அளவிட முடியாது.

பித்ருக்களுக்கு அதிகம் செலவு செய்துதான் பூஜை நடத்த வேண்டும் என்பது இல்லை. அவரவர் வசதிக்கு ஏற்ப, எளிய முறையிலும் வழிபாடு செய்யலாம்.

குடும்பத்தில் தொடர்ந்து ஏற்படும் கடன் பிரச்சனைகளும், நிம்மதிக் குறைவும், சண்டை சச்சரவுகளும், திருமணத் தடைகளும், தீராத நோய்களும், இப்படிப் பல வகையிலும் ஏற்படும் தரித்திரம், பீடை முதலியவற்றையும் நீக்கும் சக்தி கிடைக்கும்.

நாம் பித்ருக்களிடம் முறைப்படி வேண்டி பிரார்த்தனை செய்தால், அவர்களின் சக்தியால் நம் குறைகள் தீர்த்து வைக்கப்படும். நலம் உண்டாகும். பித்ரு பூஜை நடத்துவது புண்ணிய காலங்களில் திதி, தர்ப்பணம் ஆகியவை செய்தால், வாழ்நாள் முழுவதும் நன்மைகள் வந்து சேரும். நம் முன்னோர்களை மறந்துவிடக் கூடாது.

குடும்பத்தில் எந்த ஒரு முக்கிய சுப நிகழ்ச்சிகள் நடந்தாலும், நம் முன்னோர்களை வணங்கித்தான் செய்ய வேண்டும். அவர்களின் ஆசியைப் பெற்ற பின்னரே, மற்ற செயல்களைச் செய்ய வேண்டும். நம் குடும்பத்தில் இருந்து மறைந்தவர்கள் உடனே மறுபிறப்பை எடுப்பது இல்லை. அவர்களின் ஆவி நம் குடும்பத்தையே சுற்றி வந்து கொண்டு இருக்கும். அவர்களே மீண்டும் தகுந்த நேரத்தில் நம் குடும்பத்தில் பிறப்பார்கள்.

முன்னோர் வழிபாடு செய்யும் காலத்தில் பசுக்களுக்கு புல், அகத்திக்கீரை, அரிசி, அன்னம் கொடுப்பது நல்லது. வழிபாடு செய்த பின் ஏழை, எளியவருக்கு அன்னதானம் செய்ய வேண்டும்.

முன்னோர்களின் ஆசீர்வாதம், செய்வினை, கிரகதோஷம் முதலியவற்றை நீக்கும் சக்தி கொண்டது. முன்னோர் புகைப்படம் முன்னால், குத்துவிளக்கேற்றி வைத்து, அவர்களுக்கு விருப்பமான உணவு வகைகளைப் படைத்து வைத்து வணங்கலாம்.

அன்றைய தினம் விரதம் இருந்து சைவ உணவு ஒரு வேளை மட்டும் சாப்பிடலாம். இரவு பால், பழமும் சாப்பிடலாம். தொடர்ந்து முன்னோர் வழிபாடுகள் செய்பவர் வாழ்வில் இன்னல் அகன்று, படிப்படியான முன்னேற்றம் அடைவார்கள். வாழ்வில் மகிழ்ச்சியுடன் இருப்பார்கள்.

# கவிச் சக்கரவர்த்தி கம்பர்

-யோகா


சோழ அரசரது அரசவையில் ஒரு நாள்...




ஒட்டக்கூத்தருக்குச் சிறிது மனவருத்தம் இருந்தது. பழம்பெரும் புலவரான தம்மைவிடக் கம்பருக்கு அரசர் அதிக மதிப்புக் கொடுத்துப் பெருமைப்படுத்துவது அவருக்குப் பிடிக்கவில்லை.




ராமாயணத்தைத் தமிழில் இயற்ற இரு புலவர்களுக்கும் போதிய சௌகரியங்களைச் செய்து கொடுத்திருந்த குலோத்துங்க சோழன் சில மாதங்கள் சென்றபின்....




கம்பர் உண்மையில் இயற்றத் தொடங்கவேயில்லை என்று கருதிய ஒட்டக்கூத்தர் கம்பரிடம்...



சேதுப் படலப் பாடல் ஒன்றைக் கம்பர் பாடிக் காட்டினார்.




அன்றுமுதல் பொறாமை காரணமாக ஒட்டக்கூத்தர் ராமாயணம் இயற்றுவதை நிறுத்திவிட்டார். கம்பரோ கலைவாணியின் திருவருளால் காப்பியத்தை இனிதே இயற்றி முடித்துவிட்டார். அரசன் குலோத்துங்கனுக்கு அளவிட முடியாத மகிழ்ச்சி.




ஸ்ரீரங்கத்தில் வைணவப் பரமாசாரியான ஸ்ரீமந்நாதமுனிகளைச் சந்தித்து, வணங்கி, வந்த காரியத்தைத் தெரிவித்தார் கம்பநாடர்.




அழகியசிங்கர் மேடையில் ஸ்ரீமந்நாதமுனிகளின் முன்னிலையில் இராமாவதார அரங்கேற்றம் தொடங்கிற்று.



# CM

## CM CONDOS




உங்களுக்கான ஓர் ஆடம்பர சொகுசு இல்லம்

**தெஹிவளையில்**







**Centrally Located on the Border of Colombo 06, Between Galle Road & Marine Drive, at No.14, Ramanathan Avenue, Dehiwala.**

**1st State of the Art Condominium Development in Dehiwala.**

1,2 & 3 Bed Room Ocean & City View Apartments, Rs. 6.5 Million Upwards.

Attractive Discount for 100% Payment or for Interest Free 36 Monthly Installment Plan.


**Civi - Mec Construction (Pvt) Ltd.**

Office 156, 1/1, W.A. Silva Mawatha,
Colombo 06.
Tel: + 94 11 2 367 878
Email: info@civimec.com

**Call:**
**0777 363 607 / 0777 786 440**
**0757 777 677**


GAEL
SAREE MANDIR
Specialist in Wedding & Homecoming Sarees
No. 52, W. A. Silva Mawatha, Wellawatte, Colombo 06.
Tel: 011 2058308 | Mobile: 0777 410198
Hotline: 0777 410184
Visit us on Facebook
www.facebook.com/Gaelsareemandir



48/A, Galle Road, Dehiwala. Tel: 0112 723029
144, Keyzer Street, Colombo 11. Tel: 0112 446982
225, Main Street, Negombo Tel: 031 2222024



றைவில்லா அழகு!

# BENZAAR

***Makes the Difference***

No. 45, Galle Road, Wellawatte, Colombo 06.
Tel: +94 112 505 440 |
Email: info@benzaar.lk Skype: benzaar.lk
Web: www.benzaar.lk









# PRASANNA

**MONEY EXCHANGE (PVT) LTD**








No. 57, Galle Road, Colombo 06.

**Tel : 2 591 420, 2 591 421**

**Mobile: 077 948 4211 / 077 406 5484**

Fax : 2 504108


Email : prasannaexchange@gmail.com

Money changer Permit No. ECD/MC/0058 A






Nalenis
HERBAL BEAUTY
பெண்களுக்கான
ஒரு அரிய வாய்ப்பு!
Permanent Hair Removing
Before
After
உங்கள் முகத்தில்
இருக்கும் முடியை
நிரந்தரமாக அகற்ற
ஒரு வாய்ப்பு.
No Laser Treatments, No Creams
Before
After
LADIES ONLY
No Side Effects
1/1, Rasavalli Lane, Off Hampden Lane, Colombo 6.


CITY DRIVING SCHOOL
LEARN TO DRIVE WITH A
AUTO/MANUAL CAR LESSONS
• Defensive Driving Classes
• Reassuring
• International Driving Licenses
• Weekend & Weekday Classes
• Private Lessons in A/C Cars
• Calm & High Qualified Instructors
• Free Home Pick-Up (Limited Areas)
• No Hidden Costs
Vitz
0777 344 844
A/C CARS
No. 5, Vaverset Place, Colombo 06. | Tel: 011 505 672

ஹரேகிருஷ்ணா

# பகவான் ஸ்ரீ கிருஷ்ணரை ஏன் முழு முதற் கடவுளாகக் கொள்கிறீர்கள்?

ஈஸ்வர பரம கிருஷ்ண சச்சிதானந்த விக்ரஹ:
அநாதிர் ஆதிர் கோவிந்த சர்வ காரண காரணம்

எல்லாக் காரணங்களுக்கும் அதாவது இந்தப் புவி இயங்குவதற்கு காரணமாயிருக்கும் படைத்தல், காத்தல், அழித்தல், என்பவற்றிற்கு காரணராக தொடக்கம் என்பது இல்லாத ஆதியானவராக, என்றும் இருப்பவராய், அறிவுமயமாகவும் ஆனந்த வடிவினருமாய் இருக்கும் ஸ்ரீ கிருஷ்ணரே எல்லாவற்றையும் ஆளும் பரமேஸ்வரராக இருக்கிறார். அவரே கோவிந்தர் எனப்படுகிறார். என பிரமதேவர் தன் பாராயணத்தில் கூறியிருக்கிறார். (பிரமசம்ஹிதை)



ஓம் நமோ பகவதே வாசுதேவாய
ஜன்மாத்யஸ்ய யதோ அன்வயாத் இதரதஸ் சார்த்தேசு
அபிக்ஞ ஸ்வராட்:
தேனே ப்ரஹ்ம ஹிருதா ய ஆதிகவயே முஹ்யந்தியச் சூரய:
தேஜோ வாரிம்ருதாம் யதாவினிமயோ யத்ரத்ரிஸர்கோ அமிருஷா
தாம்னாஸ்வேன ஸதாநிரஸ்த குஹகம் சத்யம் பரம் தீமஹி

இங்கு வேதங்களைத் தொகுத்தவரும் வேதாந்த சூத்திரத்தை எழுதியவரும் மகாபாரதம் மற்றும் புராணங்களையும் தொகுத்த வேத வியாசர் "ஜன்மாத் யஸ் யத" எனும் வேதாந்த சூத்திரத்திற்கு விளக்கமளிப்பது போலவும், பரமபுருஷர் பகவான் கிருஷ்ணருக்கு வணக்கத்தைச் செலுத்தி நூலைத் தொடங்குவது போலவும் மந்திரங்கள் எல்லாவற்றுள்ளும் சிறந்த மந்திரமாக விளங்கும் காயத்திரி மந்திரவடிவில் "சத்யம்பரம் தீமஹி" என அமைத்துள்ளார். இங்கு தோற்றமளிக்கும் பிரபஞ்சத்திற்கு காரணமாகிய படைத்தல், காத்தல், அழித்தல், எனும் காரணங்களுக்கெல்லாம் மூல காரணராக விளங்குபவர் ஸ்ரீ கிருஷ்ணரே அந்த பகவானுக்கு வாசுதேவருக்கு எனது வணக்கங்கள் அந்த முழுமுதற்பொருளை பரம சத்தியத்தை அதாவது எல்லாவற்றிற்கும் மேலாக இருக்கும் அந்த உண்மைப் பொருளைத் தியானிக்கின்றேன் என்று கூறுகிறார்.

பகவான் என்றால் வேத விளக்கங்களின்படி ஆறு ஐஸ்வரியங்கள் அதாவது கல்வி, செல்வம், வீரம், புகழ், அழகு, வைராக்கியம் அல்லது துறவு ஆகிய ஆறு ஐஸ்வரியங்களை நிறைவாக நூற்றுக்கு நூறு வீதம் உடையவரே பகவான் எனப்படுகிறார்.

ஸ்ரீமத்பகவதம் "கிருஷ்ணஸ்து பகவான் ஸ்வயம்" இயல்பாகவே கிருஷ்ணரே இவற்றைப் பெற்றவர் அவர் தான் பகவான் என்பதற்கு பொருத்தமானவர். பகவான் என்றால் முழுமுதற் கடவுள்.

வேதவியாசர் தொகுத்த மஹாபாரதத்திலேயே விஷ்ணு சகஸ்ர நாமமும் பகவத்கீதையும் காணப்படுகிறது.

தர்மருக்கு பீஷ்மர் உபதேசிக்கும் சந்தர்ப்பத்தில் தர்மர் கேட்ட கேள்விகள் ஆறு அவற்றுள்

முதலாவது ஒன்றேயாகிய தெய்வம்

எது?

அடுத்து ஒன்றேயாகிய புகலிடம் எது?

3வது எவனைத்துதித்து மனிதர்கள் உயர் நலனைப் பெறுவார்கள்?

4வது எவனை அர்ச்சித்து மனிதர்கள் உயர் நலனைப் பெறுவார்கள்?

5வது எந்த தருமமானது எல்லாத் தருமங்களிலும் சிறந்த தருமமாக தங்களால் கருதப்படுகிறது?

6வது பிறவியடைந்த ஐந்து எதை ஜபித்துப் பிறந்துழலும் தளையினின்று விடுபடும்?

இக் கேள்விகளுக்கு விடைகளையும் விஷ்ணுசக - ஸ்ர நாம் ஸ்தோத்திரத்திலேயே காண்கிறோம்... முதலாவது கேள்விக்குப் பதிலாக

(கிம் ஏகம் தைவதம்) பரிசுத்தமானவற்றுள் எவன் பரிசுத்தமாயும் மங்களமானவற்றுள் மங்களமாயும், தேவதைகளுக்குள் தேவதையாகவும், உயிர் களுக்குள் உயிர் தரும் அழிவற்ற பிதாவாயும் எவன் உள்ளானோ அவனே உலகில் ஒன்றாகிய தெய்வம் (என்கிறார் பீஷ்மர்)

இதையே பகவத்கீதையில் அர்ச்சுனன் கூறுகிறார். பரம் பரம்மபரம் தாம பவித்ரம் பரமம் பவான் புருஷம் சாஸ்வதம் திவ்யம் ஆதிதேவம் அஜம் விபும் ஆகுஹுஸ் த்வாம் ரிஷய: ஸர்வே தேவரிஷிர் நாரதஸ் ததா அஸிதோ தேவலோ வியாச: ஸ்வயம் சைவ ப்ரவீசிமே

நீரே ப்ரஹ்மம் உன்னத இருப்பிடம், மிகவும் பரிசுத்தமானவர். பரமசத்தியம், நீரே நித்தியமானவர், திவ்யமானவர் ஆதிதேவர் பிறப்பற்றவர், மிகப் பெரியவர் - உம்மைப் பற்றிய இந்த உண்மையினை நாரதர், அஸிதர், தேவலர் வியாசர் போன்ற மிகச் சிறந்த ரிஷிகளும் உறுதி செய்துள்ளனர். இப்பொழுது நீரே இதனை எனக்கு அறிவித்துள்ளீர்.

சர்வயோனிசு கௌந்தெய
மூர்த்தய: ஸம்பவந்தி யா:

தாஸாம் ப்ரஹ்ம மஹத்யோனீர்
அஹம் பீஜப்ரத: பிதா //

பிறப் பெடுத்திருக்கும் அனைத்து ஜீவராசி களுக்கும் நானே வித்திடும் தந்தையாக இருக்கிறேன் என பகவத்கீதை 14-4ல் பகவான் கூறுகிறார். இவ்விதம் சாஸ்திரங்கள் எங்கும் பரந்த உண்மையாக பரம சத்தியம் அல்லது பரம்பொருள் பரம புருஷர் பகவான் கிருஷ்ணரே என்று தெளிவாக்கப்படுகிறது.




அனைத்து விளம்பரங்களும் ஏற்றுக்கொள்ளப்படும்

Daily News | தினமின | Dinamina | வீரகேசரி | Lankadeepa | தினகரன் | Sunday Observer | Hit Ad

flex Advertising
Dial: 0777-555026
4, IBC Road, Wellawatte.
www.flexgraphic.lk



# பெண்கள்

## செய்ய வேண்டியதும் செய்யக் கூடாததும்

- கடவுளிடம் நம்பிக்கை வையுங்கள். கடனைக் கழிப்பது போல் கோயிலுக்குப் போவதாலோ அல்லது மனதை வெளியில் அலையவிட்டு வீட்டில் பூஜை செய்வதாலோ, கோயிலுக்குப் போய் பிறரிடம் குடும்பக் கதை, ஊர்க்கதை. அக்கப்போர் பேசுவதாலோ கடவுளை வணங்கினோம் என்ற பெயர்தான் ஆகுமே தவிர அதன் பலன் கிடைப்பதில்லை.

- கடவுள் மீது உறுதியான, திடமான நம்பிக்கை வையுங்கள். கோயிலுக்குச் சென்றால் இறை சிந்தனை தவிர வேறு எந்த சிந்தனையோ, பேச்சோ கூடாது. இறைவனின் திருநாமமோ, சுலோகமோ, ஸ்தோத்திரமோ மட்டும் மனதிற்குள் சொல்லிக் கொண்டிருக்க வேண்டும்.

- நீங்கள் நம்பிக்கை வைப்பது உங்களுக்காக மட்டுமல்ல, உங்கள் குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் முன்னேறுவதற்குத்தான். இப்படிப்பட்ட உறுதியான, திடமான, நம்பிக்கையுடன் கடவுள் வழிபாட்டை பெண்களால் மட்டுமே செய்ய முடியும். தாய் செய்ய முடியும், மகள், சகோதரி, மருமகள் ஆகியோர் மட்டும் செய்ய முடியும். ஏனென்றால் அவர்கள் குடும்பத்தை தாங்குகிறவர்கள். நடத்திக் கொண்டிருப்பவர்கள்.



- நேரம் தவறாமையைக் கடைப் பிடியுங்கள். வீட்டில் உள்ள ஒவ்வொருவரும் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட வேலைகளைச் செய்யப் பழக்குங்கள். நினைத்தபோது படுக்கையை விட்டு எழுவது, நினைத்தபோது சாப்பிடுவது, அதிக நேரம் தூங்குவது, இரவில் அதிக நேரம் விழித்திருப்பது ஆகியவை கூடாது. இதை நீங்கள் செய்யாது முன்மாதியாக இருந்து காட்ட வேண்டும். சுதந்திரம் கொடுப்பது வேறு. நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொடுப்பது வேறு. இரண்டிற்கும் உள்ள வித்தியாசத்தை தெரிந்து கொள்ளுங்கள்.

- பிறர் எதையும் இனாமாகக் கொடுத்தால், அல்லது பாதி விலையில் கொடுத்தால் வாங்காதீர்கள். நம்மைப் பிறர் தங்கள் வலையில் வீழ்த்த இதுபோன்று செய்வார்கள். இதை நீங்கள் மட்டும் அல்ல உங்கள் குடும்பத்தினரும் கடைப்பிடிக்க வலியுறுத்துங்கள். யாரும் எதையும் இலவசமாகவோ, விலை குறைத்தோ கொடுக்க மாட்டார்கள். இப்படிக் கொடுத்தால் அதற்கு ஒரு பின்னணி நிச்சயம் இருக்கும். எனவே இவைகளுக்கு ஆசைப்படாதீர்கள்.

- தினசரி பேப்பர்களில் படித்தாலும், டி.வியில் பார்த்தாலும் இன்றும் பலர் சிறிது பணம் கட்டினால் மிக அதிகமாகத் திரும்பிவரும் என்று நம்பி பணம் கட்டுகிறார்கள். பிறகு ஏமாந்துபோய் கண்ணீர் விடுகிறார்கள். இதற்கு ஓர் முற்றுப்புள்ளி வையுங்கள்.

- இனி குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்கலாம், விரைவில் அதிகப் பணம் சம்பாதிக்கலாம் என்று பிறர் உங்களை மூளைச் சலவை செய்தாலும், விழிப்புடனும், உறுதியுடனும் இருந்து இவை எல்லாம் ஏமாற்று வேலைகள், எனக்கு இவை வேண்டாம் என்று ஒதுங்கி இருங்கள். இதில் மிக்க உறுதியுடன் செயல்பட வேண்டும்.

- உங்கள் உறவினர்கள், நண்பர்கள், பக்கத்து வீட்டுக்காரர்கள் ஆகியோர் இவ்வாறு பணம் கட்டியுள்ளார்கள். எனவே நாமும் பணம் கட்டுவோம் என்று பணம் கட்டி ஏமாறாதீர்கள்.

- இன்று பொய்யும், பித்தலாட்டமும், ஏமாற்றுதலும் மிக அதிகமாகி விட்டது. எது உண்மை, எது பொய் என்று தெரிந்து கொள்ள முடிவதில்லை.

- பேராசை பெரு நஷ்டம் என்பதை நினைவில் உறுதியாக வையுங்கள்.

- வீட்டில் திருப்பதி ஸ்ரீவெங்கடாஜலபதியின் ஸ்வர்ண (தங்கத்தால்) அலங்காரம் செய்யப்பட்ட திரு உருவப்படம் வாங்கி மாட்டி வைத்து வழிபட்டால் வாஸ்து குறைபாடுகள் நீங்கி விடும். ஸ்வர்ண (தங்க) அலங்காரம் செய்யப்பட்ட பெரிய படம் படக்கடைகளில் கிடைக்கும்.



# திருமண பொருத்தம்



## ஆண்

ராசி - சிம்மம் நட்சத்திரம் - உத்திரம்

**பொருந்தக்கூடிய பெண் நட்சத்திரங்கள்**

8 பொருத்தம் - பரணி | அஸ்தம் | கேட்டை | பூராடம்

7 பொருத்தம் - அஸ்வினி | மிருகசிரிஷம் - மிதுனம் | திருவாதிரை | பூரம் | சுவாதி | அனுஷம்

6 பொருத்தம் - ரோகிணி | மிருகசிரிஷம் - ரிஷபம்

தவிர்க்க வேண்டிய பெண் ராசிகள் - மகரம் | மீனம்

## பெண்

ராசி - சிம்மம் நட்சத்திரம் - உத்திரம்

**பொருந்தக் கூடிய ஆண் நட்சத்திரங்கள்**

9 பொருத்தம் - திருவாதிரை | மகம் | பூரம்

8 பொருத்தம் - அஷ்வினி | பரணி | பூசம் | ஆயிலியம் | சதயம்

7 பொருத்தம் - ரோகிணி | மிருகசிரிஷம் - மிதுனம் | சுவாதி | மூலம் | பூராடம்

6 பொருத்தம் - மிருகசிரிஷம் - ரிஷபம் | அனுஷம் | கேட்டை | அஸ்தம்

தவிர்க்க வேண்டிய ஆண் ராசிகள் - மகரம் | மீனம்

*அடுத்த - இதழில் கன்னி ராசி - உத்திரம் நட்சத்திர திருமணப் பொருத்த விபரங்களை எதிர்பாருங்கள்.*


## திருமண சேவை

| | |
|---|---|
| **ரஷ்மினி திருமண சேவை**<br>11 2/1 33 வது, ஒழுங்கை, வெள்ளவத்தை.<br>0112 363 880, 077 012 1682 | **மயில்வாகனம் சர்வதேச திருமண சேவை**<br>22/1, சுபோதாராம வீதி, தெஹிவளை.<br>076 657 7292 |
| **சர்வதேச புலவர் திருமண சேவை**<br>57, விஹார லேன், வெள்ளவத்தை.<br>011 236 3435 | **கனகராஜன்**<br>19, கல்பொத்த வீதி, கொழும்பு 13.<br>072 324 4945, 072 524 6419 |
| **அம்பிகை திருமண சேவை**<br>69, 2/1, விகாரை லேன், கொழும்பு 06.<br>0112 363 710, 077 367 1062 | **குருக்கள் ஜோதிஷம்**<br>165/6, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு 13.<br>011 243 1982 |
| **குரும்ப சிட்டியூர் வேல்அமுதன்**<br>8-3-3, Metro Apartment 55th Lane, வெள்ளவத்தை.<br>011 236 0488 | **சந்நிதியான் திருமண சேவை**<br>வல்வெட்டித்துறை<br>077 357 3055 |
| **ராதா கிருஷ்ணா திருமண சேவை**<br>5E, வில்லியம் சந்தி, தெஹிவளை.<br>011 552 2084 | **சக்தி திருமண சேவை**<br>30, ரமணி மாவத்தை, நீர்கொழும்பு.<br>031 223 2130 |

## திருமண வைபவங்களுக்கான...

| | |
|---|---|
| விவாக பதிவாளர் | Ms. Chandrani - 071 312 2889 |
| மணவறை | UMESH - 077 999 5701 |
| வாடகை நகைகள் | Joy Glorious - 077 494 9961 |
| திருமண ஒப்பனை | Brintha - 2 593 693 / 077 633 1257 |
| ஜோதிடம் | Nalendra Institute - 077 2951368 |
| குருக்கள் | Sankar Iyar - 077 324 3766 |
| குருக்கள் | J. Sharma - 258 6313 |

| | |
|---|---|
| திருமண ஆடைகள் | Little Asia - 011 250 4470 |
| புகைப்படம் / வீடியோ | Chhaya Rabeshan - 077 361 9649 |
| திருமண அழைப்பிதழ் | UKEYEE - 2 501 012 |
| மெகந்தி | Mehendi - 0777 667 727 |
| திருமண வாகனம் | Mal-Key Rent a Car - 2 365 365 |
| திருமண சைவ உணவு | Mahen's Catering - 0777 563 620 |
| திருமண பரிசுகள் | Visgha - 077 277 4776 |


SRI VIJAYAS
Wedding Sarees, Shalwar , Kameez,
Children Wears , Readymades
118, Main Street, Colombo-11. Tel: 011 244 9373 / Skype : Srivijiayas / Web : www.srivijayas.com











UMESH

அழகு கொலுவிருக்கு
மணப்பந்தல்...

- Manavarai
- Maalai
- Kolam
- Kumbam
- Vaalaimaram
- Thiruthongal
- Iyer (Kurrukal)
- Melam
- Wedding Car

No. 23A, 36th Lane, Wellawatte.
Hotlines: 077 999 5701, 072 799 5701, 0777 995 701
Tel: 011 236 2068 Email: bumesh66@gmail.com Web: www.umeshwedds.com



# தென்முகக் கடவுள்

## சிவமேது? ஞானமேது? போதமேது?

வேதியர் வடிவில் இருந்த பெருமான் புன்னகைக்கின்றார். கேட்டேவிட்டார். மாணிக்க வாசகர் "சுவாமி! தங்கள் திருக்கரத்தில் உள்ளது என்ன நூல்?" இது "சிவஞான போதம்" என்று பரமன் திருவாய் மொழிந்ததும் சிவஞான போதத்தை நன்கு கற்ற இவர் கேட்கின்றார். சுவாமி! சிவம் என்றால் என்ன? ஞானம் என்றால் என்ன? போதம் என்பது என்ன? என்றார். அருள்கூர்ந்து இதனை அடியேனுக்கு விளக்கியருளவேண்டும் என்றார். அப்படித் தாங்கள் அடியேன் தெளியும் வண்ணம் விளக்கி விட்டீர்கள் என்றால் அன்று வடவாலின் நிழலில் இருந்து சனகாதி முனிவர்க்கு அருள்புரிந்த ஞான தட்சிணாமூர்த்தியே தான் என்று ஏற்றுக்கொள்கின்றேன். நான் உங்களுக்கு அடிமையாகி விடுவேன் என்று ஒரு மாறா வாசகத்தை மாணிக்கவாசகர் உதிர்த்து விட்டார்.

உலகப்பொருள் எல்லாம் கண்ணுக்குள் காட்சியளிக்கின்றன. ஆக, இருள் நீங்கினால் உயிருக்கு சிவானுபவம் விளைந்து காட்சியளிக்கிறது. இறைவன் ஒருவனே. அவன் இவன். அச்சிவம் அனைத்திலும் ஒன்றாய், உடனாய், வேறாய் நிற்கிறது. இப்பொழுது உம்முன்னும். சிவஞானபோதம் என்றால் சிவத்தை அறிந்து தெளிதல்: சிவாகமங்களின் முடிந்த முடிவு என்பதாம். இவ்வாறு உள்ளம் உருகும் வண்ணம் எடுத்துரைத்தார் பெருமான். ஏற்றுத்தெளிந்தார் மாணிக்க வாசகர். திருவடி தீட்சை கிடைத்தது. ஈசனுக்கு அடிமையானார்.

நிற்கிறது அச்சிவம் ஒன்றே என்றும், அதனை அறிதல் ஞானம், அறிந்து அதனைத் தேர்ந்து தெளிதல் போதம் என்றார்.

இதனை மாதவச் சிவஞான முனிவர் கீழ்வருமாறு அழகாகக் கூறுகின்றார்.

**என்றாலுமே சிவமேது ஞானமேது இங்கு**
**இயம்பிடும் போதமேது இயம்பு வீரேல்**

**அன்று வட நீழலில் அமர்ந்திருந்தார் நீரே**
**அடியேனும் உமக்கடிமை ஆவேன் என்ன**

**நின்றசிவம் ஒன்று அதனைத் தேர்தல் ஞானம்**
**நிகழ்போதம் தேர்தலதனை தெளிதல் ஆம் என்று**

**ஒன்றிய நற்பொருள் வினவி நிற்பார் சிந்தையுருகும்**

**வகை உணரசெய்தார் உவமையிலார்.**

அனைத்து நூல்களையும் சிவஞான போதத்தையும் அறிந்து, அமைச்சர் பதவி வகித்த அவருக்கே சிவஞான போதத் தெளிவினைப் பெருமான் அருளி உணர்ந்தார் என்றால் நாம் நமது நிலையை எண்ணிப் பார்க்கவேண்டும். அன்று வட நிழலில் அமர்ந்து நால்வர்க்கும் உபதேசித்த இறைவன் திருப்பெருந்துறையில் மாணிக்க வாசகருக்கு உபதேசித்தான். குருவடிவாக நமக்கு உபதேசித்த அவன் மரபு வழிவந்த ஆதீனத் திருமடங்களின் குருநாதர்கள் சிவஞானபோதத்தை உபதேசிக்கத் தயாராக இருக்கின்றார்கள். எத்தனை பேர் அவர்களைத் தேடி, நாடிப்போகத் தயார்? அவனருள் என்று கிட்டுமோ அன்றுதான் போகத்தோன்றும் போல் உள்ளது. எல்லோரும் அருள்பெற வேண்டுகின்றேன். பெருமான் மாணிக்கவாசகருக்கு உணர்த்தியருளுகின்றார் தத்துவங்களின் முடிவு: தாத்துவிகங்களின் முடிவு. சித்தத்தின் முடிவு: அகத்திற்கும் முடிவு: அப்பாலுக்கு அப்பாலான முடிவு.

*தொடரும்*

## மனிதனின் சிந்தனைக்கு...

பொறுமை, மன்னிக்கும் பண்பு, கட்டுப்பாடு, திருடாமை, தூங்காமை, பொறிகளை ஆளுதல், அறிவு, உண்மை, கோபமின்மை, இந்தப் பத்தும் தர்மத்தின் குணங்களாம்.



## வரங்கள் பல கொடுக்கும்

# ஸ்ரீ வரலக்ஷ்மி விரதம்

ஸ்ரீ மஹாலக்ஷ்மி விரதங்கள் பல உள்ளன. அவற்றுள் மிகவும் சிறந்தது ஸ்ரீ வரலக்ஷ்மி விரதமாகும். வரத்தைக் கொடுப்பவள் வரலட்சுமி. பரமேஸ்வரனிடம் பெண்களுக்கு சர்வ சௌபாக்கியத்தைக் கொடுக்கும் விரதத்தை பார்வதி வேண்ட, வரலக்ஷ்மி நோன்பை பரமேஸ்வரன் குறிப்பிட்டதாக ஐதீகம்.

தாமிரச் சொம்பிலோ அல்லது வெள்ளிச் சொம்பிலோ சுண்ணாம்பு பூசி, ஸ்ரீதேவியின் முகத்தைச் செங்காவியால் எழுதி, கலசத்திற்குள் அரிசி, வெற்றிலை பாக்கு, மஞ்சள், குங்குமம், எலுமிச்சை, ஸ்வர்ணம், ஓலை, கருகமணி போட்டு, கண்ணாடி, சீப்பு வைத்து, கலசத்தில் மாவிலை தேங்காய்களால் அலங்கரிக்க வேண்டும்.

கூடத்தில் மாக்கோலம் போட்டு, தீபம் ஏற்றி, பலகை மீது கலசத்தை வைத்து தீபாராதனை செய்து மங்களம் பாடி ஆரத்தி எடுத்து வந்து இரு சுமங்கலிகள் கைபிடித்து, 'லட்சுமி வர வேண்டும்!' என்று பாடி உள்ளே கொண்டு போய் அலங்கரிக்கப்பட்ட மண்டபத்தின் நடுவில் வைத்து, நுனி இலையில் அரிசியைப் பரப்பி, அதன் நடுவில் கலசத்தை வைத்து, பூஜை ஆரம்பிக்க வேண்டும்.

சுவரில் சுண்ணாம்பு அடித்து மண்டபம் போல் வரைந்து நடுவில் தேவி உருவத்தையும் எழுத வேண்டும். மாலை வேளையே லக்ஷ்மி பூஜைக்கேற்ற காலம். காலத்துக்கேற்ப காலையிலும் அனுஷ்டிக்கலாம்.

ஸ்ரீ குருவை நமஸ்கரித்து, ஆசி பெற்று சந்தோஷமான மனதுடன் லக்ஷ்மியை பாடல்களால் துதித்து நிவேதனம் செய்து மங்களங்கள் பாடினால், லக்ஷ்மி நாராயணனுமாக நம் இல்லத்திற்கு வந்து அருள் வழங்குவர்.

**'ஸித்த லட்சுமீ, மோஷலட்சுமீ, ஜய லக்ஷ்மீ, சரஸ்வதி, ஸ்ரீலக்ஷ்மீ - வரலட்சுமீஸ்ச, பிரசந்ரநா பவ ஸர்வதா..'**

என வரலக்ஷ்மி பூஜையை செய்து வரங்கள் பல பெறுவோம்.

### கோபூஜை செய்யுங்கள் ஸ்ரீ கோலக்ஷ்மி' அருள்வாள்

கோபூஜை என்பது பசுவழிபாடு ஆகும். இந்த கோபூஜை ஸ்ரீ லக்ஷ்மி பூஜையே என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. சரி நாம் ஏன் பசுவை

பூஜை செய்ய வேண்டும் என்பதைப் பார்க்கலாம்.

நம்மை பெற்றெடுத்த "தாயை" ஜனக மாதா என்கிறோம். பேணிவளர்த்த "பசுத்தாயை" கோமாதா என்கிறோம். தாங்கி நிற்கும் "புவித்தாயை" பூமாதா என்கிறோம். மெய்ஞான அறிவுதரும் சதுர்வேதங்களை அதன் தேவதையை வேதமாதா என்கிறோம். தாயாரை வழிபட வேண்டியது மக்களின் கடமை தானே அதனால்தான் கோமாதாவை தாயாகவே எண்ணி பூஜைசெய்ய வேண்டும் என்கிறார்கள் மஹான்கள். அதனால்தான் "கிரஹப்பிரவேசம்" எனும் புதுமனைப்புகுவிழா, ஆலய கும்பாபிஷேகம் மற்றும் திருக்கோயில்களில் நடைபெறும் அதிகாலை பூஜைகளில் கோபூஜை செய்யப் படுகிறது. சில இடங்களில் "காமதேனு" மஹாயாகம் கூட செய்யப்படுகிறது.

மாடு என்றாலே செல்வம் என்று பொருள் (கல்வி அதிகாரத்தில் மாடல்ல மற்றையவை என்று குறிப்பார் திருவள்ளுவர்) அக்கால மக்கள் கால்நடைகள் அனைத்தையுமே தெய்வமாக எண்ணி வழிபட்டார்கள். அவர்களுக்கு வாழ்நாள் சீதனம் அவைதான். அதனால்தான் கேட்டில் (Cattle) என்ற கால்நடைகளை குறிக்கும் சொல்லே உருமாறி கேப்பிட்டல் (Capital) என்று முதலீட்டைக் குறிக்கும் சொல்லானது. எல்லா உயிர்களையுமே நாம் பாதுகாத்து போற்ற வேண்டும் தான் என்றாலும் அவற்றில் முதன்மையான பசுக்களை பாதுகாத்து வழிபடவேண்டியது ஒவ்வொரு ஹிந்துவின் கடமையாகும். அதனால்தான் "64 கலைகளுக்குள்" கோசம்ரஹணம் என்ற பசுப்பாது காப்பும் ஒரு கலையாகிறது. அதனால்தான் கோசாலை வைத்து பசுவினங்களை பாதுகாக் கிறார்கள் நம் பெரியோர்கள். இவ்வளவு சிறப்புகள் பசுவிற்கு மட்டும் வந்ததற்கு என்ன காரணம்? என்ற கேள்வி எழுகிறதல்லவா? அதற்கான பதிலையும் தெரிந்து கொள்வோம்.

பசும்பால் இறைவனின் அபிஷேகத்திற்கு உதவுகிறது, பசுந்தயிர் நைவேத்தியத்திற்கு சாதம் தயார் செய்ய பயன்படுகிறது. பசும்நெய் யாகத்திற்கு உதவுகிறது. "கோமயம்" எனும் பசுஞ்சாணம் விபூதி செய்ய உதவுகிறது. "கோஜலம்" எனும் பசும் சிறுநீர் பஞ்சகவ்யம் செய்யவும் மருந்துப் பொருள்கள் செய்யவும் பயன்படுகிறது. பசுவிடமிருந்து கிடைக்கும் "கோரோஜனை" வாசனைப் பொருளாக உதவுகிறது, பசுவின் உடல் முழுவதும் முப்பத்து முக்கோடி தேவர்களும் வாசம் செய்கிறார்கள், பசுவின் பின்புறம் ஸ்ரீ மஹாலஷ்மி வாசம் செய்கிறாள். அதனால்தான் பசுவை பூஜை செய்ய வேண்டியது அவசியமாகிறது. பசுவை பூஜைசெய்தால் அனைத்து தேவர்களையும், தேவதைகளையும் பூஜை செய்த பலன் இந்த ஒரே பூஜையின் மூலம் நமக்குக் கிடைத்துவிடும் என்கிறார்கள் நம் நாட்டு ஞானிகள். எனவே ஸ்ரீலக்ஷ்மியின் கடாட்சம் உங்களுக்குக் கிடைக்க வேண்டுமெனில் "கோபூஜை" எனும் பசுவழி பாட்டினை எல்லோரும் தவறாமல் செய்யுங்கள்.

**கோபூஜை செய்யும் முறை**



விநாயகர் பூஜை செய்து கோபூஜையை தொடங்கவும். கோபூஜையின் போது அங்கஹீனம் இல்லாத, சுழி, குறிகள் சுத்தமான லக்ஷ்ணமான பசுவை கன்றுடன் கூட்டிவந்து, அதனை கிழக்கு அல்லது வடக்காக நிறுத்திவைத்து, விளக்கேற்றி, சுத்த ஜலத்தால் நீராட்டி, சந்தனம், மஞ்சள், குங்குமத்தால் உடல் முழுவதும் பொட்டிட்டு, கொம்புகளில் பூச்சரம் சுற்றி வண்ணச்சேலை அல்லது ரவிக்கைத்துணி சாற்றி, மாலை அணிவித்து, சாம்பிராணி, வத்தி, தூபம் காட்டி, நெய்தீபம் ஏற்றி ஹாரத்தி எடுத்து, குங்குமம், புஷ்பம் இரண்டாலும் ஸ்ரீ லக்ஷ்மி அஷ்டோத்தர அர்ச்சனை செய்து மஹாலக்ஷ்மி காயத்ரி சொல்லி, தேங்காய் உடைத்து, வெற்றிலை, பாக்கு, பழம், பொங்கல் வைத்து நைவேத்தியம் செய்து, 5கிளையில் கற்பூரம் ஏற்றி மும்முறை வலம் வரவேண்டும். அதன் பின் பசு, கன்றுக்கு வெற்றிலைப்பாக்கு, பழம், வெல்லம், பச்சரிசி, அறுகம்புல், அகத்திக்கீரை, குடிக்க ஜலம் போன்றவற்றை உணவாகக் கொடுத்து அதன் முன்புறமும் பின்புறமும் நமஸ்காரம் செய்து தேங்காய் திருஷ்டி கழித்து, செதிர் தேங்காய் உடைத்து பூஜையை நிறைவு செய்ய வேண்டும். பிறகு அங்குள்ளவர்களுக்கு மஞ்சள், குங்குமம், வெற்றிலைப்பாக்கு, பழம், ரவிக்கைத்துண்டு, வளையல், காசு, பிரசாதங்கள் தரலாம். இதுதான் பசுவழிபாடு இதனை செய்தால் ஸ்ரீ மஹாலக்ஷ்மியின் பரிபூரண நல்லாசிகள் நமக்குக் கிட்டும்.

இன்று பல வீடுகளில் பசு இல்லை என்றாலும் அருகில் உள்ள கோயிலில் உள்ள பசுவுக்கோ, பசு மடத்தில் உள்ள பசுக்களுக்கோ கோபூஜை செய்யலாமே.

*தொடரும்*



# முருகனும் மயில் வாகனமும்

மனம் ஆட்டம் போடுவது, ஆகவே அது ஆடும் மயிலுடன் ஒப்பிடப்பட்டது. ஆனால் மயிலுக்கு ஒரு பெருமை உண்டு. அது முருகனைத் தாங்கும் வாகனமாகியது! அதுமட்டுமல்ல: முருகனை வழிபடுவோர் மயிலையும் சேர்த்தேதான் வழிபடுவர்!

மயில் மேகக் கூட்டங்களைக் கண்டு மகிழும்: மகிழ்ச்சியில் ஆடும். ஆனால் அந்த மேகக்கூட்டம் சிறிது நேரத்தில் காணாமற் போகும். மயிலின் மகிழ்ச்சியும் மறைந்து போகும். இருண்ட மேகத்திற்கு அற்ப ஆயுள் என்பதை மயில் அறிவதில்லை. அதன் அறிவும் இருண்டதே!

மனம் என்பது குகை போன்றது, உலக இன்பங்களை நிலையென எண்ணி மயங்கும். ஆக மனக்குகையில் அறியாமை இருள் நீங்கினால் அறிவு ஒளி தோன்றும். அறிவு ஒளியைத் தருபவன் முருகனே மனக்குகையில் இருள் நீக்கி இன்ப ஒளி தருபவன் முருகன். எனவே அவனை 'குகன்' என்றனர் - குகையில் வசிப்பவன்!

**மயில் யார்?**

முருகனைத் தாங்கும் மயிலாயிருப்பது யார்? ஆணவம் அழித்த சூரபத்மன். ஆணவத்தின் உருவமாயிருந்தவனே சூரபத்மன். சிவ பாலனை சிறுபாலன் என்று இகழ்ந்தவன்! கடல் நடுவே மாமரமாய் நின்று மாயப்போர் புரிந்தவன். இப்படி ஆட்டம் போட்டவன் முருகனது வெற்றிவேலால் இருகூறாகப் பிளவுபட்டான்!

**ஞானவேல்:**

அந்த வேல் வெறும் உலோகவேல் அல்ல. அதுவே ஞானவடிவம்! அதைத் தாங்கியவனும் ஞானவேலன் அதனை அவனுக்கு வழங்கியவளும் ஞானசக்தி! அவளே ஆதி பராசக்தி.

ஆகவே ஞானமாகிய வேல் சூரனின் மார்பில் பட்டதும் அவனது ஆணவம் அகன்று நல்லறிவு குடிகொண்டது. ஞான உணர்வு பெற்றதும் குமரனடி பணிந்து மன்னிப்பு வேண்டினான். பகைவனுக்கும் அருளும் கருணைவள்ளல் கந்தவேல். இருகூறாகிய சூரனை ஒரு கூறு மயிலாகி தனக்கு வாகனமாகுமாறும் அழியா வாழ் வளித்தான்.

**அர்ப்பணிப்பு:**

"மனமே முருகனின் மயில் வாகனம் என் மாந்தளிர் மேனியே குகனாலயம்"

இது ஒரு இசைப்பாடல் இதில் முருகன் மீது காதல் கொண்ட பெண் ஒருத்தி தன்னை முழுதாக முருகனிடம் அர்ப்பணித்துக் கொண்ட உணர்வில் இவ்வரிகளை அமைத்துள்ளனர். அவளுடைய உடல், உயிர் அனைத்தையும் முருகனது உடைமைகளாக அர்ப்பணித்து விடுகிறாள்! இத்தகைய அர்ப்பணிப்பு உணர்வுடையவர்கள் மனதையெல்லாம் முருகன் மயில் வாகனமாக்கிக் கொள்கிறான்!

என் மனம், எனது உடல் என்ற எண்ணங்களை அறவே விட்டு விட வேண்டும். அப்பொழுது இந்த உடற் கூட்டுக்குள் குகனாலயம் அமைந்து விடும்.

**உடலில் ஆறுபடைவீடுகள்:**

முருகனது திருநாமங்களும், மற்றும் முருகனைப் பற்றிய அனைத்துமே தத்துவங்கள்தான்! நம் ஒவ்வொருவருக்குள்ளும் முருகன் (சுப்ரமணியன்) இருக்கின்றான்! பிரம்மம் என்பது எங்கும் நிறைந்தது. உள்ளேயும் வெளியேயும் இருப்பது. உள்ளே இருப்பதைத்தான் வேதம், 'அகம் பிரம்மாஸ்மி' என்கிறது. முருகனே பிரம்மத்தின் வடிவமாக இருப்பதால் அவனை வேதம் மூன்று முறை "ஸுப்ரம்மண்யோஹம்" என்று அழைத்தது!

நம் உடலில் அமைந்துள்ள ஆறு ஆதாரச் சக்கரங்களை (மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுக்தி, ஆக்ஞா) முருகனது அறுபடை வீடுகளாகச் சொல்வர்.

**ஆக்ஞாவில் சண்முகம்:**

நமது புருவ மத்தியில் ஆக்ஞா சக்கரம் உள்ளது. அங்கு ஆறு பட்டையாய் உருட்சியுள்ள ஒரு மணி பிரகாசத்துடன் விளங்கும். தேகத்திலுள்ள ஆறு அறிவும் ஒருங்கே சேர்ந்து சுத்த விவேகம் என்பதையும் சண்முகம் என்பார்கள். ஒருங்கிணைந்த மனதில் தியானத்தால் இந்த ஸுப்ரமணியை உணரலாம்!

**ஸுப்ரமண்ய நாடி:**

நமது உடலில் விசுக்தி சக்கரத்தைக் கடந்து இதய ஸ்தானத்தில் இடது புறம் ஆறு தலையுடைய ஒரு நாடி இருக்கிறது! இதை ஸுப்ரம்மண்யம் என்று சொல்வார்கள். எனவே நம் மனக்கோயிலில் குடி கொண்டிருப்பவன் சுப்ரமண்யனே.

**நமக்குள்ளே சூரபத்மன்:**

சூரபத்மன் தன்னைப் பற்றியே எப்பொழுதும் பெரிதாய் நினைத்துக் கொண்டிருந்தான். அதே போல் மனிதனும் தனது பெருமை புகழ் இவற்றால் ஆணவத்தில் மிதப்பவன்! "நான் நினைத்தால்...." என்று அடிக்கடி சொல்லி அகங்காரக் கடலில் அலையால் அலைக்கழிக்கப்படுபவன்! தனக்குள் பிரம்மம் இருப்பதை அவன் உணர்வதில்லை. அவனுக்குள் அவனது ஆன்மாவே அவனது உண்மை வடிவம், அவனது உடலல்ல என்பதை அவன் உணர வேண்டும்.

அதன் பிறகே பண்பட்ட அந்த மனதை கடவுள் வாகனமாக ஏற்பார். இதையே ஆடும் மயில் மீது அமர்ந்து நமக்கு உணர்த்தி விடுகிறார் முருகன்!

எனவே, நம் மனதில் ஆட்டம் போடும் சூரனை அழித்திட அவனருள் வேண்டி வரம் பெறுவோம். வளமுடன் வாழ்வோம்.

# மனிதன் மனிதனாக வேண்டும்

ஒழுக்க நெறியைக் கடைப்பிடித்து ஒவ்வொருவரும் மற்றவர்கள் பின்பற்றத்தக்க எடுத்துக்காட்டு மனிதராகப் பொலிய வேண்டும். அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் ஆயிரம் சதுரம் அடி இல்லம் வாங்கியவர். ஆனால் அடுத்தவர்களை நோக்கி ஓர் அடி கூட எடுத்து வைக்கமாட்டார். யாரிடமும் முகம் கொடுத்து பேச மாட்டார். யாராவது ஒருவர் 'உங்கள் குடியிருப்பில் இவர் எங்கே இருக்கிறார்? மாடி எண் என்ன?' என்று வழி கேட்டால் கூட விழியைத் திருப்பிக் கொள்வார். மொழி ஒன்றும் பேச மாட்டார். பலர் இப்போதெல்லாம் பெருமையாகப் பேசிக் கொள்கிறார்கள். 'எங்கள் குடியிருப்பில் எட்டுக் குடும்பங்கள்.

யாரையும் எனக்குத் தெரியாது. சக மனிதர்களின் சந்தோஷத்திலும் துயரத்திலும் பங்கு கொள்ளாமல் இயல்பாகவும், கலகலப்பாகவும் பேசி மகிழாமல் என்ன மனித வாழ்க்கை? காக்கையை 'காக்கா' பிடித்தால் கூட வாழ்க்கையை நாம் கற்றுக் கொள்ளலாம். ஆகாரம் கிடைத்தால் தான் மட்டும் உண்டு ஆனந்தம் அடையாமல் தன் இனத்தைக் கூப்பிட்டு சேர்ந்து உண்கிறது காகம். 'காக்கை கரவா கரைந்து உண்ணும்' என்கிறார் திருவள்ளுவர். சாப்பாடு கிடைத்தால் மட்டும் காகங்கள் ஒன்று சேர்வதில்லை. துன்பம் வந்தாலும் ஒன்றாகக் கூடும். ஒரு காகம் இறந்து விட்டால் அவ்விடத்தில் துன்பத்தில் பங்கேற்று பல காக்கைகள் ஒன்று கூடிக் கரைவதை நாம் பார்க்கலாம்.

காக்கா கூட்டத்தைப் பாருங்க! அதுக்கு

கத்துக் கொடுத்தது யாருங்க!

ஒண்ணா இருக்க கத்துக்கணும்! - இந்த

உண்மையைச் சொன்னா ஒத்துக்கணும்!

வீதியில் செல்லும் போது நாம் அறிந்த ஒருவரைப் பார்த்தால் முந்திக் கொண்டு முதலில் நலம் விசாரித்து இங்கிதமாகப் பேச வேண்டும். பழக வேண்டும். இத்தகைய அருமையான பண்பை நம் புராணம் பூர்வ பாஷி மிருது பாஷி என்று குறிப்பிடுகிறது. பூர்வ பாஷி என்றால் முதலில் உரையாடுபவன் என்றும், மிருது பாஷி என்றால் இனிமையாக உரையாடுபவன் என்றும் பொருள். சக்கரவர்த்தி திருமகனாக விளங்கிய ராமர் இப்படி நடந்து கொண்டார் என கம்பரின் காவியம் கூறுகிறது. அயோத்தியின் வீதியில் ராம லட்சுமணர்கள் சென்று கொண்டிருக்கும் போது ஊர் மக்கள் பலரைக் காண்கிறார்கள். தான் மன்னரின் மகன், அடுத்து அரியணையில் அரசனாக அமரப் போகிறவன் என்ற ஆணவம் சிறிதும் இன்றி ராமர் முந்திக் கொண்டு பலரையும் நலம் விசாரிக்கிறார் என்கிறார் கம்பர்.

எதிர் வரும் அவர்களை எமையுடை இறைவன்

முதிர்தரு கருணையின் முகமலர் ஒளிர

எது வினை? இடர் இலை? இனிது நும்மனையும்

மதி தரும் குமரரும் வலியர் கொல்?

பூதான இயக்கம் கண்ட வினோபாஜி ஒரு நாள் மாணவர் பலருடன் கலந்துரையாடல் நிகழ்த்திக் கொண்டிருந்தார். பல துண்டுகளாக கிழிக்கப்பட்ட தேச வரைபடம் ஒன்றின் எல்லா துண்டுகளையும் மாணவர்களிடம் ஒப்படைத்து இதை சரியாக்கி ஒட்டித் தாருங்கள். உங்களுக்கு ஒப்பற்ற பரிசு ஒன்று தருகிறேன் என்று சொன்னார். காகிதத் துண்டுகளை வாங்கிக் கொண்டு மாணவர்கள் ஒன்று சேர்ந்து தேச வரைபடத்தை சரியாக்க முயன்றனர். மேல்நோக்கியும், கீழ்நோக்கியும், வளைந்தும், நெளிந்தும், கோணலாகவும், நேராகவும் வெறும் கோடுகள் தான் காகிதத்துண்டு ஒவ்வொன்றிலும் காட்சி அளித்தது.

இது இப்படி, அது அப்படி என்று வைத்து பல முறை முயன்றும் பயனில்லை. அப்பொழுது ஒரு மாணவன் சொன்னான்: எல்லாவற்றையும் என்னிடம் தந்தால் ஐந்தே நிமிடத்தில் தேச வரைபடத்தை நான் சரியாக்கிக் காட்டுகிறேன். 'அப்படியா? உன்னால் முடியுமா?' என்றபடி அவனிடம் அனைத்துத் துண்டுகளையும் ஒப்படைத்தனர். சொன்ன ஐந்து நிமிடத்திற்கு முன்பாகவே செயல்புரிந்து விட்டான் அந்த மாணவன். வியப்பால் அனைவர் விழிகளும் விரிந்தன. வினோபாஜி ஒப்படைக்கபட்ட வரைபடத்தால் ஒப்பற்ற மகிழ்வடைந்து 'உன்னால் மட்டும் எப்படி முடிந்தது?' என்று அந்த மாணவனை நோக்கிக் கேட்டார்.

'ஐயா! துண்டுகளை மாற்றி மாற்றி ஒட்டிக் கொண்டிருக்கும் போது ஒன்றை நான் கவனித்தேன். காகிதத் துண்டுகளின் பின்புறம் கண், காது போன்ற உறுப்புகளின் படம் தெரிந்தது. எனவே வரைபடத்தின் பின்பக்கம் மனித உருவம் தான் இருக்கும் என்று யூகித்தேன். அதனால் நான் அனைத்துத் துண்டுகளையும் திருப்பி வைத்து மனித ஓவியத்தைப் பொருத்தினேன். முன்பக்கம் தேச வரைபடம் சரியாகி விட்டது. வினோபா புன்னகை பூத்தார். ஒவ்வொரு மனிதனும் ஒழுங்காக ஆனால், தேசம் தானே சரியாகி விடும் என்று புரிகிறதல்லவா?



"நாடகம் பார்த்துக் கொண்டிருந்த மன்னர் ஏன் பயந்தடித்துக் கொண்டு ஓடினாராம்?"

"நாடகம் பயங்கர அறுவையானதால், யாரோ "போர் போரென்று" கத்தித் தொலைத்து விட்டார்களாம்!"

"ஏன் மன்னர் அந்த வாஸ்து நிபுணரை சிரச்சேதம் செய்ய உத்தரவிட்டுள்ளார்?"

"வாஸ்துப்படி, அரண்மனையில் "அந்தப்புரம்" இருக்கக் கூடாதென்றால், சும்மா விடுவாரா என்ன?"



# மன்னர் ஹாஹ்...ஹா!




"போர்க் குதிரைகள் தனியே புல் மேய்ந்து கொண்டு இருக்கிறதே... வீரர்கள் எங்கே?"

"அரசு மதுபானக் கடையில் ஃபுல் மேய்ந்துகொண்டு இருக்கிறார்கள் மன்னா!"

"அமைச்சரே! அண்டை நாட்டு மன்னர் அனுப்பிய தூதுப்புறா என் வாளுக்கு இரையாகி விட்டது!"

"பொய் சொல்லாதீங்க மன்னா! உங்களுக்கு இரையாகி விட்டது என்று சொல்லுங்கள்!"





# கனவுகள் தரும் பலன்கள்

## விலங்குகள்

**கழுதை:** கழுதையைக் கனவில் கண்டால் துன்பங்கள் நீங்கும். புதிய ஆடைகள் அழகுப் பொருட்கள் வந்து சேரும். கழுதையை ஓட்டிக் கொண்டு சென்றால் தொழிலில் மேன்மை உண்டாகும். துன்பம் நீங்கும். கழுதையைக் கனவில் காண்பதால் புத்தி அபிவிருத்தி ஆகும். கோவேறு கழுதைகளைக் கனவில் கண்டால் சுற்றத்தாரிடம் கவனமாக இருக்கவேண்டும்.

கழுதை பொதியைச் சுமந்து செல்வதாகக் கனவு கண்டால் கஷ்டங்கள் நீங்கும். கழுதை நம்மை விரட்டினால் பயம் நீங்கும். தைரியம் உண்டாகும்.

கழுதை கத்திக் கொண்டு ஓடினால் பெண்களின் அன்புக்குப் பாத்திரமாகலாம். நல்ல செய்திகள் உண்டாகும். கழுதை உதைத்தால் நோய் குணமாகும். கழுதைப் பாலைக் குடிப்பதாகக் கனவு கண்டால் நோய்கள் அகலும்.

**பன்றி:** பன்றியைக் கனவில் காண்பதால் நல்ல பலன்கள் ஏற்படாது. ஆனால் பன்றி இறந்து கிடப்பதாகக் கனவு கண்டால் துன்பங்கள் நீங்கும். பன்றிகளின் தோலுரித்துப் போடப்பட்டிருப்பதாகக் கனவு கண்டால் நண்பர்களின் விரோதம் ஏற்படும். பன்றிகளின் சேர்க்கையைக் கனவில் கண்டால் பெண்களால் துன்பம் உண்டாகும். பன்றி சேற்றில் இருப்பதாகக் கண்டால் சிக்கல்கள் தோன்றும்.

**ஒட்டகம்:** ஒட்டகத்தைக் கனவில் கண்டால் துன்பங்கள் நீங்கும். சுகம் உண்டாகும். வெளிநாட்டுப் பயணம் லாபம் தரும். செல்வம் சேரும். ஆனால் குடும்பத்தை விட்டுப் பிரிந்து வெகு தூரம் செல்ல வேண்டியிருக்கும்.

**முதலை:** முதலையைக் கனவில் கண்டால் பகைவரை வெல்லலாம். செல்வம் வந்து சேரும்.

**முயல்:** முயலைக் கனவில் கண்டால் பொருள் வரவு ஏற்படும். முயல்கள் விளையாடினால் நண்பர்கள் சேர்க்கை ஏற்படும்.


**ஒட்டகச் சிவிங்கி:** இதைக் கனவில் கண்டால் பிறர் எட்டமுடியாத நிலைக்கு உயர முடியும்.

**காண்டாமிருகம்:** இதைக் கனவில் கண்டால் உடல் பலம் மிக்கதாக விளங்கும். நோய் நொடிகள் நீங்கும்.

**ஆமை:** ஆமையைக் கனவில் கண்டால் நல்ல காலம் பிறந்துவிட்டதாக அர்த்தம். பயணங்களால் தனலாபம் உண்டாகும். தொழிலில் புதிய நண்பர்களின் சேர்க்கை ஏற்படும்.

*தொடரும்*

# மனிதப் பிறப்பின் மகத்துவம்



இப்பூவுலகில் கோடிக்கணக்கான உயிரினங்களை இறைவன் படைத்துள்ளான். மனிதனைத் தவிர்ந்த ஏனைய உயிரினங்கள் எல்லாம் அவ்வவற்றுக்கு வகுக்கப்பட்ட வாழ்க்கை நெறியில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதாவது எவ்வளவு பசியெடுத்தாலும் பசு மாமிசம் உண்ணாது. கரடி புல்லைத் தின்னாது என்பதை நாம் யாவரும் அநுபவரீதியாக அறிவோம்.

மனிதனோ இறைவனால், தேர்ந்தெடுத்து சுதந்திரமாக வாழும் நெறிமுறையை அருளப் பெற்றவன். ஐம்புலன்களின் தூண்டுதலினால் ஆசைக்கு உட்படுகிறான். ஆசை எண்ணங்களை ஏற்படுத்துகின்றது. எண்ணங்களின் வகைகளுக்கும் பரிமாணங்களுக்கும் ஏற்றவாறு மனம் செயற்பட ஆரம்பிக்கின்றது. மனத்தின் தூண்டுதல் அறிவைத் தடுமாற வைக்கின்றது.

இந்நிலையில் அறிவின் தேர்ந்தெடுத்தல் எப்படி அமைகின்றதோ, அப்படியே வாழ்க்கையும் அதனாலான விளைவுகளும் தோன்றுகின்றன.

நல்ல பயன்தரும் விளைவுகளுக்கு வழிகாட்டுவதே 'ஆன்மீகம்' ஆகும்.

தற்போது ஆன்மீகத்தில் ஈடுபாடென்பது, எல்லா வயதினரிடத்திலும் அதிகரித்திருப்பதை நாம் காண்கின்றோம்.

ஆன்மீகத்தில் ஈடுபாடென்பது நாம் பிறந்து வளர்ந்த சூழல்கள், வாழ்க்கை அனுபவங்கள், முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்ட இன்னல்கள் துன்பங்கள், அனுபவித்த இறை அனுபவங்கள், சந்தோஷங்கள் மகிமைகள் அல்லது ஏற்பட்ட இழப்புகள் இப்படிப் பல்வேறுபட்ட காரணங்களாலும் அல்லது அவற்றின் ஒன்றினாலும் அல்லது இயல்பாகவே பிரார்த்த கன்ம விதியாலும் ஏற்படலாம்.

மனித வாழ்வு அனுபவங்களாலானது ஒரு தொடர் ஆகும்.

மனிதரில் ஒருசாரார் லௌகீக வாழ்க்கையில் இன்பத்தில் மூழ்கியிருப்போர் ஆனால், மன அழுத்தத்தின் மிகுதியால் தவிப்போராகவும், மற்றைய சாரார் சாதாரண எளிமையான வாழ்க்கையில் மிகுந்த அமைதியுடனும் காணப்படுகின்றனர்.

மனிதரில் உணர்ச்சி வெளிப்பாட்டினை தத்தமது பலமாக (Strength) மாற்றிக் கொள்ள வழி வகுப்பதே இறைவழியாகும்.

படைப்புகளில் மனிதன் மட்டுமே தான் விரும்பிய பாதையை தேர்ந்து எடுத்து வாழும் சக்தி படைத்தவனாக இருக்கின்றான். ஏனைய படைப்புகள் அனைத்தும் தத்தமக்கு முன்கூட்டியே அமைத்துக் கொடுக்கப்பட்டவிதி முறையிலேயே வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன.

மனம், புத்தி இவை இரண்டில் எதனைக் கொண்டு தீர்மானிக்கின்றோமோ, அதன் அடிப்படையிலேயே எமது வெளிப்புறச் செயல்களின் ஆற்றலும் அவற்றின் பலன்களும் தங்கியிருக்கின்றன.

மனிதன் உடல், மனம், புத்தி என்னும் மூன்று காரணங்களால் ஆக்கப்பட்டவன். உடலாலும், மனதாலும், புத்தியாலும் முறையான பாதையில் மனிதன் வாழுவதற்கு வழிகாட்டுவது ஆன்மீக அறிவு ஆகும்.

பிரம்மம் தனித்திருக்கும் போது பரப்பிரம்மம். அது மாயையுடன் சேரும் போது சிருஷ்டி ஆகிறது. மாயை சத்வ, ரஜஸ், தமஸ் என்னும் முக்குணங்களை உடையது. காரணத்தின் குணங்கள் காரியத்தில் வெளிப்படுகின்றன. பிரம்மம் மாயையுடன் சேர்ந்து ஈஸ்வரனாக பஞ்ச

பூதங்களைத் தோற்றுவித்தார். ஆதியில் தோன்றியது ஆகாயம், ஆகாயத்திலிருந்து வாயு, வாயுவிலிருந்து அக்னி, அக்னியிலிருந்து நீர், நீரிலிருந்து மண் தோன்றின. மாயையின் முக்குணங்கள் அதனாலான பஞ்சபூதங்களில் பிரதிபலித்தன. பஞ்ச பூதங்களிலிருந்து தோன்றிய சத்வ அம்சங்கள் முறையே காது, தோல், கண், நாக்கு, மூக்கு என்ற ஐந்து ஞான இந்திரியங்கள் ஆகும். சாத்வீக அம்சங்கள் ஒன்றாகும் போது மனோ, புத்தி, சித்தம், அகங்காரம் என்ற நான்கு அந்தக்காரணங்கள் தோன்றி, உடலினுள்ளே இருந்து செயற்படுகின்றன.

ரஜோ குணங்களினால் தோன்றிய வாக்கு, கை, கால், கருவாய், வெருவாய் என்ற கன்ம இந்திரியங்களின் இயைந்த தொழிற்பாட்டால் பிராண, அபான, சமான, உதான, வியான என்ற ஐந்து பிராணங்கள் உண்டாயின தமோ குணமானது, சூஷ்ம குணங்களால் ஸ்தூல நிலையை உருவாக்கும் குணமாகும். இந்த 24 தொழிற்பாட்டுத் தத்துவங்களும் அடங்கிய 'மனிதன்' என்ற அற்புதப் படைப்பை உருவாக்கியவர் ஈஸ்வரர்.

மாயையின் பெரும் தேவை காமினி (Women), காஞ்சனி (Comfort), கீர்த்தி (Fame) ஆகும்.

ஒருவன் துர்க்குணங்களாலும், தகாத செயல்களாலும், தன் உடலுக்கும் மனதுக்கும் இன்பத்தைத் தேடிக் கொள்ளலாம். ஆனால், அந்த நிரந்தரமற்ற தீய விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய இன்பத்தை நாடாது, அப்பழக்க வழக்கங்களை விலக்கிக் கொள்வது சிறந்ததாகும்.


24 தத்துவங்களையும் கடந்து மாயையிலிருந்து விடுபட்டு உள்ளிருக்கும் பரம்பொருளை அறிந்தவன், வாழ்ந்து கொண்டிருக்கும் போதே ஜீவன் முக்தன் ஆகிறான். ஆத்மாவை அறிந்தால், இறைவனை அறிகிறாய்.

கன்ம விதியின் பயனால் அனுபவங்களுக்கு முகங்கொடுக்கின்றோம். அனுபவங்கள் உடலுக்கும் பின் உள்ளத்திற்கும் பின்னர் உயிருக்கும் களைப்பை ஏற்படுத்துகின்றன.

உடலின் களைப்பு சாய் நாற்காலியையும் (Easy Chair), உள்ளத்தின் களைப்பு ஆன்மீகத்தையும், உயிரின் களைப்பு பிறவியின் முடிவையும் நாடுகின்றன.

*திருமதி. இராஜினி தேவராஜன்*
*தெஹிவளை*

# நலங்களெல்லாம்தரும் துர்கை



## துர்கை

நலங்களெல்லாம் தரும் துர்கை துர்கை
நன்மைகள் அள்ளித்தரும் பொற்கை பொற்கை
*-என்றும் நலங்களெல்லாம்*

### சரணம்-1

அன்பெனும் ஆணையால் ராகுவை ஆளுவாய்
அவள் வடிவான அன்பன் கேதுவை அடக்குவாய்
அன்பின் காட்டுவாள் அருளினை ஊட்டுவாள்
அன்பரின் வாழ்வினிலே அல்லலை ஓட்டுவாள்
*-என்றும் நலங்களெல்லாம்*

### சரணம் - 2

ராகுவின் காலத்தில் நெய்விளக்கேற்றினால்
நேர்த்தியுடன் நினைந்து வணங்கியே பாடினால்
பொய்மையை போக்குவாள் பொற்கரம் நீட்டுவாள்
பொன், பொருள், அருள் தந்து பூஜையை போற்றுவாள்.
*-என்றும் நலங்களெல்லாம்*

### சரணம் - 3

மாலையை சூட்டுவாள் மங்களம் பாடுவாள்
மஞ்சளும் குங்குமமும் பூ நிலைத்திட அருளுவாள்
மலடதை நீக்குவாள் மழலையாய் மலருவாள்
வேண்டிடும் வேலை தந்து வெற்றியை நாட்டுவாள்.
*-என்றும் நலங்களெல்லாம்*

A portrait is a Perfect Gift

# PORTRAIT IN PASTEL / PENCIL


by YOGA



Free Framing

Ideal for: •Weddings •Birthdays •Retirements •Special events & much more..











**FLEX Graphic** 4, IBC Road, Wellawatte. **Call: 0777-614-186**

**Email : flexvijay@sltnet.lk**




# வர்ணம் தீட்டுங்கள்!



BECOME A PROFESSIONAL
GRAPHIC DESIGNER
Software/Technologies
CorelDRAW Adobe Illustrator Photoshop
COURSE FEE
Rs. 4,000/-
TODAY
Learn from Graphic Expert
flex Institute
Step Towards a Bright Future
4, IBC Road, Wellawatte, Colombo 6.
Hotline: 0777 761 346
Tel :2364157 Fax : 2501766

## இடைவெளியை நிரப்புங்கள்!

1. ஔவை இயற்றியது

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கொ | | றை | | ந் | | ன் |

2. சிவனுக்குரிய இரவு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வ | | த் | | ரி |

3. இறைவனின் ஐந்தொழில்களில் ஒன்று

| | | | |
|---|---|---|---|
| அ | | ள | |

4. துர்காதேவியின் வெற்றித் திருநாள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வி | | ய | | ச | |

5. குழந்தை உயிர்பிழைக்க கம்பன் பாடிய படலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | க | | ச | | ம் |


# Study & Work in Singapore Hotel Management



**Learn & Earn up to Rs. 70,000/- Month**

அடிப்படை தகைமை O/L மட்டும்

## Study & Work in Malaysia



Business / Tourism Management / Accounting / Interior Design

## STUDY IN CANADA

அடிப்படை தகைமை O/L மட்டும்

## Study in UK

**UK VISA - Study / Visit / Tourist / Business Visit / Special Occasions**

## GRAPHIC DESIGNING

COURSE FEE Rs. 4,000/-

flex Institute
*Step Towards a Bright Future*

4, IBC Road, Wellawatte, Colombo 6.
**Hotline: 0777 761 346**
Tel : 2364157 Fax : 2501766
www.flexinstitute.lk

# CHEAP AIR FARES



## R E T U R N

| | | | |
|---|---|---|---|
| CHENNAI | RS. 21,809 | DUBAI | RS. 47,140 |
| TRICHY | RS. 25,409 | LONDON | RS. 91,735 |
| MADURAI | RS. 20,011 | ROME | RS. 68,178 |
| BOMBAY | RS. 33,411 | PARIS | RS. 71,112 |
| DELHI | RS. 40,731 | FRANKFURT | RS. 70,414 |
| KOCHI | RS. 24,693 | ZURICH | RS. 98,561 |
| BANGALORE | RS. 28,175 | AMSTERDAM | RS. 93,035 |
| SINGAPORE | RS. 30,307 | MELBOURNE | RS. 95,512 |
| MALAYSIA | RS. 27,623 | SYDNEY | RS. 97,267 |
| BANGKOK | RS. 29,862 | BRISBANE | RS. 92,997 |
| NARITA | RS. 60,125 | PERTH | RS. 92,749 |
| SHANGHAI | RS. 47,968 | AUCKLAND | RS. 108,262 |
| KUWAIT | RS. 43,165 | NEW YORK | RS. 103,826 |
| MALE | RS. 17,500 | TORONTO | RS. 154,987 |

ALL FARES ARE SUBJECT TO AVAILABILITY

## T O U R P A C K A G E S

**CHENNAI** 3 Days / 2 Nights **Rs. 7,990**
* Per Person on Twin Sharing * A/C Transport
* Breakfast * Accommodation

**SINGAPORE** 4 Days / 3 Nights **Rs. 25,000**
* Per Person on Twin Sharing * A/C Transport
* Breakfast * A/C Accommodation * City Tour

**MALAYSIA** 4 Days / 3 Nights **Rs. 16,000**
* Per Person on Twin Sharing * A/C Transport
* Breakfast * A/C Accommodation * City Tour

## DO YOU NEED A VISA ?

**UK, SINGAPORE, MALAYSIA**

Student / Visit / Tourist / Business Visit / Special Occasions

We Fill Up UK, India Visa Forms

Travel Insurance

Worldwide Hotel Reservation

flex Travels & Tours
*Total Travel Solution*

4, IBC Road, Colombo 06. Tel/Fax: 11 2501766 www.flex-travels.com
**Hotlines: 0775 952357, 0773 520383, 0777 761346**

# பஞ்சாங்கம்

| பெப்ரவரி | | தை | | | |
|---|---|---|---|---|---|
| 01 | ஞாயிறு | 18 | ராகு 5.06 - 6.36<br>சுப 9.36 -11.06<br>எம 12.36 - 2.06<br>குளி 3.36 - 5.06 | வ.பி. திரயோதசி பி.இ 2.20,<br>திருவாதிரை பி.ப 5.39<br>சித்தம் | பிரதோஷ விரதம் |
| 02 | திங்கள் | 19 | ராகு 8.06 - 9.36<br>சுப 12.36 - 2.06<br>எம 11.06 -12.36<br>குளி 2.06 - 3.36 | வ.பி. சதுர்த்தசி பி.இ 3.38<br>புநர்பூசம் மு.இ 7.18<br>அமிர்தசித்தம் | |
| 03 | செவ்வாய் | 20 | ராகு 3.35 - 5.05<br>சுப 11.05 -12.35<br>எம 9.35 -11.05<br>குளி 12.35 - 2.05 | பூரணை பி.இ 5.17<br>பூசம் மு.இ 9.20 சித்தம், | பூரணை விரதம்,<br>தைப்பூசம் |
| 04 | புதன் | 21 | ராகு 12.35 - 2.05<br>சுப 5.05 - 6.35<br>எம 8.05 - 9.35<br>குளி 11.05 -12.35 | தே.பி. பிரதமை முழுவதும்<br>ஆயிலியம் மு.இ 11.41,<br>மரண | |
| 05 | வியாழன் | 22 | ராகு 2.05 - 3.35<br>சுப 8.05 - 9.35<br>எம 6.35 - 8.05<br>குளி 9.35 -11.05 | தே.பி. பிரதமை கா 7.16<br>மகம் பி.இ 2.13<br>அமிர்தசித்தம் | |
| 06 | வெள்ளி | 23 | ராகு 11.05 -12.35<br>சுப 6.35 - 8.05<br>எம 3.35 - 5.05<br>குளி 8.05 - 9.35 | தே.பி. துதியை மு.ப 9.22<br>பூரம் பி.இ 4.46,<br>சித்தம் | |
| 07 | சனி | 24 | ராகு 9.35 -11.05<br>சுப 3.35 - 5.05<br>எம 2.05 - 3.35<br>குளி 6.35 - 8.05 | தே.பி. திருதியை<br>மு.ப 11.27 உத்தரம்<br>முழுவதும் மரண | சங்கடஹரசதுர்த்தி |
| 08 | ஞாயிறு | 25 | ராகு 5.05 - 6.35<br>சுப 9.35 -11.05<br>எம 12.35 - 2.05<br>குளி 3.35 - 5.05 | தே.பி சதுர்த்தி<br>பி.ப 1.22 உத்தரம்<br>கா 7.13 | |
| 09 | திங்கள் | 26 | ராகு 8.04 - 9.34<br>சுப 12.34 - 2.04<br>எம 11.04 -12.34<br>குளி 2.04 - 3.34 | தே.பி. பஞ்சமி பி.ப 2.58<br>அத்தம் மு.ப 9.23<br>சித்தம் | |
| 10 | செவ்வாய் | 27 | ராகு 3.34 - 5.04<br>சுப 11.04 -12.34<br>எம 9.34 -11.04<br>குளி 12.34 - 2.04 | தே.பி. ஷஷ்டி பி.ப 4.09<br>சித்திரை மு.ப 11.10<br>சித்தம் | |
| 11 | புதன் | 28 | ராகு 12.34 - 2.04<br>சுப 05.04 -06.34<br>எம 06.04 -09.34<br>குளி 11.04 -12.34 | தே.பி. ஸப்தமி பி.ப 4.49<br>சுவாதி பி.ப 12.29 சித்தம் | |
| 12 | வியாழன் | 29 | ராகு 2.04 - 3.34<br>சுப 8.04 - 9.34<br>எம 6.34 - 8.04<br>குளி 9.34 -11.04 | தே.பி. அட்டமி பி.ப 4.59<br>விசாகம் மரண பி.ப 1.17<br>அட்டமி - நவமி | |
| பெப்ரவரி | | மாசி | | | |
| 13 | வெள்ளி | 01 | ராகு 11.04 -12.34<br>சுப 6.34 - 8.04<br>எம 3.34 - 5.04<br>குளி 8.04 - 9.34 | தே.பி நவமி பி.ப 4.36<br>அனுசம் சித்தம் பி.ப 1.38<br>நவமி பி.ப 4.36 வரை | |
| 14 | சனி | 02 | ராகு 9.33 -11.03<br>சுப 3.33 - 5.03<br>எம 2.03 - 3.33<br>குளி 6.33 - 8.03 | தே.பி. தசமி பி.ப 3.46<br>கேட்டை பி.ப 1.29<br>சித்தம் | |
| 15 | ஞாயிறு | 03 | ராகு 5.03 - 6.33<br>சுப 9.33 -11.03<br>எம 12.33 - 2.03<br>குளி 3.33 - 5.03 | தே.பி ஏகாதசி பி.ப 2.31<br>மூலம் பி.ப 12.55<br>அமிர்தசித்தம் | ஏகாதசி விரதம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 16 | திங்கள் | 04 | ராகு 8.03 - 9.33<br>சுப 12.33 - 2.03<br>எம 11.03 -12.33<br>குளி 2.03 - 3.33 | தே.பி. துவாதசி பி.ப 12.55<br>பூராடம் சித்தம் ந.ப 12.01 | பிரதோஷ விரதம் |
| 17 | செவ்வாய் | 05 | ராகு 3.33 - 5.03<br>சுப 11.03 -12.33<br>எம 9.33 -11.03<br>குளி 12.33 - 2.03 | தே.பி. திரயோதசி<br>மு.ப 11.03 உத்தராடம்<br>மு.ப 10.49 சித்தம் | மஹாசிவராத்திரி<br>விரதம் |
| 18 | புதன் | 06 | ராகு 12.32 - 2.02<br>சுப 5.02 - 6.32<br>எம 8.02 - 9.32<br>குளி 11.02 -12.32 | தே.பி சதுர்த்தி கா 8.54<br>திருவோணம் சித்தம்<br>மு.ப 9.22 | அமாவாசை<br>விரதம் |
| 19 | வியாழன் | 07 | ராகு 2.02 - 3.32<br>சுப 8.02 - 9.32<br>எம 6.32 - 8.02<br>குளி 9.32 -11.02 | அமாவாசை கா 6.37<br>பிரதமை பி.இ 4.14 அவிட்டம்<br>சித்தம் கா 7.46 சதயம்<br>மரண பி.இ 6.07 | |
| 20 | வெள்ளி | 08 | ராகு 11.02 -12.32<br>சுப 6.32 - 8.02<br>எம 3.32 - 5.02<br>குளி 8.02 - 9.32 | வ.பி துதியை பி.இ 1.55<br>பூரட்டாதி பி.இ 4.30 | |
| 21 | சனி | 09 | ராகு 9.31 -11.01<br>சுப 3.31 - 5.01<br>எம 2.01 - 3.31<br>குளி 6.31 - 8.01 | வ.பி. திருதியை<br>மு.இ 11.40 உத்தரட்டாதி<br>சித்தம் பி.இ 2.59 | |
| 22 | ஞாயிறு | 10 | ராகு 5.01 - 6.31<br>சுப 9.31 -11.01<br>எம 12.31 - 2.01<br>குளி 3.31 - 5.01 | வ.பி சதுர்த்தி மு.இ 9.36<br>ரேவதி பி.இ 1.38<br>அமிர்தசித்தம் | சதுர்த்தி விரதம் |
| 23 | திங்கள் | 11 | ராகு 8.00 - 9.30<br>சுப 12.30 - 2.00<br>எம 11.30 -12.30<br>குளி 2.00 - 3.30 | வ.பி பஞ்சமி மு.இ 7.45<br>அச்சுவினி சித்தம்<br>பி.இ 12.33 | |
| 24 | செவ்வாய் | 12 | ராகு 3.30 - 5.00<br>சுப 11.00 -12.30<br>எம 9.30 -11.00<br>குளி 12.30 - 2.00 | வ.பி ஷஷ்டி மா 6.14<br>பரணி மு.இ 11.46 சித்தம் | |
| 25 | புதன் | 13 | ராகு 12.29 - 1.59<br>சுப 4.59 - 6.29<br>எம 7.59 - 9.29<br>குளி 10.59 -12.29 | வ.பி ஸப்தமி மா. 5.05<br>கார்த்திகை மு.இ 11.23<br>அமிர்தசித்தம் | கார்த்திகை<br>விரதம் |
| 26 | வியாழன் | 14 | ராகு 1.59 - 3.29<br>சுப 7.59 - 9.29<br>எம 6.29 - 7.59<br>குளி 9.29 -10.59 | வ.பி அட்டமி பி.ப 4.24<br>ரோகிணி மு.இ 11.28<br>மரண | |
| 27 | வெள்ளி | 15 | ராகு 10.59 -12.29<br>சுப 6.29 - 7.59<br>எம 3.29 - 4.59<br>குளி 7.59 - 9.29 | வ.பி நவமி பி.ப 4.11<br>மிருகசீரிடம் ந.இ 12.01<br>சித்தம் கரிநாள் | |
| 28 | சனி | 16 | ராகு 9.28 -10.58<br>சுப 2.28 - 4.58<br>எம 1.58 - 3.28<br>குளி 6.28 - 7.58 | வ.பி தசமி பி.ப 4.28<br>திருவாதிரை சித்தம்<br>பி.இ 1.02 | |

## மனிதனின் சிந்தனைக்கு...

உனது உடைமை, அந்தஸ்து, கௌரவம், புலமை, ஜாதி இவற்றை எண்ணி இறுமாப்பென்றும் கொள்ளாதே. அவை எக்கணமும் அழியலாம்.

# பெப்ரவரி மாதத்திற்கான விரதங்கள்

(தை / மாசி)



| பெப்ரவரி | தை | | |
|---|---|---|---|
| 01 | 18 | ஞாயிறு | - பிரதோஷ விரதம் |
| 03 | 20 | செவ்வாய் | - பூரணை விரதம், தைப்பூசம் |
| 07 | 24 | சனி | - சங்கடஹரசதுர்த்தி |
| | மாசி | | |
| 15 | 03 | ஞாயிறு | - ஏகாதசி விரதம் |
| 16 | 04 | திங்கள் | - பிரதோஷ விரதம் |
| 17 | 05 | செவ்வாய் | - மஹாசிவராத்திரி விரதம் |
| 18 | 06 | புதன் | - அமாவாசை விரதம் |
| 22 | 10 | ஞாயிறு | - சதுர்த்தி விரதம் |
| 25 | 13 | புதன் | - கார்த்திகை விரதம் |


## ஆலயகோபுர (Neon Signs) மின்னொளி அலங்காரம்






எம்மால் நிர்மாணிக்கப்பட்ட மின்னொளி மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் தேவஸ்தானம்*

எமது கைதேர்ந்த மின் தொழில்நுட்பவியலாளர்களின் கைத்திறனில் உங்கள் ஆலய கோபுரங்களுக்கு மின்னொளி அலங்காரம் செய்து தரப்படும்.

flex GRAPHIC

4, IBC Road, Wellawatte.
Tel: 0777 614 186

## ஆன்மீக வினாவிற்கான விடையை கூறி பரிசு பெறுங்கள்!



பன்னிரு திருமுறைகளில் எட்டாம் திருமுறையாகத் திகழ்வது எது?

- திருவிசைப்பா
- திருவாசகம்
- திருப்பல்லாண்டு

(1st Feb. -13th Feb.)

Call Now & Win பக்தி பாடல்கள் Audio CD

Call Monday - Friday From 9am - 5pm.

Flex Publications 0778 335 552

CD WORLD MUSIC CENTRE

முன்னணி பாடகர்கள் பாடிய பக்திப்பாடல்கள் இங்கு கிடைக்கும்

No. 298, Galle Road, Wellawatte.





flex அருள்

## வாசகர்கள், அன்பர்கள், அபிமானிகளுக்கு,

நீங்கள் எமது Flex அருள் இதழினை மாதம் தவறாமல் வாங்கி வாசிப்பதை முன்னிட்டு நன்றிகளைத் தெரிவிக்கும் இவ்வேளை பரந்த உள்ளம் கொண்ட வாசகர்கள், அன்பர்கள், அபிமானிகள் அனைவரும் வரிய குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்கு பொருளுதவி செய்ய முன்வருமாறும் இவ் உதவியானது பாடசாலை சீருடையாகவோ, எழுத்துக் கொப்பிகளாகவோ, புத்தகப்பைகளாகவோ அல்லது பாதணிகளாகவோ இருப்பது விரும்பத்தக்கது என்பதை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு
P.விஜய்
நிர்வாக இயக்குனர் Flex Group

*-நல்லதை செய்வதே இறைபணி*


2015
ராசி
பலன்கள்

# பெப்ரவரி மாதத்திற்கான ராசிபலன்

## மேடம்



தைரியம் மிகுந்துவிடும். தன்னம்பிக்கை கூடிவிடும். துணிச்சலுடன் செயல் தொடங்கித் தொடர் வெற்றி பெறுவீர்கள். அணிகலன்கள் வாங்கிடலாம். அங்குமிங்கும் போய்வரலாம். வணிகத்திலே மேன்மையுண்டு. வைத்தியச் செலவும் வந்திடலாம். சூரியன் 12-ல் பிரவேசிப்பதால் தேவையற்ற அலைச்சலால் திகைக்கின்ற நிலைவரலாம். பாவையர்கள் மூலமாகப் பகை மூள வாய்ப்புண்டு. 60% வரை அடையலாம் நன்மைகளை

சாதகமான தேதிகள்: 1, 4, 5, 8, 11, 14, 16, 21, 26, 28.

## ரிஷபம்



சூரியன், புதன், சுக்கிரன், செவ்வாய் ஆகிய நால்வருமே சிறப்பாக வலம் வருவதால் மிக்க நலம் தரும் மாதமிது. எடுத்த காரியங்கள் இன்னலின்றி நிறைவேறும். கொடுக்கல் வாங்கலெல்லாம் குறைவின்றி நடந்திருக்கும். அடுத்தவர்கள் உங்கள் அருமையினை உணர்வார்கள். சிறப்பான மாதமிது. ஒரு திருப்பம் வரும் வாழ்வினிலே. 70% வரை அடையலாம் நன்மைகளை

சாதகமான தேதிகள்: 3, 6, 10, 13, 15, 17, 22, 28.


## மிதுனம்



சூரியன் நன்னிலையில் சஞ்சரிப்பதால் ஆயிரம் நன்மை வரும். அரசாங்க உதவி வரும். கோயில் குளங்களுக்குக் கொட்டிக் கொடுப்பீர்கள். தாய் வழியில் லாபம் வரும். நோயில் கிடந்தோரும் நொடிப் பொழுதில் எழுந்திடுவர். தீயில் விழுந்த பஞ்சைப் போல தீமையெல்லாம் தீய்ந்து விடும். பாயும் நதி போலப் பலப்பல நன்மைகள் உங்களைத் தேடி வரும். 75% வரை ஏற்றங்கள் கிட்டுமென்பேன்.

சாதகமான தேதிகள்: 3, 5, 8, 13, 15, 17, 18, 21, 25, 26.

## கடகம்



இந்தப் பெப்ரவரி மாதம் பெருமை தரும் மாதமென்பேன். எதிரிகளை வெல்வீர்கள். ஏற்றம் பல பெறுவீர்கள். உதிரிகளாய்க் கிடந்த பொருளும் உபயோகம் ஆகிவிடும். மதியூகத்தால் மகத்துவங்கள் அடைவீர்கள். நிதி மிகவும் அதிகரிக்கும். நிம்மதியும் பெருகிவிடும். ஜதி தாளம் தவறாமல் வாழ்க்கையென்னும் நடனத்தை வனப்புடனே ஆடிடுவீர். விதி உமக்கு எதிராக விரிக்கலாம் வலையை! ஆனால் மதி கொண்டு வென்று மன்னவன்போல் வலம் வருவீர். 60% வரை அடையலாம் மேன்மைகளை!

சாதகமான தேதிகள்: 2, 7, 8, 10, 15, 21, 22, 24, 28.

## சிம்மம்



இந்த மாதம் சூரியனின் சஞ்சாரம் சரியில்லை. அதனால், பலவிதக் குழப்பங்களுக்கும் பிரச்சினைகளுக்கும் நீங்கள் உள்ளாக நேரிடலாம். பேசும் பேச்சில் மிகவும் கவனமாக இருங்கள். செவ்வாய் உகந்த இடத்தில் உலவுவதால், தன வரவு உண்டு. தகுதி மிக்கோர் நட்பு வரும். உங்கள் இனத்தவர்கள் முன் உங்கள் மரியாதை உயரும்படியான சம்பவம் நடக்கும். 55% வரை நன்மைகளை எதிர் பார்க்கலாம்.

சாதகமான தேதிகள்: 2, 14, 15, 16, 18, 23, 25, 28.

# பெப்ரவரி மாதத்திற்கான ராசிபலன்

**கன்னி**



பெப்ரவரி மாதமிது பெருமை தரும் மாதமென்பேன். மேன்மை பல அடைந்திடுவீா. மேலோரின் தொடர்பு கிட்டும். ஆன்ம பலம் அதிகரிக்கும். அரசாங்க உதவி கிட்டும். வான் வரைக்கும் உங்கள் புகழ் வளர்ந்து விடும். தேன் போல இனிமை வரும் செல்லும் திசையெல்லாம்! மான் போல மகிழ்ச்சியிலே துள்ளிக் குதித்திடுவீா. நான் என்ற அகந்தையுள்ளோரை நாசூக்காய் வெல்வீர்கள். ஊனடலை வருத்திச் செய்த பணிக்கெல்லாம் உயர்வான பலன் கிட்டும். வீணான அலைச்சலுண்டு! விரையச் செலவும் உண்டு. இம்மாதத்திற்கும் ஒரு 75 மதிப்பெண் போட்டுக் கொள்ளலாம்.

சாதகமான தேதிகள்: 1, 3, 5, 8, 14, 18, 21, 23, 27.

**துலாம்**



பெரும்பாலான கிரகங்கள் அனுகூலமாகவே சஞ்சரிக்கின்றன. அதிலும் சூரியனின் சாதகமான சஞ்சாரம் அமோக பலன்களுக்கு வரவேற்புத் தோரணம் கட்டும் அமைப்பாகும். எதிரிகளை வெல்வீர்கள். ஏற்றம் பல பெறுவீர்கள். உதிரிகளாய்க் கிடந்த பொருளும் உபயோகம் ஆகிவிடும். மதியூகத்தாலே மகத்துவங்கள் அடைந்திடுவீா. 60% வரை அடையலாம் நன்மைகளை!

சாதகமான தேதிகள்: 2, 3, 7, 12, 14, 18, 23, 25, 28.

**விருச்சிகம்**



சுக்கிரன், புதன் ஆகிய இரு கிரகங்களும் மேன்மையாய்ச் சஞ்சரிக்கின்றன. ஆதலால், இந்த இரண்டாவது மாதத்தையும் இனிய மாதமென்பேன். தொய்வடைந்த செய்தொழிலைத் தூக்கி நிறுத்திடலாம். நலிவடைந்த ஆரோக்கியத்தை நல்விதமாய் மாற்றிடலாம். பொலிவு பெற்றிடலாம். பொன் பொருள்கள் வாங்கிடலாம். தெளிவு அடைந்திடலாம். தேசம் பல சென்றிடலாம். வலிமை கூடிவிடும். வாய்ப்புப் பல தேடி வரும். 65% வரை அருமையான மாதமிது.

சாதகமான தேதிகள்: 2, 7, 9, 10, 15, 17, 20, 21, 27.

**தனுசு**



புதனும் சுக்கிரனும் சாதகமாக உலவுவதால் பிப்ரவரி மாதம் பெருமை மிகுமாதமென்பேன். தோகையரால் சுகம் பெறுவீா. தொகையொன்று கைக்கு வரும். வேகமாய்ச் செயல்பட்டு வெற்றி காண்பீர்கள். மோகம் தீர்ந்துவிடும். முயற்சி பலிதமாகும். தேகம் நலமடையும். திருத்தலங்கள் தரிசிப்பீர்கள். ஈகை பல செய்து இன்பம் அடைவீர்கள். 65% வரை அடையலாம் அனுகூலங்களை!

சாதகமான தேதிகள்: 4, 6, 10, 13, 16, 17, 21, 25, 28.

**மகரம்**



மூன்றுக்கு மேற்பட்ட கிரகங்கள் முத்தாய்ப்பாய் நன்னிலையில் உலவுவதால் பெப்ரவரி மாதத்தைப் பிரமாதம் என்று சொல்வேன். தொழிலிலே மேன்மையுண்டு. தொல்லையெல்லாம் தீர்ந்துவிடும். எழிலுடனே பேசி ஏற்றங்கள் கண்டிடுவீா. வழி கிடைத்துவிடும். வாய்ப்புக் கிட்டிவிடும். ஒளி பெற்றிடுவீா. ஓங்கி வளர்ந்திடுவீா. உங்கள் வாழ்நாளில் வெகு நாளாக இதயத்தின் அடியில் பூட்டி வைத்திருந்த ஆசையொன்று இம்மாதம் நிறைவேறும். 70% வரை அனுகூலங்கள் உண்டென்பேன்.

சாதகமான தேதிகள்: 3, 4, 10, 11, 13, 15, 18, 19, 22, 27.

# பெப்ரவரி மாதத்திற்கான ராசிபலன்

**கும்பம்**



தொடர்ந்து சுக்கிரனும் புதனும் சாதகமாகச் சஞ்சரிப்பதால் இந்த இரண்டாவது மாதமும் இன்பமிகு மாதம்தான். இதமான சம்பவங்கள் இஷ்டம்போல் நடந்தேறும். பதமாய்ப் பேசிப் பல நன்மை அடைவீர்கள். ஆடை, அணிகலன்களின் சேர்க்கை உண்டாகும். பழைய நண்பர்களையோ, வெகுகாலம் பார்க்க முடியாத உறவினர்களையோ சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டுச் சந்தோஷம் காண்பீர்கள். சூரியன், செவ்வாய் ஆகிய இரு கிரகங்களின் சஞ்சாரமும் சரியில்லை என்பதால் சற்று அலைச்சலும், உடல் அசௌகர்யமும் ஏற்படலாம். வாக்கு வாதத்தால் வம்பு வரலாம். கவனம் தேவை. 65% வரை நன்மைகளை எதிர்பார்க்கலாம்.

சாதகமான தேதிகள்: 1, 4, 7, 10, 18, 21, 25, 27.

**மீனம்**



சூரியனின் சஞ்சாரம் சரியில்லை. எனவே உடல்நலத்தில் கவனம் தேவை. வீண் அலைச்சல்களும் விரையச் செலவுகளும் வாக்குவாதங்களால் மன உளைச்சல்களும் உண்டாகலாம். ஆனால் சுக்கிரனார் சக்கரம் போல் நன்னிலையில் சுழல்வதால் புதியதொரு நபராலே புதுப்பாதை கண்டிடுவீர். இதயம் மகிழும்படி இதமான சம்பவங்கள் நடந்தேறும். எதையும் சாதிப்பீர். ஏராளம் சம்பாதிப்பீர்.

சாதகமான தேதிகள்: 2, 4, 5, 17, 20, 21, 25, 26, 27.


## பாடசாலை மாணவ, மாணவிகளுக்கான ஆன்மிக கேள்வி-பதில் போட்டி!




போஜராஜனின் அரசவையில் தலைசிறந்த புலவன் யார்?

- கம்பன்
- காளிதாசன்
- சடையப்பவள்ளல்

1st Feb.-13th Feb.
Call Monday-Friday
From 9 am - 5pm

**Call Now & Win School Uniform**

**FLEX Publications - 0778 335 552**

## மயூராபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோவிலில் வீற்றிருக்கும் அம்மனுக்கு ஓர் சிற்பக் கற்கோவில்





அம்பாள் அடியார்களே,

ஸ்ரீபத்திரகாளி அம்மன் கோவில் திருப்பணிகள் அன்னையின ஆசியுடனும் அடியார்களாகிய உங்களின் ஆதரவுடனும், இத் திருப்பணி வேலைகள் ஆரம்பித்துள்ளன. இத்திருப்பணி வேலைகளுக்காக ஒரு திருப்பணி நிதியை ஆரம்பித்துள்ளோம். இத்திருப்பணிக்கு தங்களால் இயன்ற நிதி உதவியினை வழங்கி இக்கைங்கரியத்தில் தாங்களும் இணைந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். அத்துடன் தங்களுக்கும் தங்கள் குடும்பத்திற்கும் அன்னையின் அருள் என்றும் கிட்ட பிரார்த்திக்கின்றோம்.

நன்றி
ஆலய பரிபாலன சபை.

*Account Details:*
Name: Sri Bathrakali Ambal Temple
Bank: Hatton National Bank, Wellawatte.
A/C: 009020584846

*Contact us:*
Mayurapathu Sri Bathrakali Amman Temple
Tel: 011 2500840, 2593509

*More Information:* P. Sunderalingam: 0773 600 666 | M. Murugaiya: 0774 907 387 | S.B Rajan : 0777 366 102

# பக்திக் கதைகள்

-யோகா



## "இந்த" பிடிவாதம் நமக்கு வேண்டும்!

கங்கையில் ஒரு துறவி நீராடிக் கொண்டிருந்தார். அப்போது வெள்ளத்தில் தேள் ஒன்று தத்தளித்துக் கொண்டிருந்தது. நீரில் மூழ்கி உயிர் போய் விடுமே என்று வருந்திய துறவி அதைக் காப்பாற்ற முயன்றார். அதனைத் தன் கையில் தூக்கினார். கொடுக்கினால் அவரது கையைப் பதம் பார்த்தது தேள். வலி தாங்காமல் அலறியதோடு, தேளையும் ஆற்று வெள்ளத்திற்குள்ளேயே உதறி விட்டார். ஆனால் அவர் மனதில் இரக்க எண்ணம் மட்டும் அகலவில்லை. மீண்டும் தேளை கையில் எடுக்கும் முயற்சியில் இறங்கி தோற்றுப் போனார். மீண்டும் மீண்டும் அதே நிலை தொடர்ந்தது. கடைசி முயற்சியாகத் துறவி வலியைப் பொறுத்துக் கொண்டு தேளினைக் கரையில் தூக்கிப் போட்டார். அது உயிர் பிழைத்து ஓடியது. அப்போது அங்கிருந்தவர்கள் அனைவரும், "ஐயா! ஜீவ காருண்யம் துறவிக்குரிய நல்ல குணம் தான் என்றாலும், உங்களுக்கே ஆபத்தான விஷயத்தில் இறங்குவது நியாயம் தானா?" என்று கேட்டனர்.

"தேளின் குணம் கொட்டுவது தானே! அற்ப ஜந்துவான தேளே தன் குணத்தில் பிடிவாதமாக இருக்கும்போது, உயிர்களை எல்லாம் நேசித்து வாழ வேண்டும் என்பதில் துறவியான நானும் பிடிவாதமாக இருப்பது தானே சரி" என்றார் அவர். கருணை குணம் நிறைந்த அந்த துறவியின் கை பட்டதால் தேளும் மறுபிறவியில் மனிதனாகப் பிறந்து ஞானத்தை அடைந்தது.



# இளசுகளும் திறமைசாலிகள் தான்!

இளைஞனான கரிகாற்சோழன் சோழநாட்டின் மன்னராகவும், நல்ல நிர்வாகியாகவும் திகழ்ந்தான். நீதி வழங்குவதில் அவனுக்கு நிகர் அவனே.

ஒரு சமயம், இரண்டு முதியவர்கள் தங்கள் பிரச்னையைப் பேசித் தீர்க்க மன்னரின் உதவி நாடி வந்தனர். இளைஞனான கரிகாற்சோழனைக் கண்டதும் தங்கள் வழக்கினைத் தெவிக்காமல் மௌனம் காத்தனர்.

அனுபவசாலியால் மட்டுமே நல்ல தீர்ப்பு அளிக்க முடியும் என்பது அவர்களின் எண்ணமாக இருந்தது. அவர்களின் மனக் குறிப்பை அறிந்த கரிகாலன், "பெரியவர்களே! நாளை அரசவைக்கு வாருங்கள்! அனுபவம் மிக்க முதியவர் ஒருவர் நடுவராக இருந்து உங்களுக்கு நீதி வழங்குவார்", என்று சொல்லி அனுப்பி வைத்தான். அடுத்த நாள் காலையில் அரசவையில் முதிர்ந்த ஒருவர் சிம்மாசனத்தில் அமர்ந்திருந்தார். "இவரே சரியான தீர்ப்பு அளிப்பார் என்ற நம்பிக்கையுடன் முதியவர்கள் பிரச்னையை எடுத்துக் கூறினார். தீர விசாரித்த முதியவர் இருவரும் ஏற்கும் விதத்தில் நல்ல தீர்ப்பு அளித்தார். பின் தன் நரைமுடி, தாடி வேஷத்தைக் கலைத்து, தானே கரிகாற்சோழன் என்ற உண்மையைக் கூறினான்.


இளைஞர்களிலும் திறமைசாலிகள் இருக்கிறார்கள் என்பதை அறிந்தனர் முதியவர்கள்.




## இராஜ கோபுர திருப்பணி

கொழும்பு முகத்துவாரம் அருள்மிகு
ஸ்ரீ வெங்கடேஸ்வர மஹாவிஷ்ணு கோவில்

### 90 அடி உயரம் கொண்ட மஹா இராஜ கோபுரம்



அமைப்பதற்காகவும், **மஹாகும்பாபிஷேகம்** செய்வதற்காகவும் ஏறக்குறைய மொத்த செலவாக **ஒன்பது கோடி** ரூபாய் (9,00,00,000/=) தேவைப் படுகிறது. இந்தக் கைங்கரியத்திற்கு பக்த அடியார்கள் தங்களால் இயன்ற நிதியை காசாகவோ, காசோலையாகவோ, ஆலய காரியாலயத்தில் செலுத்தி ரசீது பெற்றுப் கொள்ளலாம். அல்லது உங்கள் நிதி உதவியை **Hatton National Bank - Pettah Branch (A/C No.007010303064)** ற்கு செலுத்தலாம். பொருட்களாக தர விரும்புபவர்கள் **சீமெந்து, கம்பி, மணல், கறுங்கல், மற்றும் பெயின்ட் ஆகியவற்றையும் மஹா இராஜ கோபுர திருப்பணி** வளர்ச்சிக்கு தந்துதவி ஸ்ரீ வெங்கடேஸ்வர மஹா விஷ்ணுவின் அருளைப் பெறுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
ஆலய அறங்காவலர்
100, கோவில் வீதி, மோதரை, கொழும்பு 15. தொலைபேசி. 0777 367 272, 0777 867 867

# கல்வியென்னும் ஒளிவிளக்கு



கல்வியே மனிதனுக்கு ஒளி தருவது. நாம் கல்விக்காக சரஸ்வதியை வணங்குவது போல, வடமாநிலங்களில் காளியை வணங்குவார்கள். உஜ்ஜைனி நகரில் வசதியான குடும்பத்தில் பிறந்த ஒருவன், படிப்பறிவற்ற காரணத்தால் ஆடு மேய்க்கும் தொழிலில் ஈடுபட்டான். அவ்வூரில் இருந்த ஆசிரியர் ஒருவரிடம், அந்த நாட்டு இளவரசி கல்வி கற்று வந்தாள். இளவரசி என்ற இறுமாப்பினால், அவள் ஆசிரியரை மதிக்கவில்லை. ஆத்திரமடைந்த ஆசிரியர், அவளுக்கு தக்க பாடம் கற்பிக்க முடிவெடுத்தார். தந்திரமாக ஆடு மேய்க்கும் இளைஞனுக்கு இளவரசியை மணம் முடிக்க ஏற்பாடு செய்து விட்டார்.

திருமணத்திற்குப் பின், இளவரசிக்கு உண்மை தெரிந்து விட்டது. ஆனாலும், அவள் கலங்கவில்லை. அவள் ஆணவம் மிக்கவள் தான்! என்றாலும், அவளுக்கு காளி மீது அபார பக்தி இருந்தது. தன் கணவன் சிறந்த அறிவாளியாக விளங்க வேண்டும் என வேண்டி விரதமிருந்தாள். காளியின் மூல மந்திரத்தை ஜெபித்து வரும்படி கணவனிடம் கூறினாள். அவனும் மந்திரத்தை தொடர்ந்து ஜெபித்து வந்தான். அவனது ஆழமான பக்தி கண்ட காளி உள்ளம் மகிழ்ந்தாள். நேரில் அவனுக்கு காட்சியளித்ததோடு, தன் திரிசூலத்தால் அவனுடைய நாவில் எழுதி அருள்புரிந்தாள். ஏதும் அறியாத அந்த ஆடு மேய்ப்பவன் எல்லாம் அறிந்தவனாகி, உலகம் போற்றும் மகாகவி காளிதாசராக மாறினார். போஜராஜனின் அரசவையில் தலைசிறந்த புலவராக விளங்கினார்.

## இடைவெளியை நிரப்புங்கள்!

1.கொன்றைவேந்தன் 2.சிவராத்திரி 3.அருளல் 4.விஜயதசமி 5.நாகபாசனம்


## கிடைக்கும் இடங்கள்

**ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி கோவில்**
359, காலி வீதி, கொழும்பு 04. 0773002238

**கந்தையா அன் கம்பனி**
357, காலி வீதி, கொழும்பு 04. 2503461
(அருள்மிகு ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயம் அருகில்)

**ஸ்ரீ மயூராபதி கோவில்**
17A, மயூரா பிளேஸ், கொழும்பு 05. 2500840

**ஸ்ரீ ஐஸ்வர்யலக்ஸ்மி திருக்கோவில்**
ரொக்ஸி கார்டன், வெள்ளவத்தை.

**ஸ்ரீ வெங்கடேஸ்வரர் விஷ்ணு கோவில்**
100, கோவில் வீதி, கொழும்பு 15. 0771739094

**பூபாலசிங்கம் புத்தகசாலை**
காலி வீதி, வெள்ளவத்தை 4515775

**ஸ்ரீ வரத விக்னேஸ்வரர் கோயில்**
ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம். 0776248780

**ஸ்ரீ தேவி கருமாரி அம்மன் கோயில்**
158, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு 13. 2472567

**ஸ்ரீ ஞானசக்தி பஞ்சமுக ஆஞ்சநேயர் ஆலயம்**
கலஹா

**CD World Music Centre**
298, காலி வீதி, வெள்ளவத்தை.

**World Communication**
298, காலி வீதி, வெள்ளவத்தை. 25042337

**Joy Glorious**
298 & 298B, காலி வீதி, வெள்ளவத்தை. 0774949961

**Areena**
116A, காலி வீதி, வெள்ளவத்தை. 2058033

**Windsor Bookshop**
372, காலி வீதி, வெள்ளவத்தை. 2589081

**Amma Food City**
331, செட்டியார் தெரு, கொழும்பு 11. 0777410472

**Ram Milk Bar**
206/1, காலி வீதி, வெள்ளவத்தை. 0772880829

**Flex Publications**
4, IBC Road, வெள்ளவத்தை. 0777555026

Flex அருள் இதழினை விற்பனை செய்யும் விற்பனை விநியோகஸ்தர்களுக்கு மனப்பூர்வமான நன்றிகள்!

இவ் இதழினை விற்பதற்கான விற்பனை விநியோகஸ்தர்கள் எம்மோடு தொடர்பு கொள்ளவும்.
Tel: 0777 614 186

# மௌனம்



ஒரு துறவி ஆற்றங்கரையில் அமர்ந்து தண்ணீர் ஓடும் அழகையே பார்த்துக் கொண்டு இருந்தார். இயற்கையில் ஈடுபட்டு மனம் ஒருமுகப்பட்டதால் மௌனத்தில் ஆழ்ந்தார். அந்த நேரம் இளைஞன் ஒருவன் வந்தான். கடவுளைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்ற தேடல் அவனுள் இருந்தது. "சுவாமி எனக்கு ஒரு சந்தேகம். கடவுள் என்பவர் யார் என்பதை உங்களால் சொல்ல முடியுமா?" என்று கேட்டான். துறவியோ அதைக் கண்டு கொள்ளாமல், தொடர்ந்து அமைதி காத்தார். கேள்வி அவரின் காதில் விழவில்லை என்பதை அவரின் மௌனம் உணர்த்தியது.


"சுவாமி! நான் சொல்வது உங்களின் காதில் விழவில்லையா?" என சத்தமாக கத்தினான். இப்போது துறவி வாய் திறந்தார். "கேள்விக்கான பதிலை சொல்லிவிட்டேனே!" என்றார்.

இளைஞனுக்கு கோபம்

"வாயே திறக்கவில்லை! பதில் சொல்லியாச்சு என்கிறீர்களே! துறவி பொய் சொல்லலாமா?" என்று சற்று கோபமாகவே கேட்டான்.

"மகனே! மௌனமே எனது பதில்" என்றார் துறவி.

இளைஞனோ, "இப்படி புதிர் போட்டு பேசினால் எப்படி புரியும்? தெளிவாகச் சொல்லுங்கள்," என்றான். "ஆன்மீகத்தின் ஒட்டுமொத்த பிழிவே மௌனம் தான். எங்கும் நிறைந்திருக்கும் கடவுளை வார்த்தைகளுக்குள் யாரும் அடக்க முடியாது. உனக்குள்ளே தேடிக் கண்டெடுக்க வேண்டிய பொக்கிஷம் அவர் மௌனமாக தியானத்தில் ஆழ்ந்து விடும் நேரத்தில் மட்டுமே அவரோடு உறவாட முடியும்," என்ற துறவி மீண்டும் மௌனத்தில் ஆழ்ந்தார்.



# கல்யாண சாப்பாடு

பக்தி மிக்க இளைஞர் நீலோபா பண்டரிபுரம் பாண்டுரங்கன் கோயில் அருகில் தம்புராவும் கையுமாக பண்டரிநாதனின் பாடல்களைப் பாடியபடி இருப்பார்கள். நல்ல குணவதி நீலோபாவுக்கு வாய்த்தாள். அவர்களுக்கு பெண் குழந்தை பிறந்தது. பெற்றோருக்குப் பின், விவசாயத்தில் கிடைத்த சொற்ப வருமானத்தில் காலம் சென்றது. கொடி போல பெண்ணும் வேகமாக வளர்ந்தாள். நகை ஏதும் சேர்க்கவில்லையே என்று நீலோபாவின் மனைவி வருத்தப்படுவாள்.

“எல்லாம் பாண்டுரங்கன் பார்த்துக் கொள்வான் என்பார் நம்பிக்கையுடன். அந்தப் பெண்ணுக்கு நல்ல இடத்தில் மாப்பிள்ளையும் அமைந்தது. முகூர்த்தநாள் குறித்தாகி விட்டது. சமையல், மேளம், பந்தல் என்று அனைவருக்கும் அச்சாரமாகப முன்பணம் கொடுத்தார். உறவினர்கள் ஒவ்வொருவராக வரத் தொடங்கி விட்டனர். ஆனால், சமையல்காரர்கள் மட்டும் கடைசி நிமிடம் வரை வரவே இல்லை என்ன செய்வதென தெரியாமல் நீலோபா திக்கு முக்காடினார்.

நீலோபாவும், மனைவியும் வாசலில் ஆட்களை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். “பாண்டுரங்கா! இது என்ன சோதனை!” என்று கண் கலங்கினார் நீலோபா. உறவினர்களை எப்படி சமாளிக்கப் போகிறோம் என்ற கவலையில் அழுகை பீறிட்டது.

அப்போது வீட்டை நோக்கி யாரோ ஒருவர் வேகமாக வருவது போலிருந்தது. கலைந்த கேசம், கசங்கிய வேட்டி, துண்டு அணிந்த படி இளைஞன் ஒருவன் வந்து நின்றான். அவன் நீலோபாவிடம், “ஐயா! உங்களைப் பார்த்தால் கல்யாண வீட்டுக்காரர் போல இருக்கு. எனக்கு சாப்பிட ஏதாவது கிடைக்குமா?” என்றபடி கைகளை நீட்டினான்.

“அப்பா... நானே சமையற்காரரைக் காணாமல் தவிக்கிறேன். இந்த நேரத்தில் உணவு கேட்கிறாயே...” என்றார் நீலோபா.

“ஐயா... நீங்க அனுமதித்தால் நானே விருந்துணவை நொடியில் தயாரிப்பேன்” என்றான் அவன். “தண்ணீரில் தத்தளிப்பவனுக்கு கிடைத்த மரத்துண்டு கிடைத்தது போல இருந்தது அவன் பேச்சு. துணிவுடன் சமைப்பதற்கு அனுமதித்தார். இளைஞன் ஒரு வேண்டுகோள் விடுத்தான். “சிறிது நேரத்திற்கு யாரும் சமையல் கட்டிற்குள் வரக்கூடாது. அதற்குள் உங்களுக்குத் தேவையான உணவு தயாராகி விடும்,” என்று சொல்லி விட்டுச் சென்றான்.

என்ன ஆச்சரியம்! முகூர்த்த வேலைகள் நடந்து கொண்டிருக்க, உணவும் தயாரானது. அனைவரும் வயிறார சாப்பிட்டுப் பாராட்டினர்.

திருமணச்சடங்கில் ஈடுபட்டிருந்த நீலோபா, நன்றியை தெரிவிக்க இளைஞனை தேடினார். அவனைக் காணவில்லை.

“மாயமாக இருக்கிறதே...” என்றபடி கோயிலை நோக்கி ஓடினார். கண்களையே நம்ப முடியவில்லை. இளைஞனின் கசங்கிய வேட்டியும், துண்டும் ரங்கனின் இடுப்பில் இருந்தது. அங்கே வந்தது பாண்டுரங்கனே என்பதை அறிந்து பக்தியுடன் கீர்த்தனைகள் பாடினார். பாண்டுரங்கனின் லீலையை அறிந்த அனைவரும் ஆச்சரியப்பட்டனர்.




ஜனவரி மாத FLEX அருள் JEYECHANDRANS கேள்வி பதில் போட்டியில் கேட்கப்பட்ட கேள்விக்கு "இணுவில்" என்ற சரியான விடையைக் கூறி குலுக்கல் முறையில் தெரிவான இல.74/2, கன்னாரத்தெரு, கொழும்பு 13யைச் சேர்ந்த திருமதி. மைதிலி டேயிவு அவர்களுக்கு JEYECHANDRANS வழங்கிய பட்டுப்புடவை ஒன்று FLEX GROUP நிர்வாக இயக்குனர் திரு.P.விஜய் அவர்களால் வழங்கப்பட்டது.

ஜனவரி மாத FLEX அருள் CD WORLD MUSIC CENTRE கேள்வி பதில் போட்டியில் கேட்கப்பட்ட கேள்விக்கு "கீதை நெறி" என்ற சரியான விடையைக் கூறி குலுக்கல் முறையில் தெரிவான இல.32, பொஸ்வல் பிளேஸ், வெள்ளவத்தையைச் சேர்ந்த செல்வி. திலூஷினி சிவகுமார் அவர்களுக்கு CD WORLD MUSIC CENTRE வழங்கிய AUDIO CD ஒன்று FLEX அருள் ஆசிரியர் கே. யோகேந்திரன் அவர்களால் வழங்கப்பட்டது. அருகில் FLEX GROUP நிர்வாக் இயக்குனர் திரு. P.விஜய் அவர்கள் காணப்படுகிறார்.







ஜனவரி மாத FLEX அருள் PETER STORES கேள்வி பதில் போட்டியில் கேட்கப்பட்ட கேள்விக்கு "மாணிக்கவாசகர்" என்ற சரியான விடையைக் கூறி குலுக்கல் முறையில் தெரிவான இல.4/20B, தலகொட்டுவ கார்டன்ஸ், நாரஹேண்பிட்டியைச் சேர்ந்த செல்வன். V.விதுர்ஷனுக்கு PETER STORES வழங்கிய SCHOOL UNIFORM ஒன்று FLEX GROUP நிர்வாக இயக்குனர் திரு. P.விஜய் அவர்களால் வழங்கப்பட்டது.

மார்ச் மாதத்திற்கான விளம்பரங்கள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது Flex Publications 0777 555 026



JEYECHANDRANS

The Art of Fashion

முகூர்த்தப் பட்டுப்புடவைகளுக்கு ராசியான ஒரே இடம்

CALL NOW &WIN SAREE



ஜனவரி மாத கேள்வி - பதில் போட்டியில்

**வெற்றியாளர்**

திருமதி. மைதிலி டேயிவு
கொழும்பு 13

இவ்வருடம் மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான பஞ்சரதபவனி நடைபெறும் திகதி, மாதம் என்ன?

- 10.02.2015
- 04.03.2015
- 03.03.2015

JEYECHANDRANS கேள்வி பதில் போட்டியில் கேட்கப்படும் கேள்விக்கு சரியான விடையை கூறி குலுக்கல் முறையில் வெற்றிபெறும் போட்டியாளருக்கு JEYECHANDRANS TEXTILE வழங்கும் பட்டுப்புடைவை பரிசாக வழங்கப்படும்.

**(1st Feb-13th Feb)**

**Contact:**

**077 833 5552**

**Flex Publications**

Call Monday - Friday From 9a.m - 5p.m


## February - 2015

| SUN | MON | TUE | WED | THU | FRI | SAT |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 + * | 4 + * | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |


**விளம்பரக் கட்டணங்கள்**

| | |
|---|---|
| முழுப்பக்கம் (வர்ணம்) | ரூபா 6,000/= |
| முழுப்பக்கம் (கறுப்பு, வெள்ளை) | ரூபா 4,000/= |
| ½ பக்கம் (வர்ணம்) | ரூபா 4,000/= |
| ½ பக்கம் (கறுப்பு, வெள்ளை) | ரூபா 3,000/= |
| 1 BOX (கறுப்பு, வெள்ளை) | ரூபா 500/= |
| 1வது, 2வது, 3வது அல்லது கடைசி இரு பக்கங்களைக் கொண்ட வர்ண விளம்பரம் | ரூபா 15,000/= |

மேலதிக விபரங்களுக்கு
அழையுங்கள்: 0777 614 186


## March - 2015

| SUN | MON | TUE | WED | THU | FRI | SAT |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 + * | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

Poya Day * Public Holiday + Mercantile Holiday ■ Bank Holiday

# இதுவரை வந்த இதழ்கள்!







எம்மை தொடர்புகொள்ள:
***Flex Publications***
04, IBC Road, Wellawatte,
Colombo 06.



flex அருள்

**சந்தா செலுத்துங்கள், அருள் உங்கள் முகவரிக்கே வந்துவிடும்!**

உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகியவற்றை குறிப்பிட்டு உரிய தொகையை பணமாக பதிவுத் தபாலில் (Registered Post) அனுப்பி வைக்க வேண்டும்.

| | |
|---|---|
| 6 மாதங்கள் | ரூ.500 |
| 1 ஆண்டு | ரூ.1000 |

அனுப்ப வேண்டிய முகவரி
P. Vijay - *Director*
**Flex Publications,**
04, IBC Road, Wellawatte,Colombo 06.
Tel: 0777 555 026


flex அருள்

# GET IT DELIVERD TO YOUR DOOR STEP

**Safty Check at your home when gas delivered**




## Wellawatte Gas Centre

36, Hampden Lane, Colombo 06.

**Hotline : 077 368 3070 | Contact : 2 367373 / 2 554648**

**www.wellawattegascentre.com**

# MALOLA

மாலோலா

பல் பொருள் அங்காடி

மிகவும் மலிவு விலைகளில்!



**இல. 18, ஸ்ரீ ராமநாதன் மாவத்தை, கொழும்பு 13.**
**(கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயம் எதிரில்)**

நிலையான செல்வம் வளமாக வாழ மாலோலா அன்புடன் அழைக்கின்றது. மங்கள வைபவங்களுக்கு ஏற்ற வகையில் பல பொருட்கள் இதோ உங்கள் முன் !!!

அனைத்து வகையான சுவாமி சிலைகள், வியாபார மற்றும் வீடுகளுக்கேற்ற வாஸ்துப் பொருட்கள், குத்து விளக்குகள் மற்றும் சமயம் சம்பந்தமான பொருட்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.



வாழ்வில் குறையாத செல்வத்திற்கு வலம்புரிச் சங்குகள்

MALOLA

உடனே வாருங்கள் வசந்தத்தை காணுங்கள் !!

HOTLINE
**0115 64 89 23**



## OUTDOOR WORKS

- Digital Name Boards • Sticker Boards • Light Box
- X Banner Printing • San Blast • Glass Sticker Pasting




flex GRAPHIC
THE LEADING DIGITAL HOUSE FOR ADVERTISING

Sri Lanka Entrepreneur of the Year 2007
Young Entrepreneur Award
(Western Province)

Our Services
• Designing Paper Advertisements • Brochures • Catalogues
• Annual Reports • Souvenirs • Logos • Letter Heads • Posters
• Leaflets • Hoardings • Digital Printing • Screen Printing
• Offset Printing • Pennants • Digital Name Boards • Light Boxes
and many more...

ISKCON

இல. 188, புதுச் செட்டித்தெரு, கொழும்பு 13ல்
பகவான் ஸ்ரீ கிருஷ்ணருக்கு அமைக்கப்படும்

# ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ண ஆலயம்



"பகவான் கிருஷ்ணருக்காக நிர்மாணிக்கப்படும் ஆலயத்திருப்பணியில் ஈடுபடும் ஒருவருக்கு ராஜசூய யாகம் மற்றும் அஷ்வமேத யாகம் செய்த பலன் கிட்டும்"
- (வாமன புராணம்)

கட்டிட நிர்மாணப்பணிகள் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன



## ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ண ஆலய திருப்பணி வேலைகளுக்கு 10 கோடி ரூபாவுக்கு மேல் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

மக்கள் தாங்களால் இயன்ற நிதியை பணமாகவோ, காசோலையாகவோ ஆலய அலுவலகத்தில் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளலாம். ஆலய திருப்பணிக்கு அனைவரும் ஒத்துழைப்பு நல்கி, ஆலய நிர்மாணப் பணிகள் விரைவில் பூர்த்தியடைய பகவானை வழிபடுவோமாக.

## ரூபா. 3,000/- ஒரு செங்கல்லுக்காக செலுத்தி

இல. 188, புதுசெட்டித்தெரு, கொட்டாஞ்சேனையில் நிர்மாணித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலய திருப்பணிக்கு உங்கள் பெயரை பதிவு செய்து கொள்ளுங்கள். செங்கல்லின் முன்புறம் உங்கள் பெயரும், மறுபுறத்தில் ஹரே கிருஷ்ண நாமமும் பதிவு செய்யப்படும். இதனால் ஆலய கட்டடத்தில் உங்கள் பெயரும் இரண்டறக் கலந்து என்றென்றும் நிலைத்திருக்கும்.




ஹட்டன் நெஷனல் வங்கியில் அல்லது கொமார்ஷல் வங்கியில் பணத்தை வைப்புச்செய்யலாம்

**Hatton National Bank, Kotahena**
**A/C Name : ISKCON**
**A/C No. : 207010000891**

**Commercial Bank, Kotahena**
**A/C Name : ISKCON Temple Fund**
**A/C No. : 1120017042**

ISKCON

**SRI SRI RADHA KRISHNA TEMPLE**
**INTERNATIONAL SOCIETY FOR KRISHNA CONSCIOUSNESS**
*Founder Acharya* His Divine Grace A.C. Bhaktivedanta Swami Prabhupada

No. 188, New Chetty Street,
Colombo 13, Sri Lanka.
Tel : 2433325 Fax : 2471099
Email : iskcon@slt.lk www.iskcon.lk

ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே




வத்தளை, மாபோல, இல. 607A, நீர்கொழும்பு வீதியில் இயங்கும் பக்திவேதாந்த சிறுவர் இல்லம் 'கோகுலம்' சிறுவர்களுக்கு அன்பும் அரவணைப்பும் நல்வாழ்வும் அளிக்கும் கருணை இல்லமாக இயங்கி வருகின்றது. இவர்களுக்கு சிறந்த கல்வியையும், நற்பழக்க வழக்கங்களையும் கற்பிக்கக்கூடிய வகையில் இந்த இல்லத்துடன் இணைந்த பாடசாலையும் இங்கு உண்டு. இவர்களின் நல்வாழ்வுக்கான சேவையில் தாங்களும் இணைந்துகொண்டு தங்களால் இயன்ற உதவிகளை வழங்கி இறைவன் அருளைப் பெற வேண்டுகின்றோம்.

**தற்போதைய சூழ்நிலையில் அவர்களைப் பராமரிக்க ஒரு நாளைக்கு ரூ. 25,000/- செலவாகின்றது.**

தங்களின் அல்லது தங்கள் பிள்ளைச் செல்வங்களின் பிறந்த தினம், தங்களின் திருமண நாள், உறவினர்களின் ஞாபகார்த்தம் போன்ற எந்த தினங்களிலும் நன்கொடைகளை வழங்கி இச் சிறார்களுக்கு உதவலாம்.

www.gokulam.com


**கருணை இல்லமாக இயங்கும் பக்திவேதாந்த சிறுவர் இல்லம்**

# கோகுலம்

*Help These Children for their better Future!*

**BHAKTIVEDANTA CHILDREN'S HOME GOKULAM**
No. 607A, Negombo Road, Mabola, Wattala.
Tel - Office : 011 2433325 Home : 011 2948398

## இஸ்கோன் கோசலா பசுக்கள் காப்பகம்



ஐயாயிரம் வருடங்களுக்கு முன்னர் பகவான் கிருஷ்ணா இப்புவியில் அவதரித்து மாடு மேய்க்கும் சிறுவனாகவே வாழ்ந்தார். மனிதர் மீது அன்பு காட்டுவது பசுக்களின் இயல்பு. பகவான் கிருஷ்ணாவும் அவற்றின் மீது அன்பு காட்டி அவற்றை பாதுகாத்தார். அதனை பின்பற்றியே கிருஷ்ண பக்திக் கழகம் உலகின் பல நாடுகளிலும் பசுக்களுக்கான காப்பகங்களை நடத்தி அவற்றை பாதுகாத்து பராமரித்து வருகின்றது.

கிருஷ்ண பக்திக் கழக இலங்கைக் கிளையும் வத்தளை மாபோலை இல. 44/88, கிறிஸ்து ராஜ மாவத்தையில் பசுக்கள் காப்பகமொன்றை நடாத்தி வருகின்றது. 1999ஆம் ஆண்டு ஆலயத்துக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட ஒரு பசுவுடன் ஆரம்பிக்கப்பட்ட இக் காப்பகத்தில் தற்போது பசுக்கள் மற்றும் காளைகள், கன்றுகள் என 40 க்கு மேல் உள்ளன.



இச்சேவைகளில் பங்குகொள்ள விரும்புகின்றவர்கள் தொடர்புகளுக்கு

**சர்வதேச கிருஷ்ண பக்திக்கழகம்**
இல. 188, புதுச்செட்டித்தெரு, கொழும்பு 13.
தொ.பேசி : 2433325 ஈ-மெயில் : iskcon@slt.lk
www.iskcon.lk

Founder :
His Divine Grace
A.C. Bhaktivedanta Swami
Prabhupada



Commercial Bank - Kotahena Branch • A/C Name : ISKCON • A/C No. : 1050669901

ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே




Published by Flex Publications. 4, IBC Road, Wellawatte. Tel: 0777 614 186